தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி

(தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்பதற்காக எழுதப்பட்ட புத்தகம்)

மூன்றும் பதிப்பு



கி. பெ. சி. வ. பிரகாசம்,

நிர்வாகி,

பாலகுருகுல வித்யாலயம்,

விருதுநகர்

1953

பதிப்புரிமை

விலை அணா 8

முதற்பதிப்பு 1951.
இரண்டாம் பதிப்பு 1952.
மூன்ரும் பதிப்பு 1953.

தே நோபிலி அச்சகம், கோ. புதூர், மதுரை

பொருளடக்கம்

பாடம்	விவரம்	பக்கம்

எழுத்துக்கள்

பாடம்	விவரம்	பக்கம்
1.	அ — வரி முதல் ம — வரி முடியவுள்ள 143 எழுத்துக்கள் (ஐந்து கோட்டில்)	1
2.	உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் (ஐந்து கோட்டில்)	2
3.	அ — வரி முதல் ம — வரி முடியவுள்ள 143 எழுத்துக்கள் (ஒரு கோட்டில்)	3

சொற்கள்

143 எழுத்துக்களில் சொற்கள்

பாடம்	விவரம்	பக்கம்
4	இரண்டெழுத்துக் குறில் — நெடில் சொற்கள் (இரட்டை இரட்டையாக)	4
5.	மூன்றெழுத்துக் குறில் — நெடில் சொற்கள் (இரட்டை இரட்டையாக)	5
6.	குறில் — நெடில் எழுத்துக்களை முதலிற் கொண்ட மூன்றெழுத்துச் சொற்கள்	6
7.	குறில் — நெடில் எழுத்துக்களை முதலிற் கொண்ட நான்கெழுத்துச் சொற்கள்	7
8.	247 எழுத்துக்கள் (5 கோட்டில்)	8, 9
9.	247 எழுத்துக்கள் (ஒரு கோட்டில்) — பயிற்சி	10, 11
10.	உச்சரிப்பு விளக்கப் படங்கள்	12
11.	நெருங்கிய ஒலியுள்ள எழுத்துக்களை இரட்டை இரட்டையாக உச்சரித்து நுட்பமான ஒலி வேறுபாடுகளைத் தெரிந்து கொள்ளல் — எழுத்துக்களில் பயிற்சி	13
12.	ன — வரி, ண — வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள் (இரட்டை இரட்டையாக)	14

பாடம்	விவரம்	பக்கம்
13.	ர — வரி, ற — வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள் (இரட்டை இரட்டையாக)	15
14.	ல — வரி, ள — வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள் இரட்டை இரட்டையாகவும், ழ — வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள் தனியாகவும்	16

247 எழுத்துகளில் சொற்கள்

15.	குறில் — நெடில் எழுத்துக்களை முதலிற் கொண்ட இரண்டெழுத்துச் சொற்கள்	17
16.	குறில் — நெடில் எழுத்துக்களை முதலிற் கொண்ட மூன்றெழுத்துச் சொற்கள்	18
17.	குறில் — நெடில் எழுத்துக்களை முதலிற் கொண்ட நான்கெழுத்துச் சொற்கள்	19
18.	ட், ற் என்ற மெய்யெழுத்துக்களுக்குப் பின் எந்த மெய் யெழுத்தும் வரக் கூடாது ; வந்தால் பிழையாகும் — பயிற்சி	20
19.	தமிழில் வழங்கும் வடமொழி (கிரந்த) எழுத்துக்கள் 65	21
20.	வடமொழி எழுத்துக்கள் கொண்ட பிறமொழிச் சொற்கள்	21
21.	தப்பிதமாய் உச்சரிப்பதால் தப்பிதமாய் எழுதப்படும் சொற்களும் அவற்றின் திருத்தமும்	22
22.	சொற்களுக்கு முதலில் வரக்கூடிய குறில் நெடில் எழுத் துக்கள் மட்டும்	23
	சொற்களில் பயிற்சி	24

சொற்றொடர்கள்

23.	இயல்புச் சொற்றொடர்	25

விகாரச் சொற்றொடர்கள்

24.	தோன்றல் சொற்றொடர்	26
25.	கெடுதல் சொற்றொடர்	27

பாடம்	விவரம்	பக்கம்
26.	திரிதல் சொற்றொடர்	28
27.	பல விகாரச் சொற்றொடர்கள் (பல உட் பிரிவுகளுடன்)	29—37
28.	மெய்யும் + உயிருங்கூடிய உயிர்மெய்யெழுத்துக்கள்	38—40
29.	சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றை முதலெழுத்துக்களால் எழுதுதல் — பயிற்சி	41
	வாக்கியங்கள்	
30.	ஆண்பால் × பெண்பால் — பெயர்ச் சொற்கள்	42
31.	எதிர்ப் பதம் — பெயர்ச் சொற்கள்	43
32.	ஒருமை — பன்மை — பெயர்ச் சொற்கள்	44
33.	வேற்றுமை உருபுகளும், உருபுகள் சேர்ந்த உதாரண வாய்ப்பாட்டுச் சொற்களும், — உருபு ஏற்கையில் விகாரமடையும் சொற்கள்	45—49
	எட்டாம் வேற்றுமை (விளி) ஏற்காத சொற்கள்	49
34.	27 வினைமுற்றுக்கள் — (ஈற்றை நோக்கி 34 வினைப் பகுதிகள். கட என்ற பகுதிக்கு 27 வினைமுற்றுக்கள் 9 வரியில் அமையும் விதமும், மற்ற 33 பகுதிகட்கு முதல் வரி மாத்திரமும் — பயிற்சி)	50, 51
35.	வினைமுற்றுக்களை வாக்கியங்களாக அமைத்தல் — பயிற்சி	52
36.	சிறு சிறு வாக்கியங்கள் — பயிற்சி	53, 54
37.	வேற்றுமை உருபுகள் எல்லாமும், அவற்றைக் கொண்ட சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் காட்டலும்	55—57
38.	நெருங்கிய ஒலிச் சொற்களை விளக்கும் வாக்கியங்கள்	58, 59
	சரள வாக்கியங்கள்	
	(குறிப்பிட்ட பெயர்ச் சொல்லுடன் வேற்றுமையுருபுகள் சேர்த்து சரளமாக வாக்கியங்கள் அமைத்தல்)	
39.	பசு	60
40.	காகம்	61
41.	தென்னை	62

பாடம்	விவரம்	பக்கம்
42.	விருதுநகர்	63
43.	பால குருகுல வித்யாலயம் — பயிற்சி — கட்டுரைகள் விளக்கம்	64, 65

சிறு கட்டுரைகள்

44.	பசு	66
45.	காகம்	67
46.	தென்னை	68

கட்டுரைகள்

47.	விருதுநகர்	69, 70
48.	பால குருகுல வித்யாலயம்	71, 72
	எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றில் (டிக்டேஷன்) சொல்வதெழுதல்	73, 74
	பத்திரிகை வாசிக்க, செய்யுள் கற்க பயிற்சிகள்	75
	அனுபந்தம்	76—98

முகவுரை

உலகத்திலுள்ள இருவகை மொழிகளில், தமிழ் முதலிய இந்திய மொழிகள் சொல்லொலியும் எழுத்தொலியும் ஒன்ருயிருக்கும் **(Phonetic Language)** வகையையும், ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகள் எழுத்தொலியும் சொல்லொலியும் வெவ்வேருயிருக்கும் **(Unphonetic Language)** வகையையும் சேர்ந்தவையாகும்.

எழுத்தொலியும் சொல்லொலியும் ஒன்ருயிருக்கும் மொழிகளின் எழுத்துக்களை நன்கு கற்றிருந்தால் சொற்களையும் சொற்றொடர்களையும் அப்படியே வாசித்துவிடலாம்; எழுதி விடலாம். ஆனல், எழுத்தொலியும் சொல்லொலியும் வெவ்வேருயிருக்கும் ஆங்கில மொழியின் எந்தச் சொல்லையும் எழுத்துக்களின் ஒலிப்படி எழுதவோ வாசிக்கவோ முடியாது. உதாரணமாக, 'பசு' என்று பொருள் படும் ஆங்கிலச் சொல்லாகிய 'கவ்', ஸி **(C)** ஓ **(O)** டபுள்யூ **(W)** என்று எழுத்துக் கூட்டிச் சொல்லவேண்டும்; 'கவ்' **(Cow)** என்று உச்சரிக்கவேண்டும். ஒலிக்கு மாறுபட்டு எழுதவேண்டும்; வாசிக்கவேண்டும். இதுபோலவே, ஆங்கிலச் சொற்கள் எல்லாம் எழுத்தொலி ஒன்ருகவும், சொல்லொலி வேருென்ருகவும் இருக்கும். இதனல் ஆங்கிலச் சொற்களின் எழுத்து வரிசையையும், உச்சரிப்பையும் **(spelling and pronunciation)** குருட்டுப் பாடமாகக் கற்கவேண்டியது ஏற்படுகிறது. அப்படிக் குருட்டுப் பாடமாகக் கற்றதை மறந்து போகாமலிருப்பதற்காக, அடிக்கடி மனப்பாடம் செய்து வைத்திருக்கவும் வேண்டும். இக்காரணங்களாலும், வேறு சில காரணங்களாலும் ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளைக் கற்பது கடினமென்பதையும், கற்பதற்கு நீண்ட காலம் பிடிக்குமென்பதையும் எவரும் மறுக்க முடியாது. இக்குறைகளை நீக்கும்பொருட்டு ஆங்கில எழுத்துக்களை அதிகப்படுத்தியும், சில திருத்தங்களைச் செய்தும், ஆங்கிலத்திற்கும் தமிழைப்போல எழுத்தொலியும் சொல்லொலியும் ஒன்றுபோல் ஆக்கப் பேரறிஞர் பெர்ஞட்ஷா பாடுபட்டது உலகமறிந்த விஷயம்.

தாளும், அச்சியந்திரசாலைகளும் இங்கு உபயோகத்திற்கு வந்து கொண்டிருந்த ஆரம்ப காலத்தில், ஆங்கிலேயர்கள் இந்த நாட்டைக் கைப்பற்றினார்கள். நமது மொழி வளர்ச்சியடைந்து நமக்கு, நமது மொழி, நமது நாடு, நமது நாகரீகம் என்ற எண்ணம் செயலில் ஏற்படாமல் செய்வதற்காகவும், நாம் ஆங்கில மொழிக்கும் ஆங்கிலேய நாகரீகத்திற்கும் அடிமையாக இருப்பதற்காகவும், நமக்குள் ஒருவரை யொருவர் சுரண்டிப் பிழைக்கும்படி செய்வதற்காகவும், வேண்டுமென்றே திட்டமிட்டு ஆங்கிலேயர்கள், நமது நாட்டில் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாகப் புகுத்தினார்கள். இந்த உண்மையை 1853 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பார்லிமெண்டால் நியமிக்கப்பட்ட "மெக்காலே இந்தியக் கல்விக் கமிட்டி"யின் அறிக்கையில் பார்க்கலாம்.

இங்கு ஆங்கிலம் ஆட்சி மொழியானவுடன், அதைக் கற்க ஆங்கில வாசகப் புத்தகங்கள் (Readers) பலவும், அவைகளைக் கற்றுக் கொடுக்கும் பல முறைகளைப் பற்றிய பல புத்தகங்களும் (Method Books) வெளியிடப்பட்டன.

இப்புத்தகங்கள் ஆங்கிலச் சொற்களைப் படங்கள் மூலமாகவும், தெரிந்த சொற்கள் மூலமாகவும், வருடத்திற்கு இத்தனை சொற்களை கற்கலா மென்று திட்டம் செய்தன. ஆங்கிலம் கற்பதற்குக் கடினமான மொழியானபடியால் அதனைக் கற்கின்றவர்களின் மன நிலையை அறிந்து கற்றுக் கொடுக்க, ஆங்கிலத்தில் மனோதத்துவ சாத்திரப் (Psychology) புத்தகங்களும் தோன்றின. ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு, மனோ தத்துவ சாத்திரத்தைப் போதிப்பதற்காகவும், அவர்களுக்கு மாதிரி வகுப்புகள் மூலமாக ஆங்கிலம் எப்படிக் கற்பிக்க வேண்டும் என்பதைக் காட்டுவதற்காகவும் அரசாங்கத்தாரால் ஆசிரியர் போதனுமுறைப் பள்ளிக்கூடங்கள் பல (Teachers' Training Schools) ஏராளமான பணச் செலவில் நிறுவப்பட்டன.

எழுத்தொலியும் சொல்லொலியும் ஒன்றுயிருக்கும் தமிழ் முதலிய இந்திய மொழிகளுக்கு, மேலே கூறப்பட்ட வழிகளும், முறை

களும் வேண்டாதவைகளாயிருந்தும் அவைகள் தமிழ் வாசகப் புத்தகங்களிலும், தமிழ் கற்றுக் கொடுப்பதிலும் புகுத்தப்பட்டன.

தாளும் அச்சியந்திரசாலைகளும் தோன்றித் தமிழில் வசன நடைப் புத்தகங்கள் புதிதாக வந்த கால முதல் இன்றுவரை தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாயில்லாமல், ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருப்பதால், சென்னை அரசாங்கத்திற்குத் தமிழை ஆதரிக்கவோ, வளர்க்கவோ வேண்டிய அவசியமில்லாமலிருக்கின்றது. இதைப் புத்தக வியாபாரிகள் தங்கள் இலாபத்திற்குப் பயன்படுத்திக் கொண்டு, வியாபார நோக்கத்துடன் தமிழ் வாசகப் புத்தகங்களை வெளியிட்டு, அவைகளுக்குப் புத்தக அங்கீகாரக் கமிட்டியாரிடம் எப்படியாவது அங்கீகாரம் பெற்று, பள்ளிக்கூடங்களின் நிர்வாகிகளையும் ஆசிரியர்களையும் கண்டு பேரம் பேசி அவர்களுக்குப் புத்தகங்களை விற்று வருகிறார்கள்.

புத்தகங்கள் வியாபார நோக்கத்துடன் விற்கப்பட்டாலும், அநேகமாய் எல்லா முதல் வகுப்புத் தமிழ் வாசகப் புத்தகங்களின் முகவுரைகளிலும், பிள்ளைகளுக்கு முதலில் எழுத்துக்களைக் கற்றுக் கொடுக்கக்கூடாதென்றும், கற்றுக் கொடுத்தால் தமிழ் கற்பதில் பிள்ளைகளுக்கு வெறுப்பு ஏற்பட்டு விடுமென்றும், சொற்களைப் பிள்ளைகளுக்குப் படங்கள் மூலமாகவும், தெரிந்த சொற்கள் மூலமாகவும் கற்றுக் கொடுக்க வேண்டு மென்றும் எழுதியிருக்கும். ஆனால் படங்களில் பலவும், சொற்களில் பலவும் பிள்ளைகளுக்குத் தெரிந்தவையாக இரா.

தமிழ் எழுத்துக்களைக் கற்றுவிட்டால், எந்தத் தமிழ்ச் சொல்லையும் பிழையின்றி வாசிக்கவும் எழுதவும் முடியும்போது, சொற்களை எழுத வாசிக்கக் கற்றுக் கொடுப்பதற்குப் படங்களும், தெரிந்த சொற்களும் எதற்கு? (தமிழ் எழுத்துக்களை இப் புத்தகப்படி கற்றுக் கொடுத்தால் சில தினங்களுக்குள் எளிதாக கற்றுக் கொடுத்து விடலாம்.)

குழந்தைகளுக்கு மகிழ்ச்சியூட்டுவதற்கும், பொது அறிவை வளர்ப்பதற்கும் படங்கள் வேண்டியவையே. ஆனால் தமிழ்ச் சொற்களை எழுத வாசிக்கக் கற்றுக்கொடுப்பதற்குப் படங்களை உபயோகிப்பது கெடுதலாகும். ஆங்கிலத்திற்கு, தமிழைப்போல் சொற்றொடர் இல்லாதபடியால், ஆங்கிலச் சொற்களைக் கற்றவுடன் அதன் வாக்கியத்தைக் கற்பது சரியே. ஆனால் தமிழுக்கு எழுத்தையும் சொல்லையும் கற்றவுடன் 'சொற்றொடரைக் கற்கவேண்டும்.' ஏனென்றால் தமிழில் சொற்றொடரில்லாத வாக்கியத்தைக் காண்பதரிது. முதல் வகுப்புத் தமிழ் வாசகப் புத்தகங்களிலேயே சொற்றொடர்களுடன் கூடிய வாக்கியங்கள் இருப்பதைக் காணலாம். சொற்களைக் கற்கப் படங்கள் போடுகின்றவர்கள், சொற்றொடர்களையும் கற்கப் படங்கள் போடவேண்டுமல்லவா? 'கதவடை' என்ற சொற்றொடரை 'கதவு' + 'அடை' என்று பிரித்துக் காட்டாமல் பிள்ளைகள் விளங்கிக்கொள்ள முடியுமா?

பத்து ஆண்டுகளுக்கு அதிகமாகத் தமிழ் கற்றவர்களிலும் 'காந்தம்' என்பதைக் 'கந்தம்' என்றும், 'கொடுத்தான்' என்பதைக் 'கெடுத்தான்' என்றும், 'போடி' என்பதைப் 'பொடி' என்றும், குறில் — நெடில் எழுத்துக்களின் பேதத்தைக் கூடத் தெரிந்துகொள்ளாமல் பிழையுடன் எழுதுகின்றவர்களையும், வாசிக்கின்றவர்களையும், 'தினமணி' என்பதை 'திணமனி' என்றும், 'திருக்குறள்' என்பதை 'திறுக்குரல்' என்றும் எழுதுகின்றவர்களையும் வாசிக்கின்றவர்களையும் காணலாம். தமிழைப் பிழையின்றி எழுதுகின்ற, வாசிக்கின்ற மிகச் சிலருங்கூட, பல ஆண்டுகள் த்மிழை ஏராளமாக வாசித்தும் எழுதியும் பிழைகளைத் தாங்களாகவே கண்டு கண்டு, திருத்திக் கொண்டவர்களேயன்றி, தமிழ் கற்கும் வழிப் புத்தகங்களின் உதவியாலோ, அல்லது ஆசிரியர்களின் உதவியினாலோ, பிழையின்றி எழுதவும் வாசிக்கவும் திறமை அடைந்தவர்களல்லர்.

இந்த உண்மைகளை உங்கள் அனுபவத்தைக் கொண்டே சிந்தித்து அறிந்து கொள்ளலாம்.

மேலே கூறியவாறு பிழையாக எழுதுவதற்குக் காரணம், தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்பதற்கு இதுவரை சரியான புத்தகம் வெளியிடப்படவில்லை யென்பதேயாம். தமிழ் வசனம், புத்

தக வாயிலாகவும், பத்திரிகை வாயிலாகவும் நடைமுறைக்கு வந்து சுமார் 75 ஆண்டுகளாகியும், தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்க இதுவரை சரியான புத்தகம் வெளியிடப்படவில்லை. இவ்வாறு நாங்கள் கூறுவது அநேகருக்கு ஆச்சரியமாகத் தோன்றலாம். இப்படி ஆச்சரியப்படுகின்றவர்களை புதிதாகப் புத்தக வடிவத்தில் தமிழ் வசனம் வந்தது முதல் நம் நாட்டில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருப்பதையும், ஆங்கிலம் கற்காமல் தமிழ் மட்டும் கற்றவர்கள், கற்றவர்களாக ஒப்புக்கொள்ளப் படாமலிருப்பதையும், ஒவ்வொரு விஷயத்திலும் ஆங்கிலங் கற்றவர்களே ஆதிக்கத்திலும் அதிகாரத்திலுமிருப்பதையும் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக்கப்படாமலிருக்கும் போது, ஆங்கிலம் கற்பதினாலும், இந்தி கற்பதினாலும் தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் ஏற்பட்டுவரும் கேடுகள் பல. தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்ட பின்பே, இங்கு இந்தி, ஆங்கிலம் முதலிய மொழிகளை மக்கள் கற்கவேண்டும். சுயநலத்தை விரும்பாதவர்கள் தமிழை ஆட்சி மொழியாக்கும் முயற்சியைக் கடமையாகக் கருதுவார்கள்.

தாளும் அச்சியந்திரசாலைகளும் ஏற்பட்ட கால முதல் நமது நாட்டில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்து வருவது, தமிழுக்குப் பெரும் பாதகமாய் முடிந்துவிட்டது. தாளும் அச்சியந்திர சாலைகளும் ஏற்பட்டு சிறிது காலத்திற்குப் பிறகாவது நமது நாடு அடிமைப் பட்டு ஆங்கிலம் ஆட்சி மொழியாகப் புகுத்தப்பட்டிருந்தாலும், தமிழுக்கு அதிகமான பாதகம் ஏற்பட்டிராது. ஏனென்றால் அந்தச் சிறிது காலத்திற்குள் தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்பதற்குப் புத்தகங்கள் ஏற்பட்டு, பலரும் தமிழைப் பிழையறக் கற்றிருப்பார்கள். தாளும் அச்சியந்திரசாலைகளும் ஏற்பட்டவுடன் சிறிது காலத்திற்காவது தமிழ் ஆட்சி மொழியாக இருந்திருக்குமானால், தமிழ் வசன நடை ஓரளவாவது வளர்ச்சியடைந்திருக்கும். அப்படி வளர்ச்சியடைந்த பிறகு, ஆங்கிலம் ஆட்சி மொழியாக ஏற்பட்டிருந்தாலும் தமிழைப் பிழையுடன் வாசிக்கின்றவர்களும் எழுதுகின்றவர்களும் அதிகமாக இருக்கமாட்டார்கள்., தாளும்

அச்சியந்திரசாலைகளும் ஏற்பட்ட பிறகு ஒவ்வொருவரும் தமிழ் வசனத்தைப் பிழையின்றிக் கற்காமலிருக்க முடியாது.

உரைநடை வேறு, வசனநடை வேறு. செய்யுட்களுக்குப் பழங் காலத்தில் உரை (அருத்தம், விளக்கம்) எழுதுவதற்கு ஏற்பட்டதே உரைநடையாம். செய்யுட்களுக்கு அருத்தம் கூற ஏற்பட்ட சில உரைநடைகள் அந்தச் செய்யுளை விடக் கடினமாகவும் இருக்கும். அச்சுயுகத்தில், புத்தகமும் பத்திரிகையும் ஏற்பட்ட பிறகு வந்தது தான் வசனநடை. தாளும் அச்சியந்திரசாலைகளும் தோன்று முன், எல்லா மொழிகளிலும் நூல்கள் செய்யுள் வடிவில்தான் (**Poetry**) இருந்தன. உலகத்தில் வசனநடை பேச்சு வழக்கிலிருந்தும், தாளும் அச்சியந்திரசாலைகளும் தோன்றிய பிறகே, வசனநடையில் புத்தகங்களும் பத்திரிகைகளும் ஏற்பட்டு, அவைகளைக் கற்றுக் கொடுக்கப் புத்தகங்களும் வெளிவந்தன.

தமிழ் மொழியை அதன் அமைப்புப்படி கற்றால், எளிதாக விரைவில் கற்க முடிவதுடன், ஒரு பிழைகூட ஏற்படாமலும் கற்க முடியும். ஏனென்றால் தமிழ் மொழியை உண்டாக்கியவர்கள் அவ்வளவு மதி நுட்பத்துடன் உண்டாக்கி யிருக்கின்றார்கள். தமிழ் உலக மொழி களில் முதன் முதலில் தோன்றியதாக இருந்தும் அது சிறந்த மதி நுட்பத்துடன் அமைக்கப்பட்டிருப்பது அற்புதமல்லவா?

தாளும், அச்சியந்திரசாலைகளும் தோன்றியபிறகு, புத்தக வடிவத்தில் புதிதாக வந்த தமிழ் வசனத்தைக் கற்க 1872 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலரவர்கள் "பாலபாடம்" என்ற பெயரால் நான்கு தமிழ் வாசகப் புத்தகங்களை வரிசைக் கிரமமாக வெளியிட்டு, தமிழ் வசனத்தை எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் எனப் பிரித்துக் கற்க வழி காட்டினார்கள்.

தமிழுக்கு எழுத்துக்களின் உச்சரிப்புச் சத்தமும், சொல்லின் உச்சரிப்புச் சத்தமும் ஒன்று போல இருக்கும் (**Phonetic Language**) காரணத்தால் பழைய திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மக்களுக்குத் தமிழ் 247 எழுத்துக்களை சாரியை இராகத்துடன் கற்றுக்

கொடுத்துக்கொண்டு, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, அம் மானே, நளவெண்பா முதலிய செய்யுட்களேயே இராக உதவியுடன் இனிமையாக எளிதில் பிழையின்றி வாசிக்கும்படி செய்து வந்திருக் கின்றன. பழைய திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கற்றவர்கள் மகா பாரதம், இராமாயணம் முதலிய பெரிய செய்யுட் காவியங்களேயும் இராக உதவியுடன் பிழையின்றி இனிமையாக வாசிப்பதைக் காண லாம்.

தமிழ் எழுத்துக்களேச் சாரியை இராகத்துடன் கற்று, தமிழ்ச் செய்யுட்களேயே இராக உதவியுடன் வாசிக்க முடியும்போது, தமிழ் வசனத்தையும் இராக உதவியுடன் மிக மிக எளிதில் வாசித்து விட லாம். ஆனல் தமிழ் வசனத்தை இராகத்துடன் வாசிக்கக்கூடாது. ஆதலால் தமிழ் வசனத்தை எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கி யம் என்று பிரித்து இராக மின்றிக் கற்கவேண்டும்.

தமிழ் வசனத்தை இராகத்துடன் வாசிக்கக் கூடாதாகையால், தமிழ் எழுத்துக்களேயும் சாரியையுடனும் இராகத்துடனும் கற்கக் கூடாது. ஆரம்பத்தில் தமிழ்ச் சொற்களேயும், தமிழ்ச் சொற்றொடர் களேயும் எழுத்துக் கூட்டிக் கற்க வேண்டியதிருக்கிறது. இதற்காக வும் தமிழ் எழுத்துக்களே சாரியையுடனும் இராகத்துடனும் கற்கக் கூடாது. தமிழ் எழுத்துக்களே 'ஆனு' 'ஆவன்னு' என்று சாரியை இராகத்துடனே, சாரியையுடனே கற்ருல் இனிமையாக இருக்கு மென்பதில் சந்தேகமே இல்லே. சொற்களிலும், சொற்றொடர்களி லும் எழுத்துக்கள் சாரியை ஓசையின்றி வருவதால், எழுத்துக்களே 'ஆனு', 'ஆவன்னு' என்று சாரியை சேர்த்துக் கற்கக் கூடாது. தமிழை எழுதப் படிக்கத் தெரியாதவர்களும் அதன் சொற்களே சாரியையின்றி எழுத்துக் கூட்டி சொல்லிவிட முடியும். உதாரண மாக பசு என்ற சொல்லே ப, சு = பசு என்று எழுத்துக் கூட்டிச் சொல்லிவிடலாம். பசு என்ற சொல்லே பானு, சூனு = பசு என்று சாரியையுடன் எழுத்துக் கூட்டிச் சொல்வது கடினம். பல எழுத் துக்கள் கொண்ட சொற்றொடர்களே சாரியையுடன் எழுத்துக் கூட் டிச் சொல்லமுடியாது, எளிதில் வாசிக்கவோ எழுதவோ முடியாது. எழுத்துக்களேச் சாரியை சேர்த்து 'ஆனு', 'ஆவன்னு' என்று கற்

றால் குறில் நெடில் எழுத்துக்களில் பிழைகள் ஏற்படா என்பது உண்மையே. எழுத்துக்களை 'ஆனா', 'ஆவன்னா' என்று சாரியையுடன் கற்பதற்குப் பதில், குறில் நெடில் எழுத்துக்களை இரட்டை இரட்டையாகவும், நெடிலை நீட்டிச் சொல்லியும் கற்க வேண்டும். இதனால் எழுத்துக்களிலும், சொற்களிலும், சொற்றொடர்களிலும் குறில் நெடில் பிழைகளே ஏற்படா.

தமிழுக்கு எழுத்துக்களின் உச்சரிப்பு ஓசையும், சொல்லின் உச்சரிப்பு ஓசையும் ஒன்றாக இருப்பதால், தமிழ்ச் சொற்களை எழுத வாசிக்கக் கற்பதற்கு, தெரிந்த சொற்களாக இருக்கவேண்டுமென்பதோ, படங்கள் வேண்டுமென்பதோ அவசியமில்லை என்பதையும், சொற்களை இரண்டெழுத்துச் சொற்கள், மூன்றெழுத்துச் சொற்கள், நான்கெழுத்துச் சொற்கள் என்று படிப்படியாகக் கற்க வேண்டுமென்பதையும் நாவலரவர்கள் தமது பாலபாடப் புத்தகத்தின் மூலமாக நமக்கு வழிகாட்டியிருக்கிறார்.

இப் புத்தகத்தில் தமிழ் எழுத்துக்களை அவைகளின் அமைப்புப்படி எளிதாக விரைவில் கற்பதற்கு வழி காட்டியுள்ளோம். இதனை புத்தகத்தின் முதல் மூன்று பாடங்களையும் அநுபந்தத்தையும் பார்த்து எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

குறில் நெடில் எழுத்துக்களை இரட்டை இரட்டையாகக் கற்க வேண்டுமென்றும், அ—வரி முதல் ம—வரி முடியவுள்ள 143 எழுத்துக்களை முதலிற் கற்க வேண்டுமென்றும், அந்த 143 எழுத்துக்களுக்குள் சொற்களை எழுத வாசிக்கத் தெரிய வேண்டுமென்றும், சொற்களை குறில் நெடில் எழுத்துக்கள் முதலில் வரும்படி இரட்டை இரட்டையாகக் கற்க வேண்டுமென்றும், நாங்கள் வழி காட்டியிருப்பது, தமிழ் கற்பதில் ஒரு பெரும் புரட்சியாகும். இப்படிக் கற்பதின் மூலமாக உற்சாகத்துடன் விரைவில் தமிழ் எழுத்துக்களையும் சொற்களையும் கற்றுக்கொள்ள ஏதுவாவதுடன், சொற்களில் குறில் நெடில் பிழைகளே ஏற்படா.

அ—வரி முதல் ம—வரி முடிய 143 எழுத்துக்களையும் அவைகளுக்குள் சொற்களையும் கற்ற பிறகே, ய—வரி முதல் ன—வரி முடிய

யுள்ள 104 எழுத்துக்களைக் கற்க வேண்டுமென்றும், நுட்பமான நெருங்கிய ஒலியுடைய இந்த எழுத்துக்களைக் கற்பதற்கு உச்சரிப்பு விளக்கப் படங்களும் 12, 13, 14 ஆம் பாடங்களில் இவ்வெழுத்துக் களை இரட்டை இரட்டையாகச் சொற்களில் அமைத்துக் காட்டி யுள்ளோம். இப்பாடங்களால் ன, ண—வரி, ர, ற—வரி, ல, ள—வரி, ழ—வரி எழுத்துக்களில் பிழைகள் ஏற்படா.

மேற் கூறியவாறு எழுத்துக்களையும், அவ்வெழுத்துக்களில் சொற் களையும் இரு பிரிவுகளாகப் பிரித்துக் கற்ற பிறகு, 247 எழுத்துக் களில் சொற்களை ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூற்களைப் பின்பற்றி, குறில் நெடில் எழுத்துக்கள் சொற்களுக்கு முதலில் வரும் படி பாடங்களை அமைத்துள்ளோம். குறில் நெடில் பிழைகள் ஏற் படாமலிருப்பதற்காக ஆத்திசூடிப் பாக்கள்: 'அறம்', 'ஆறுவது' என் றும், கொன்றைவேந்தன் பாக்கள்: 'அன்னையும்', 'ஆலயம்' என்றும், குறில் நெடில் எழுத்துக்கள் சொற்களுக்கு முதலில் வரும்படியாக அகராதி வரிசையில் அமைக்கப்பட்டிருப்பதைக் கவனிக்க. திண் ணைப் பள்ளிக்கூடங்களில் 247 எழுத்துக்களாகிய அரிச்சுவடி எனும் தமிழ் நெடுங்கணக்கைக் கற்றவுடன் சொற்களில் குறில் நெடில் பிழைகள் ஏற்படாமலிருப்பதற்காக ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூற்களைக் கற்றுக் கொடுத்து வந்தனர்.

எழுத்து, சொல் ஆகியவைகளின் பாடங்கள் முடிந்த பிறகு, இரு சொற்கள் சேர்ந்த சொற்றொடர்களின் பாடங்களை அமைத்துக் காட்டியுள்ளோம். தமிழ் வசனத்தைக் கற்பதின் நோக்கமே, வாக் கியங்களைப் பிழையின்றி வாசிக்கவும், எழுதவும் தெரிவதற்கே எனினும், இரு சொற்களைச் சேர்க்கவும் சொற்றொடரைப் பிரிக்கவும் கற்காமல் வாக்கியத்திற்குப் போக முடியாது. சொற்றொடரைக் கற் காமல், வாக்கியத்திற்குப் போவது பெருந்தவறாகும்.

வாக்கியப் பகுதியில் 31 பெயர்ச் சொற்களை எட்டு வேற்றுமை யுருபுகளுடனும், 34 வினைப் பகுதிகளை 27 வினைமுற்றுக்களாகவும் வாய்ப்பாடு மாதிரி பாடங்களில் அமைத்துக் காட்டியுள்ளோம். இந்தப் பாடங்களால் எந்தப் பெயர்ச் சொல்லையும், எட்டு வேற்றுமை

யுருபுகளைச் சேர்த்துச் சொல்லவும் எழுதவும், எந்த வினைப்பகுதியையும் 27 வினைமுற்றுக்களாகச் சொல்லவும் எழுதவும் தெரிந்துவிடும். இதன் பயனாக சொந்தத்தில் கணக்கற்ற வாக்கியங்களைப் பிழையின்றிச் சொல்லவும் எழுதவும் தெரிந்துவிடும். இதற்கான வழிகளை 39 ஆம் பாட முதல் 43 ஆம் பாடம் முடிய சரள வாக்கியங்கள் மூலமாக அமைத்துக் காட்டியுள்ளோம்.

தமிழ் வாசகப் புத்தகங்களை எழுதுகின்றவர்களாலும், வெளியிடுகின்றவர்களாலும், ஆசிரியர் போதனாமுறைப் பள்ளிகளாலும், பிள்ளைகளுக்குச் சொந்தத்தில் சொற்களையும், வாக்கியங்களையும் சொல்லத் தெரிய வேண்டுமென்றும், எழுதத் தெரியவேண்டுமென்றும் வெறும் பேச்சளவிலும் எழுத்தளவிலும் கூறப்படுகின்றன. ஆனால் உண்மையில் பிள்ளைகளுக்கு தாங்கள் கற்றுவரும் வகுப்புப் புத்தகத்திலுள்ள சொற்களையும் வாக்கியங்களையுந் தான் குருட்டுப் பாடமாக வாசிக்கவும் எழுதவும் தெரியும். (அதுவும் பிழையுடன்தான்). உதாரணமாக, 'பாரதி வாசகம்' என்றும், 'காந்தி வாசகம்' என்றும் இரு வகைத் தமிழ் வாசகப் புத்தகங்கள் முதல் வகுப்பிற்கு இருப்பதாக வைத்துக் கொள்வோம். இவைகளில் பாரதி வாசகப் புத்தகத்தைக் கற்ற பிள்ளைகளுக்கு காந்தி வாசகப் புத்தகத்தை வாசிக்கத் தெரியாது. காந்தி வாசகப் புத்தகத்தைக் கற்ற பிள்ளைகளுக்கு பாரதி வாசகப் புத்தகத்தை வாசிக்கத் தெரியாது. வாசிக்கச் சொன்னால், "இந்தப் புத்தகம் எங்களுக்குக் கிடையாது" என்று சொல்லி, பிள்ளைகள் அழத் தொடங்குவதைக் காணலாம். உண்மை இப்படியிருக்க, தமிழ் வாசகப் புத்தகங்களையும், அவைகளைக் கற்றுக் கொடுக்கும் முறைகளைப் பற்றிய புத்தகங்களையும் எழுதுகின்றவர்களும், வெளியிடுகின்றவர்களும், அவற்றை அங்கீகாரம் செய்கின்றவர்களும் தமிழுக்காகப் பாடுபடுவதாக நடிப்பதைத் தமிழகம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது மிகுந்த துக்கத்துடன் வெறுக்கத் தக்கதாகும். மக்களுக்கு தமிழை மனோதத்துவ சாத்திரப்படி கற்றுக் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டு, அவர்களை வாழ்நாள் முழுவதும் தமிழைப் பிழையின்றி எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக இருக்கச் செய்வதை விட வேறு கொடுமை இருக்க முடியாது.

இந்தப் புத்தகத்தின் உபயோகம்

இப்புத்தகம் மூன்றும் வகுப்பு முதல் அதற்கு மேற்பட்ட எல்லா வகுப்புகளுக்கும் ஏற்பட்டதாகும். ஏற்கெனவே தமிழ் கற்றிருந்தும், அதைப் பிழையுடன் எழுதுகின்ற ஒவ்வொருவருக்கும் இப்புத்தகம் உபயோகப்படும்.

மூன்றும் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு முடியவோ, மூன்றும் படிவம் முடியவோ உள்ள பிள்ளைகளை, பிழை நீங்கும் வரை இப்புத்த கத்திலுள்ள பாடங்களை எழுத்துக் கூட்டிச் சொல்லிக்கொண்டே வாசிக்கும்படியும், சிலேட்டில் பார்த்தெழுதும்படியும் செய்யவேண்டும். ஆசிரியர்கள் முதலில் இப் புத்தகத்தை தங்களிடம் படிக்கும் இராப்பாடப் பிள்ளைகளுக்கும் தங்களுக்குத் தெரிந்த மற்றப் பிள்ளைகளுக்கும் வாங்கிக் கொடுத்து, பள்ளிக்கூட நேரம் தவிர மற்ற நேரங்களில் இப் புத்தகப்படி கற்றுக் கொடுத்து அனுபவத்தில் நன்மையைக் காணவேண்டும். அதன் பிறகு வகுப்புகளில் கரும்பலகையில் பாடங்களை எழுதிப் போட்டு பிள்ளைகளை எழுத்துக் கூட்டி வாசிக்கும்படியும், எழுத்துக் கூட்டிச் சொல்லிக்கொண்டே பார்த்தெழுதும் படியும் செய்யவேண்டும். எங்கள் முறைப்படி சிலேட்டில் ஒரு கோட்டில் எழுதச் செய்வதால் பிள்ளைகளின் கையெழுத்து திருந்தி அழகு பெறுவதுடன் பிழைகளும் நீங்கும். தமிழ் கற்கப் பணச் செலவே ஏற்படாது. சிலேட்டில் எழுதி எழுதிப் பயிற்சி பெறுமல், தாளில் அழகாக எழுத முடியாது. மேலே கூறியவாறு கற்றுக் கொடுத்து அனுபவத்தில் பார்த்து விட்டால் எங்கள் புத்தகப்படி முதல் வகுப்பிற்கும், எழுதப் படிக்கத் தெரியாத வயதுவந்தோர்களுக்கும், எப்படிக் கற்றுக் கொடுப்பது என்பது தானே தெரிந்துவிடும்.

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியவற்றின் மாணவர்களும், ஆசிரியர்களும், மற்றவர்களும், தாங்களாகவே இப் புத்தக முறைப்படி பாடங்களைப் படித்தும் எழுதியும் தங்கள் பிழைகளைப் போக்கிக் கொள்ளலாம்.

தமிழைப் பிழையின்றி எழுதுகின்றவர்களும், வாசிக்கின்றவர்களும், தமிழ்ப் புலவர்களும் இப்புத்தகத்தை வாசித்து தமிழ் வச

னத்தின் அமைப்பைத் தெரிந்து கொள்ளலாம். புத்தகத்தில் தமிழ் வசனத்தின் அமைப்பிற்கு மாறுபட்டு ஏதாவது இருந்தாலும், அமைப்பிற்கிணங்க ஏதாவது சேர்க்க வேண்டியிருப்பினும், வேறு வகைப் பிழைகள் இருந்தாலும் தாராளமாகக் குறிப்பிட்டு எழுதிய னுப்பலாம். அவைகள் ஒப்புக்கொள்ளத் தக்கவைகளாக இருப்பின், அடுத்த பதிப்பில் இடம் பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்பதற்காக ஏற்பட்ட புத்தகங்களேப் பல இடங்களிலும் பரப்பியும், கற்றும், கற்பித்தும் தமிழுக்காக ஓர் சூழ்நிலேயை உடனே உண்டாக்க வேண்டும். அப்படியானல் தான் தமிழ் தழைக்கும்; செழிக்கும்; ஆட்சி மொழியாகும். இதற்கு ஏதுவாகவும், உதவியாகவும் இப் புத்தகத்தை குறைந்த விலேயில் அழகான கெட்டி அட்டையுடன் உயர்ந்த தாளில் மூன்ரும் பதிப்பாக 3000 பிரதிகளாக அழகாக அச்சிட்டு வெளியிட்டுள்ளோம். விரைவில் பல்லாயிரக் கணக்கான பிரதிகள் வெளியிடுவதற்கான சந்தர்ப்பமும் சூழ்நிலேயும் உண்டாகப் பிரார்த்திக்கிரும்.

“சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!”

கி. பெ. சி. வ. பிரகாசம்,
நிர்வாகி,
பால குருகுல வித்யாலயம்.

விருதுநகர்,
2—9—’53

 அ-வரி முதல் ம-வரி முடியவுள்ள 143 எழுத்துக்கள் (5 கோட்டில்)

* எழுத்துக்கள்

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	க்
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ	ட்
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ	த்
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ	ந்
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ	ப்
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ	ம்

* எழுத்துக்களைக் கற்றுக் கொடுக்கும் விதத்தை அனுபந்தத்தில் பார்க்க.

பாடம் 2

உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும்

அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ.

ஒ, ஓ; ஔ. ஃ

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம்

ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

ெ ே ை ா

ஜ் ஸ் ஷ் க்ஷ் ஹ்

அ-முதல் ம-வரி முடியவுள்ள 143 எழுத்துக்கள் (ஒரு கோட்டில்)

அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ. ஒ, ஓ; ஔ. ஃ

க, கா; கி, கீ; கு, கூ; கெ, கே; கை. கொ, கோ; கௌ. க்

ங, ஙா; ஙி, ஙீ; ஙு, ஙூ; ஙெ, ஙே; ஙை. ஙொ, ஙோ; ஙௌ. ங்

ச, சா; சி, சீ; சு, சூ; செ, சே; சை. சொ, சோ; சௌ. ச்

ஞ, ஞா; ஞி, ஞீ; ஞு, ஞூ; ஞெ, ஞே; ஞை. ஞொ, ஞோ; ஞௌ. ஞ்

ட, டா; டி, டீ; டு, டூ; டெ, டே; டை. டொ, டோ; டௌ. ட்

ண, ணா; ணி, ணீ; ணு, ணூ; ணெ, ணே; ணை. ணொ, ணோ; ணௌ. ண்

த, தா; தி, தீ; து, தூ; தெ, தே; தை. தொ, தோ; தௌ. த்

ந, நா; நி, நீ; நு, நூ; நெ, நே; நை. நொ, நோ; நௌ. ந்

ப, பா; பி, பீ; பு, பூ; பெ, பே; பை. பொ, போ; பௌ. ப்

ம, மா; மி, மீ; மு, மூ; மெ, மே; மை. மொ, மோ; மௌ. ம்

பயிற்சி

எழுத்துக்களைச் சொல்லிக்கொண்டே மேலே கண்டபடி ஒரு கோட்டில் பார்த்து எழுதவும். எழுத்துக்கள் கோட்டைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். பிழையில்லாமல் நன்கு எழுதத் தெரிந்தபிறகு சொல்லிக்கொண்டே பார்க்காமல் எழுதுக.

* சொற்கள்: 143 எழுத்துக்களில் சொற்கள்.

பாடம் 4

இரண்டெழுத்துக் குறில்—நெடில் சொற்கள்.

(இரட்டை இரட்டையாக)

அடி—ஆடி என்று இரட்டை இரட்டையாகச் சொற்களைக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

குறில்	—	நெடில்	குறில்	—	நெடில்
அடி	—	ஆடி	நிதி	—	நீதி
அணி	—	ஆணி	பகை	—	பாகை
அசை	—	ஆசை	படை	—	பாடை
இடு	—	ஈடு	பசி	—	பாசி
உண்	—	ஊண்	பதி	—	பாதி
உமை	—	ஊமை	படி	—	பாடி
எடு	—	ஏடு	புசி	—	பூசி
எது	—	ஏது	புண்	—	பூண்
ஒடி	—	ஓடி	மசி	—	மாசி
கடை	—	காடை	மடு	—	மாடு
கண்	—	காண்	மண்	—	மாண்
குகை	—	கூகை	மது	—	மாது
குடை	—	கூடை	மிசை	—	மீசை
குடி	—	கூடி	மிதி	—	மீதி
சடை	—	சாடை	முடை	—	மூடை
சிதை	—	சீதை			
சுடு	—	சூடு	கெடு	—	கேடு
தடி	—	தாடி	கொடி	—	கோடி
தடை	—	தாடை	கொடை	—	கோடை
துணி	—	தூணி	செடி	—	சேடி
நகை	—	நாகை	தொகை	—	தோகை
நதி	—	நாதி	தொடி	—	தோடி
நடி	—	நாடி	தொடு	—	தோடு
நடு	—	நாடு	பெண்	—	பேண்
நம்	—	நாம்	பெடை	—	பேடை

* சொற்களுக்கு அர்த்தம் கற்றுக் கொடுக்கவேண்டியதில்லை. சொற்களைக் கற்றுக்கொடுக்கும் விதத்தை அனுபந்தத்தில் பார்க்க.

பாடம் 5

மூன்றெழுத்துக் குறில்—நெடில் சொற்கள்.

(இரட்டை இரட்டையாக)

குறில் — நெடில்		குறில் — நெடில்	
அங்கு	— ஆங்கு	தட்டு	— தாட்டு
அண்டு	— ஆண்டு	தண்டு	— தாண்டு
அண்மை	— ஆண்மை	திட்டி	— தீட்டி
அப்பு	— ஆப்பு	திட்டு	— தீட்டு
இங்கு	— ஈங்கு	திண்டு	— தீண்டு
எங்கு	— ஏங்கு	துண்டு	— தூண்டு
ஒட்டு	— ஓட்டு	தும்பு	— தூம்பு
ஒட்டை	— ஓட்டை	தெட்டு	— தேட்டு
கஞ்சி	— காஞ்சி	தொண்டு	— தோண்டு
கட்டை	— காட்டை	தொட்டி	— தோட்டி
கதம்	— காதம்	நகம்	— நாகம்
கப்பி	— காப்பி	நட்டு	— நாட்டு
கம்பு	— காம்பு	நிதம்	— நீதம்
கிச்சு	— கீச்சு	நுங்கு	— நூங்கு
கிண்டு	— கீண்டு	நொண்டு	— நோண்டு
குண்டு	— கூண்டு	படம்	— பாடம்
குடம்	— கூடம்	பட்டி	— பாட்டி
குட்டி	— கூட்டி	பட்டு	— பாட்டு
குட்டு	— கூட்டு	பதம்	— பாதம்
குப்பி	— கூப்பி	பெட்டி	— பேட்டி
கெட்டு	— கேட்டு	பெட்டை	— பேட்டை
கொட்டை	— கோட்டை	பொட்டு	— போட்டு
சட்டை	— சாட்டை	மடம்	— மாடம்
சதம்	— சாதம்	மதம்	— மாதம்
சந்தி	— சாந்தி	மந்தி	— மாந்தி
சந்து	— சாந்து	மணம்	— மாணம்
சிட்டி	— சீட்டி	மப்பு	— மாப்பு
சிட்டு	— சீட்டு	மிதம்	— மீதம்
சுட்டு	— சூட்டு	முக்கு	— மூக்கு
செட்டை	— சேட்டை	முட்டை	— மூட்டை
செம்பு	— சேம்பு	முட்டு	— மூட்டு
தங்கு	— தாங்கு	மொட்டை	— மோட்டை

பாடம் 6

குறில்—நெடில் எழுத்துக்களை முதலிற்கொண்ட மூன்றெழுத்துச் சொற்கள்.

அக்கா	—	ஆணம்	செண்டு	—	சேதம்
அம்மா	—	ஆட்சி	சொகுசு	—	சோம்பு
அம்மி	—	ஆண்டி	—	—	சௌண்டி
இஞ்சி	—	ஈச்சை	தகடு	—	தாகம்
இடம்	—	ஈட்டி	தங்கை	—	தாடகை
உப்பு	—	ஊத்தை	தந்தி	—	தாண்டு
எட்டு	—	ஏகம்	திட்டு	—	தீபம்
—	—	ஐந்து	துட்டு	—	தூபம்
ஒஞ்சு	—	ஓடம்	தெங்கு	—	தேசம்
கங்கை	—	காகம்	தொட்டி	—	தோப்பு
கடுகு	—	காந்தி	தொண்டு	—	தோட்டி
கமுகு	—	காம்பு	நகம்	—	நாதம்
கிடுகு	—	கீச்சு	நத்தை	—	நாகம்
கிண்ணி	—	கீதம்	நெட்டி	—	நேசம்
குஞ்சு	—	கூடம்	நொச்சி	—	நோக்கு
குண்டு	—	கூண்டு	பஞ்சு	—	பாக்கு
குப்பை	—	கூட்டு	பந்து	—	பாங்கு
குத்து	—	கூத்து	படகு	—	பாடம்
கெட்டி	—	கேப்பை	பிசாசு	—	பீடம்
—	—	கைகேசி	புதுமை	—	பூச்சி
கொச்சி	—	கோபம்	புத்தி	—	பூட்டு
கொண்டி	—	கோந்து	பெட்டி	—	பேச்சு
கொப்பு	—	கோமதி	பொந்து	—	போட்டி
—	—	கௌதமி	மட்டை	—	மாடம்
சங்கு	—	சாணம்	மதகு	—	மாதம்
சட்டி	—	சாதம்	மிகுதி	—	மீதம்
சிட்டு	—	சீப்பு	முகம்	—	மூக்கு
சித்தி	—	சீட்டு	முத்து	—	மூட்டை
சுக்கு	—	சூடம்	மெத்தை	—	மேகம்
சும்மா	—	சூட்டு	மொச்சை	—	மோகம்
செக்கு	—	சேணம்	மொட்டு	—	மோசம்

பாடம் 7

குறில் - நெடில் எழுத்துக்களை முதலிற்கொண்ட நான்கெழுத்துச் சொற்கள்

அகப்பை	— ஆகாசம்	செதுக்கு	— சேகண்டி
அடுப்பு	— ஆப்பம்	தங்கம்	— தாமதம்
அப்பம்	— ஆட்டம்	திட்பம்	— தீபகம்
அதிகம்	— ஆக்கம்	துங்கம்	— தூக்கம்
இடுப்பு	— ஈட்டம்	தெப்பம்	— தேக்கம்
இடும்பை	— ஈடுபாடு	தொக்கம்	— தோட்டம்
இணங்கு	— ஈச்சம்	நத்தம்	— நாடகம்
உடம்பு	— ஊக்கம்	நிகண்டு	— நீட்டம்
உசிதம்	— ஊட்டம்	நெஞ்சம்	— நேசிப்பு
உச்சம்	— ஊமத்தை	—	— நைடதம்
உத்தமி	— ஊமைச்சி	நொடிப்பு	— நோக்கம்
எண்ணம்	— ஏகாதசி	படுக்கை	— பாண்டம்
எடுப்பு	— ஏக்கம்	பண்டம்	— பாசாங்கு
எச்சம்	— ஏப்பம்	பட்டம்	— பாதகம்
—	— ஐப்பசி	பந்தம்	— பாடகம்
ஒப்பம்	— ஓட்டம்	பிண்டம்	— பீடிப்பு
—	— ஔடதம்	புங்கம்	— பூடணம்
கடிதம்	— காகிதம்	பெதும்பை	— பேதகம்
கணக்கு	— காந்தம்	—	— பைசாசம்
கண்ணுடி	— காமாட்சி	பொருட்டு	— போதகம்
கிண்ணம்	— கீசகம்	—	— பௌதிகம்
கும்பம்	— கூட்டம்	மச்சம்	— மாசுணம்
—	— கைகாட்டி	மணங்கு	— மாமிசம்
கொஞ்சம்	— கோடாங்கி	மிச்சம்	— மீமாஞ்சை
சட்டம்	— சாந்தம்	மிச்சம்	— மீண்டும்
சத்தம்	— சாப்பாடு	முடிச்சு	— மூதாட்டி
சிகிச்சை	— சீமாட்டி	முடிப்பு	— மூட்டம்
சுத்தம்	— சூடாமணி	மெதுக்கு	— மேட்டிமை
செப்பம்	— சேமிப்பு	—	— மைநாகம்
செட்டிமை	— சேதிமம்	மொத்தம்	— மோதகம்

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	க்
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ	ட்
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ	த்
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ	ந்
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ	ப்
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ	ம்

ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ	ய்
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ	ல்
வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ	ற்
ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ	ன்

பாடம் 8

அ-வரி முதல் **ன**-வரி முடியவுள்ள 247 எழுத்துக்கள் (5 கோட்டில்)

பாடம் 9. 247 எழுத்துக்கள் (அரிச்சுவடியாகிய தமிழ் நெடுங்கணக்கு) (ஒரு கோட்டில்)

அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ. ஒ, ஓ; ஔ. ஃ

க, கா; கி, கீ; கு, கூ; கெ, கே; கை. கொ, கோ; கௌ. க்

ங, ஙா; ஙி, ஙீ; ஙு, ஙூ; ஙெ, ஙே; ஙை. ஙொ, ஙோ; ஙௌ. ங்

ச, சா; சி, சீ; சு, சூ; செ, சே; சை. சொ, சோ; சௌ. ச்

ஞ, ஞா; ஞி, ஞீ; ஞு, ஞூ; ஞெ, ஞே; ஞை. ஞொ, ஞோ; ஞௌ. ஞ்

ட, டா; டி, டீ; டு, டூ; டெ, டே; டை. டொ, டோ; டௌ. ட்

ண, ணா; ணி, ணீ; ணு, ணூ; ணெ, ணே; ணை. ணொ, ணோ; ணௌ. ண்

த, தா; தி, தீ; து, தூ; தெ, தே; தை. தொ, தோ; தௌ. த்

ந, நா; நி, நீ; நு, நூ; நெ, நே; நை. நொ, நோ; நௌ. ந்

ப, பா; பி, பீ; பு, பூ; பெ, பே; பை. பொ, போ; பௌ. ப்

ம, மா; மி, மீ; மு, மூ; மெ, மே; மை. மொ, மோ; மௌ. ம்

ய, யா; யி, யீ; யு, யூ; யெ, யே; யை. யொ, யோ; யௌ. ய்
ர, ரா; ரி, ரீ; ரு, ரூ; ரெ, ரே; ரை. ரொ, ரோ; ரௌ. ர்
ல, லா; லி, லீ; லு, லூ; லெ, லே; லை. லொ, லோ; லௌ. ல்
வ, வா; வி, வீ; வு, வூ; வெ, வே; வை. வொ, வோ; வௌ. வ்
ழ, ழா; ழி, ழீ; ழு, ழூ; ழெ, ழே; ழை. ழொ, ழோ; ழௌ. ழ்
ள, ளா; ளி, ளீ; ளு, ளூ; ளெ, ளே; ளை. ளொ, ளோ; ளௌ. ள்
ற, றா; றி, றீ; று, றூ; றெ, றே; றை. றொ, றோ; றௌ. ற்
ன, னா; னி, னீ; னு, னூ; னெ, னே; னை. னொ, னோ; னௌ. ன்

பயிற்சி

ய-வரி முதல் **ன**-வரி முடிய ஒவ்வொரு வரியாக எழுத்துக்களைச் சொல்லிக்கொண்டே, மேலே கண்டபடி பார்த்து எழுதவும். எழுத்துக்கள் கோட்டைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும், பிழையின்றி நன்கு எழுதத் தெரிந்தபிறகு பார்க்காமல் சொல்லிக்கொண்டே எழுதுக. இந்தப் பக்கத்திலுள்ள எழுத்துக்களைக் கற்றுக் கொடுக்கும் விதத்தை அநுபந்தத்தில் பார்க்க.

பாடம் 10

உச்சரிப்பு விளக்கப் படங்கள்

ர ரா ரி ரீ ரு ரூ ரெ ரே ரை
ரொ ரோ ரௌ ர்

ன னா னி னீ னு னூ னெ னே
னை னொ னோ னௌ ன்

ல லா லி லீ லு லூ லெ லே
லை லொ லோ லௌ ல்

படம் 1. இதன் முன்னுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கு மேல்வாயின் முன்பாகத்தைத் தொடும்படி அழுத்தாமல் உச்சரிக்கவேண்டும்.

ற றா றி றீ று றூ றெ றே றை
றொ றோ றௌ ற்

ண ணா ணி ணீ ணு ணூ ணெ
ணே ணை ணொ ணோ ணௌ ண்

ள ளா ளி ளீ ளு ளூ ளெ ளே
ளை ளொ ளோ ளௌ ள்

படம் 2. இதன் முன்னுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கு மேல்வாயின் நடுப்பாகத்தைத் தொடும்படியாக அழுத்தி உச்சரிக்கவேண்டும்.

ழ ழா ழி ழீ ழு ழூ ழெ ழே
ழை ழொ ழோ ழௌ ழ்

படம் 3. இதன் முன்னுள்ள எழுத்தை உச்சரிக்கும்போது நாக்கு மேல்வாயின் கடைசிப்பாகத்தைத் தொடும்படியாக அதிகமாக அழுத்தி உச்சரிக்கவேண்டும்.

பாடம் 11

நெருங்கிய ஒலியுள்ள எழுத்துக்களை இரட்டை இரட்டையாக உச்சரித்து நுட்பமான ஒலி வேறுபாடுகளைத் தெரிந்துகொள்ளல்

ர-வரி ற-வரி எழுத்துக்களை ர-ற என்று இரட்டையாகவும் ன-வரி ண-வரி எழுத்துக்களை ன-ண என்று இரட்டையாகவும் ல-வரி ள-வரி எழுத்துக்களை ல-ள என்று இரட்டையாகவும், ழ-வரி எழுத்துக்களைத் தனியாகவும் சொல்லி, ஒலி வேறுபாடு களைத் தெரிந்துகொள்ளும்படி செய்க.

ர	—	ற	ன	—	ண	ல	—	ள	ழ
ரா	—	ரு	ஞ	—	ஞ	லா	—	ளா	ழா
ரி	—	றி	னி	—	ணி	லி	—	ளி	ழி
ரீ	—	றீ	னீ	—	ணீ	லீ	—	ளீ	ழீ
ரு	—	று	னு	—	ணு	லு	—	ளு	ழு
ரூ	—	றூ	னூ	—	ணூ	லூ	—	ளூ	ழூ
ரெ	—	றெ	னெ	—	ணெ	லெ	—	ளெ	ழெ
ரே	—	றே	னே	—	ணே	லே	—	ளே	ழே
ரை	—	றை	னை	—	ணை	லை	—	ளை	ழை
ரொ	—	றொ	னொ	—	ணொ	லொ	—	ளொ	ழொ
ரோ	—	றோ	னோ	—	ணோ	லோ	—	ளோ	ழோ
ரௌ	—	றௌ	னௌ	—	ணௌ	லௌ	—	ளௌ	ழௌ
ர்	—	ற்	ன்	—	ண்	ல்	—	ள்	ழ்

எழுத்துக்களில் பயிற்சி

1. கீழே கண்ட எழுத்துக்களில், குறில் நெடில் எழுத்துக் களை அதாவது நீட்டாமல் சொல்லும் எழுத்துக்களையும், நீட்டிச் சொல்லும் எழுத்துக்களையும் தனித்தனியே சொல்லுக. எடுத் தெழுதுக:—

ணு, கீ, ச, தூ, எ, ஞெ, ஞே, உ, ணெ, போ, ளூ, பூா, தொ.

2. கீழே கண்ட எழுத்துக்களில், அழுத்தாமல் சொல்லும் எழுத்துக்களையும், அழுத்திச் சொல்லும் எழுத்துக்களையும், அதிக மாக அழுத்திச் சொல்லும் எழுத்துக்களையும் தனித் தனியே சொல்லுக ; எடுத்தெழுதுக:—

ரா, னை, லு, ழை, ரோ, ஞே, லி, ழு, ழ, ள, னி, ரு, ணை, ளு, றோ, ணே, ளி, லை, னு, ல.

பாடம் 12

ன-வரி, ண-வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள்

(இரட்டை இரட்டையாக)

இந்தப் பாடத்தில் கண்ட சொற்களை, **அரன்–அரண்** என்று முறையே அழுத்தாமலும் அழுத்தியும், இரட்டை இரட்டையாகச் சொல்லும்படியும், எழுத்துக்கூட்டிச் சொல்லும்படியும், பார்த்து எழுதும்படியும் செய்க.

அரன்	— அரண்	குனி	— குணி
அவன்	— அவண்	கோன்	— கோண்
அனு	— அணு	சானம்	— சாணம்
அனை	— அணை	சுனை	— சுணை
அன்மை	— அண்மை	சுன்னம்	— சுண்ணம்
அன்னம்	— அண்ணம்	தனி	— தணி
ஆனி	— ஆணி	தன்	— தண்
ஆன்	— ஆண்	தன்மை	— தண்மை
இவன்	— இவண்	தன்னீர்	— தண்ணீர்
இனை	— இணை	தானி	— தாணி
உன்	— உண்	துனை	— துணை
ஊன்	— ஊண்	நான்	— நாண்
எவன்	— எவண்	பனி	— பணி
என்	— எண்	பனை	— பணை
என்னை	— எண்ணை	பன்னுதல்	— பண்ணுதல்
என்னால்	— எண்ணால்	பானம்	— பாணம்
ஏனை	— ஏணை	புனை	— புணை
ஏன்	— ஏண்	பேன்	— பேண்
கனி	— கணி	மனம்	— மணம்
கனம்	— கணம்	மன்	— மண்
கன்னி	— கண்ணி	மனை	— மணை
கன்னன்	— கண்ணன்	மன்னல்	— மண்ணல்
கனை	— கணை	மானம்	— மாணம்
கானம்	— காணம்	மான்	— மாண்
கானல்	— காணல்	வன்மை	— வண்மை
கான்	— காண்	வானம்	— வாணம்

பாடம் 13

ர-வரி ற-வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள் (இரட்டை இரட்டையாக)

...இந்தப் பாடத்தில் கண்ட சொற்களை **அரம்–அறம்** என்று முறையே அழுத்தாமலும் அழுத்தியும், இரட்டை இரட்டையாகச் சொல்லும்படியும், எழுத்துக்கூட்டிச் சொல்லும்படியும், பார்த்து எழுதும்படியும் செய்க.

அரம்	— அறம்	குரும்பி	— குறும்பி
அரி	— அறி	குரை	— குறை
அருகு	— அறுகு	கூரல்	— கூறல்
அருந்து	— அறுந்து	கூரிய	— கூறிய
அரை	— அறை	கூரை	— கூறை
இர	— இற	சீரிய	— சீறிய
இரங்கு	— இறங்கு	சொரி	— சொறி
இரத்தல்	— இறத்தல்	தரி	— தறி
இரு	— இறு	தாரு	— தாறு
இரை	— இறை	துரை	— துறை
உரல்	— உறல்	துரவு	— துறவு
உரி	— உறி	தெரி	— தெறி
உரு	— உறு	நரை	— நறை
உரை	— உறை	நிரை	— நிறை
ஊரு	— ஊறு	நெரி	— நெறி
எரி	— எறி	பரந்த	— பறந்த
எரிய	— எறிய	பரை	— பறை
ஏரி	— ஏறி	பரவை	— பறவை
ஒரு	— ஒறு	பாரை	— பாறை
கர	— கற	புரம்	— புறம்
கரி	— கறி	பொரி	— பொறி
கருத்து	— கறுத்து	மரம்	— மறம்
கரை	— கறை	மரை	— மறை
குரங்கு	— குறங்கு	மரி	— மறி
குரவர்	— குறவர்	மாரி	— மாறி
குருகு	— குறுகு	விரை	— விறை

பாடம் 14

ல-வரி, ள-வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள் இரட்டை இரட்டையாகவும், ழ-வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள் தனியாகவும்

இந்தப் பாடத்தில் கண்ட சொற்களை **அலகு–அளகு** என்று முறையே அழுத்தாமலும் அழுத்தியும், இரட்டை இரட்டையாகச் சொல்லும்படியும், **அழகு** முதலிய சொற்களை அதிகமாக அழுத்தித் தனியாகச் சொல்லும்படியும், எழுத்துக்கூட்டிச் சொல்லும்படியும், பார்த்து எழுதும்படியும் செய்க.

அலகு	— அளகு	அழகு
அலி	— அளி	அழி
அலை	— அளை	அழை
அல	— அள	அழ
ஆல்	— ஆள்	ஆழ்
இலை	— இளை	இழை
உலை	— உளை	உழை
ஒலி	— ஒளி	ஒழி
கலி	— களி	கழி
கலை	— களை	கழை
காலி	— காளி	காழி
காலை	— காளை	காழை
கிலி	— கிளி	கிழி
குலவி	— குளவி	குழவி
கோலி	— கோளி	கோழி
கோலை	— கோளை	கோழை
தலை	— தளை	தழை
தால்	— தாள்	தாழ்
தாலி	— தாளி	தாழி
நாலி	— நாளி	நாழி
மூலை	— மூளை	மூழை
வலி	— வளி	வழி
வாலி	— வாளி	வாழி
வாலை	— வாளை	வாழை
வால்	— வாள்	வாழ்
விலை	— விளை	விழை

* *247 எழுத்துக்களில் சொற்கள்*

பாடம் 15

குறில்-நெடில் எழுத்துக்களை முதலிற்கொண்ட இரண்டெழுத்துச் சொற்கள்

அலை	—	ஆறு	தெரு	—	தேள்
இடி	—	ஈவு	தொகை	—	தோடு
உமி	—	ஊது	தொலை	—	தோசை
எது	—	ஏன்	நரி	—	நாய்
—	—	ஐயா	நகை	—	நாடு
ஒரு	—	ஓலை	நடை	—	நாள்
—	—	ஔவை	நிதி	—	நீர்
கண்	—	காளை	நிலை	—	நீதி
கனி	—	காது	நுனி	—	நூல்
கிளி	—	கீரை	நெறி	—	நேர்
குடி	—	கூழ்	நொடி	—	நோய்
குகை	—	கூடை	பசி	—	பாடை
கெடி	—	கேலி	பனை	—	பாவி
—	—	கைலை	பிடி	—	பீலி
கொசு	—	கோடை	பிணி	—	பீதி
—	—	கௌரி	புலி	—	பூனை
சனி	—	சாதி	பெண்	—	பேய்
சதை	—	சாலை	பொடி	—	போதை
சிறு	—	சீடை	பொது	—	போர்
சுமை	—	சூது	மணி	—	மாடு
செடி	—	சேது	மிதி	—	மீன்
செவி	—	சேறு	முனி	—	மூலை
—	—	சைகை	மெய்	—	மேடு
சொல்	—	சோறு	—	—	மைனா
சொறி	—	சோலை	மொழி	—	மோர்
தடி	—	தாய்	—	—	மௌனி
தயை	—	தாலி	வலை	—	வாய்
திரி	—	தீவு	விதி	—	வீடு
துரை	—	தூது	வெளி	—	வேர்
துணை	—	தூசி	—	—	வைகை

* *சொற்களைக் கற்றுக்கொடுக்கும் விதத்தை அனுபந்தத்தில் பார்க்க*

பாடம் 16

குறில் நெடில் எழுத்துக்களை முதலிற்கொண்ட மூன்றெழுத்துச் சொற்கள்

அம்மை — ஆயாள்
அம்மி — ஆசான்
அணில் — ஆவணி
இதழ் — ஈரம்
இரவு — ஈசன்
இராணி — ஈசல்
உணவு — ஊருணி
உரல் — ஊற்று
உவமை — ஊனம்
எக்கு — ஏவல்
எமன் — ஏலம்
என்ன — ஏழ்மை
— — ஐவர்
ஒருமை — ஓணான்
ஒன்று — ஓடம்
கதவு — காவிரி
கவலை — காற்று
கிழவி — கீற்று
குடம் — கூளம்
கெண்டை — கேள்வி
— — கைகேயி
கொக்கு — கோவில்
— — கௌசலை
சங்கு — சாவடி
சிவன் — சீதேவி
சுக்கு — சூரன்
செம்பு — சேவல்
— — சைவம்
சொட்டு — சோளம்
தகடு — தாமரை
திண்டு — தீபம்

துண்டு — தூரம்
தென்னை — தேவன்
— — தைலம்
தொட்டி — தோப்பு
நகம் — நாக்கு
நிழல் — நீலம்
நிறம் — நீராவி
நுதல் — நூற்பு
நெற்றி — நேரம்
நொய்வு — நோன்பு
பழம் — பாவாடை
பிள்ளை — பீமன்
புதர் — பூட்டு
பெயர் — பேரன்
— — பையன்
பொம்மை — போர்வை
— — பௌவம்
மனம் — மாயம்
மிளகு — மீகான்
முயல் — மூடன்
மெழுகு — மேளம்
— — மையல்
மொச்சை — மோசம்
— — மௌனம்
யசோதை — யாகம்
யுவன் — யூதர்
வண்டி — வாசல்
விறகு — வீரம்
வெற்றி — வேலன்
— — வைரம்
— — வௌவால்

பாடம் 17

குறில்-நெடில் எழுத்துக்களை முதலிற்கொண்ட நான்கெழுத்துச் சொற்கள்

அரசன் — ஆலயம்
அழைப்பு — ஆர்வம்
இடுப்பு — ஈருள்ளி
இனிப்பு — ஈசானன்
உயர்வு — ஊக்கம்
உழவன் — ஊதியம்
எறும்பு — ஏற்றம்
எய்தல் — ஏக்கம்
— — ஐராவதி
ஒருவன் — ஓதுவான்
ஒன்பது — ஓட்டம்
கட்டில் — காற்றாடி
கள்வன் — காதலன்
கிழவன் — கீசகன்
குமரன் -- கூடாரம்
குரங்கு — கூட்டம்
கெருடன் — கேடயம்
— — கைலாசம்
கொத்தன் — கோதாவரி
— — கௌதமன்
சங்கிலி — சான்றோர்
சல்லடை — சாப்பாடு
சனியன் — சாமரம்
சிங்கம் — சீரகம்
சிறுவன் — சீமாட்டி
சுண்டெலி — சூரியன்
செம்மல் — சேவகன்
— — சைனியம்
சொக்கன் — சோதிடம்

— — சௌந்தரி
தகரம் — தாவரம்
திங்கள் — தீபாவளி
துரும்பு — தூக்கம்
தெய்வம் — தேங்காய்
— — தைரியம்
தொட்டில் — தோற்றம்
நகரம் — நாரணன்
நித்திரை — நீந்தல்
நுகர்வு — நூதனம்
நெருப்பு — நேபாளம்
பந்தல் — பாரதம்
பிரம்பு — பீதகம்
புத்தர் — பூர்வம்
புலவர் — பூட்டன்
பெருமாள் — பேச்சாளி
பொங்கல் — போதகர்
— — பௌர்ணமி
மனிதன் — மாணவன்
மிளகாய் — மீனாட்சி
முனிவர் — மூர்த்தி
மெய்யன் — மேம்பாடு
— — மைத்துனி
யமகம் — யாத்திரை
— — யௌவனம்
வணிகன் — வாலிபன்
வியாழன் — வீசனம்
வெகுமதி — வேளாண்மை
— — வையாபுரி

பாடம் 18

ட், ற் என்ற மெய்யெழுத்துக்களுக்குப்பின் எந்த மெய்யெழுத்தும் வரக்கூடாது; வந்தால் பிழையாகும்.

கீழ்க்கண்ட திருத்தமான உதாரணச் சொற்களைப் பாடம் பண்ணுக :—

அற்பம்	காட்சி	நட்பு
ஆட்சி	சற்குணம்	பற்பொடி
இயற்கை	சாட்சி	மட்பானை
உற்சாகம்	சிற்பி	மாட்சி
ஏற்பாடு	செயற்கை	மேற்கோள்
கற்பு	தெற்கு	வெட்கம்

பயிற்சி

கீழ்க்கண்டவற்றைத் திருத்தி எழுதுக :—

ஆட்ச்சி, அட்ச்சரம், அற்ப்புதம், ஆட்ச்சேபம், ஆற்க்காடு, இரட்ச்சிப்பு, உற்ச்சவம், கடற்க்கரை, கட்ச்சி, கட்ச்செவி, கற்க்கள், கற்க்கண்டு, காற்ப்பங்கு, கேட்ப்பேன், கொற்க்கை, கோட்ப்பாடு, சற்ப்புத்திரன், சிற்ப்பம், சூட்ச்சுமம், சொற்ப்பம், தட்ப்பம், தற்க்கொலை, தற்ச்சமயம், தோற்க்கருவி, தோட்ப்பட்டை, நட்ச்சத்திரம், நாற்க்காலி, நிற்க்க, நீட்ச்சி, நுட்ப்பம், நூற்ப்பு, நெற்க்களம், நெற்ப்பயிர், நோற்ப்பு, பட்ச்சம், பட்ச்சி, பயிற்ச்சி, பாற்க்காரன், பாற்க்கடல். பிற்ப்பகல், பிற்க்காலம், புட்ப்பம், பொற்க்காசு, பொற்க்குடம், மட்க்குடம், மற்ப்போர், மீட்ச்சி, மீட்ப்பு, முட்க்கள், முற்க்காலம், முற்ப்பகல், முட்ச்செடி, மேற்ப்படி, மோட்ச்சம், வரட்ச்சி, வாட்ப்படை, வாசற்ப்படி, விற்ப்பனை, வெட்ச்சி, வேட்க்கை, வேற்க்கை, வேற்ப்படை.

பாடம் 19

தமிழில் வழங்கும் வடமொழி (கிரந்த) எழுத்துக்கள் 65

ஜ	ஜா	ஜி	ஜீ	ஜு	ஜூ	ஜெ	ஜே	ஜை	ஜொ	ஜோ	ஜௌ	ஜ்
ஸ	ஸா	ஸி	ஸீ	ஸு	ஸூ	ஸெ	ஸே	ஸை	ஸொ	ஸோ	ஸௌ	ஸ்
ஷ	ஷா	ஷி	ஷீ	ஷு	ஷூ	ஷெ	ஷே	ஷை	ஷொ	ஷோ	ஷௌ	ஷ்
ஹ	ஹா	ஹி	ஹீ	ஹு	ஹூ	ஹெ	ஹே	ஹை	ஹொ	ஹோ	ஹௌ	ஹ்
க்ஷ	க்ஷா	க்ஷி	க்ஷீ	க்ஷு	க்ஷூ	க்ஷெ	க்ஷே	க்ஷை	க்ஷொ	க்ஷோ	க்ஷௌ	க்ஷ்

பாடம் 20

வடமொழி எழுத்துக்கள் கொண்ட பிறமொழிச் சொற்கள்

ஜாதி	இன்ஜின்	காலேஜ்	ஜாமீன்	நமஸ்காரம்
ஹரிஜனம்	ஜூலை	ஆஜர்	ஜாஸ்தி	ஸ்பெஷல்
ஜமாபந்தி	ஜவஹர்லால்	ஜமீந்தார்	ஸபாஷ் !	காங்கிரஸ்
ஜட்கா	நூர்ஜஹான்	ஜனவரி	ஜரிகை	ஸைக்கிள்
ஜலம்	ஜெபம்	ஜங்ஷன்	ஜூன்	போலீஸ்
ஜம்பம்	ஜைனர்	ஜவுளி	ஜெர்மனி	லைட்ஹவுஸ்
ஜாக்கிரதை	ராஜ்யம்	ஜமேதார்	சிவாஜி	ஸுபேதார்
ஜில்லா	ராஜினுமா	ஜெயில்	ரோஜா	ஆகஸ்டு
க்ஷணம்	க்ஷீணம்	பரீக்ஷை	க்ஷேத்திரம்	க்ஷௌரம்

பாடம் 21

தப்பிதமாய் உச்சரிப்பதால் தப்பிதமாக எழுதப் படும் சொற்களும், அவற்றின் திருத்தமும்

பிழை — திருத்தம்		பிழை — திருத்தம்	
ஆலேயம்	ஆலயம்	சமயல்	சமையல்
ஆக்ஷி	ஆட்சி	சிலதை	சிலவற்றை
எடையன்	இடையன்	சுவற்றை	சுவரை
எண்ணே	எண்ணெய்	சிலவு	செலவு
எம்பது	எண்பது	தீவாளி	தீபாவளி
எளநீ	இளநீர்	துகை	தொகை
ஏக்கிருய்	ஏய்க்கிருய்	நஞ்சை	நன்செய்
ஒம்பது	ஒன்பது	பத்துவரவு	பற்றுவரவு
ஒலக்கை	உலக்கை	ரொம்ப	நிரம்ப
ஒரல்	உரல்	நிகளம்	நீளம்
ஒடைப்பு	உடைப்பு	நெழல்	நிழல்
ஓச்சல்	ஓய்ச்சல்	நேத்து	நேற்று
கண்முழி	கண்விழி	பாச்சல்	பாய்ச்சல்
கடேசி	கடைசி	புட்டு	பிட்டு
கம்மாய்	கண்வாய்	புஞ்சை	புன்செய்
காத்தாடி	காற்ருடி	பேய்கிறது	பெய்கிறது
கார்த்து	காத்து	மனவி	மனேவி
காச்சல்	காய்ச்சல்	மாக்ஷி	மாட்சி
காக்ஷி	காட்சி	மேச்சல்	மேய்ச்சல்
கூரைமேய	கூரைவேய	மொழுகு	மெழுகு
கோர்த்து	கோத்து	முழுங்கு	விழுங்கு
கோர்வை	கோவை	வெத்தலே	வெற்றிலே

பாடம் 22

சொற்களுக்கு முதலில் வரக்கூடிய குறில்—நெடில் எழுத்துக்கள் மட்டும்

அ,	ஆ;	இ,	ஈ;	உ,	ஊ;	எ,	ஏ;	ஒ,	ஓ.
க,	கா;	கி,	கீ;	கு,	கூ;	கெ,	கே;	கொ,	கோ.
ச,	சா;	சி,	சீ;	சு,	சூ;	செ,	சே;	சொ,	சோ.
த,	தா;	தி,	தீ;	து,	தூ;	தெ,	தே;	தொ,	தோ.
ந,	நா;	நி,	நீ;	நு,	நூ;	நெ,	நே;	நொ,	நோ.
ப,	பா;	பி,	பீ;	பு,	பூ;	பெ,	பே;	பொ,	போ.
ம,	மா;	மி,	மீ;	மு,	மூ;	மெ,	மே;	மொ,	மோ.
வ,	வா	வி,	வீ;	...	...	வெ,	வே;	...	...

சொற்களில் பயிற்சி

22 ஆம் பாடத்திலுள்ள குறில்—நெடில் எழுத்துக்களை அ, ஆ ; இ, ஈ ; என்று இரட்டை இரட்டையாகச் சொல்லும்படி செய்க. முதல் வரிசை முடிந்ததும், இரண்டாவது வரிசை க, கா ; கி, கீ ; என்று இரட்டை இரட்டையாகச் சொல்லும்படி செய்க. இப்படி ஒவ்வொரு வரியாக குறில்—நெடில் எழுத்துக்களை இரட்டை இரட்டையாகச் சொல்லும்படி செய்க. பார்த்து எழுதும்படி செய்க ; பாராமல் எழுதும்படி செய்க.

பிறகு மாணவர்கள் தாங்களாகவே சொந்தத்தில் சொற்களைச் சொல்லும்படி செய்க. **அ**-வில் ஆரம்பிக்கிற ஒரு சொல் சொன்னவுடன் **ஆ**-வில் ஆரம்பிக்கிற ஒரு சொல் சொல்லவேண்டும். உதாரணமாக, **அணில்** என்று சொன்னவுடன் **ஆயாள்** என்று சொல்வதாம். எழுத்துக்கூட்டிச் சொல்லும்படியும் செய்க.

பிறகு மாணவர்களைப் பார்த்து கீழ்க்கண்டவாறு கேள்விகள் கேட்டு அறியவேண்டும் :—

(1) **அணில்** என்று சொல்லும்போது, **அ**-வை நீட்டிச் சொல்கிறாயா, நீட்டாமல் சொல்கிறாயா ?

(2) **ஆயாள்** என்பதில் **ஆ**-வை நீட்டிச் சொல்கிறாயா, நீட்டாமல் சொல்கிறாயா ?

(3) **அணில்** என்பதில் கடைசி எழுத்தாகிய **ல்**-ஐ அழுத்திச் சொல்கிறாயா, அழுத்தாமல் சொல்கிறாயா ?

(4) **ஆயாள்** என்பதில் கடைசி எழுத்தாகிய **ள்**-ஐ அழுத்திச் சொல்கிறாயா ? அழுத்தாமல் சொல்கிறாயா ?

(5) **பழம்** என்பது போன்ற சொற்களில் **ழ**-வரி எழுத்துக்களை எப்படி உச்சரிக்கிறாய் ?........என்று கேள்விகள் கேட்கும்போது, மாணவர்கள் சரியான பதிலைக் கூறிவிட்டால், அவர்கள் குறில்—நெடில் வேறுபாடுகளை உணர்ந்துகொண்டார்கள் என்பதும், 10-ஆம் பாடத்தில் கண்ட ஒலி வேறுபாடுகளையும் விளங்கிக் கொண்டார்கள் என்பதும், இவைகளில் பிழை எதுவும் விடமாட்டார்கள் என்பதும் நிச்சயமாகும்.

* சொற்றொடர்கள்

பாடம் 23

இயல்புச் சொற்றொடர்

இரண்டு சொற்கள் சேரும் போது எவ்வித விகாரமுமின்றிச் சேரும் சொற்றொடருக்கு இயல்புச் சொற்றொடர் என்று பெயர்.

நல்ல	+	காரியம்	=	நல்ல காரியம்
அழகிய	+	சட்டை	=	அழகிய சட்டை
இலை	+	தழை	=	இலை தழை
பெரிய	+	பையன்	=	பெரிய பையன்
வந்து	+	கொண்டு	=	வந்து கொண்டு
கணக்கு	+	வேலை	=	கணக்கு வேலை
உன்	+	பொருள்	=	உன் பொருள்
மண்	+	வேலை	=	மண் வேலை

பயிற்சி

1. கீழ்க்கண்ட இரு சொற்களைச் சேர்த்துச் சொற்றொடராக எழுதுக :—

வந்த	+	காரியம்	படித்த	+	பையன்
பெரிய	+	சட்டி	ஓடு	+	தண்ணீர்
ஆறு	+	முகம்	தின்	+	பண்டம்
உன்	+	கை	உண்	+	பொருள்
கண்	+	காட்சி	என்	+	சோறு
அடி	+	பிடி	செடி	+	கொடி

2. கீழ்க்கண்ட சொற்றொடரைப் பிரித்து இரு சொற்களாக எழுதுக :—

ஆடு மாடு	வீடு வாசல்
வெந்த சோறு	குளிர்ந்த காற்று
பறந்தது கிளி	உன் சட்டை
உனது தாய்	மாகாளி
மலை நாடு	அந்த மோதிரம்
எலி வலை	குப்பை வண்டி

* சொற்றொடரைக் கற்றுக் கொடுக்கும் விதத்தை அனுபந்தத்தில் பார்க்க.

விகாரச் சொற்றொடர்கள்

பாடம் 24

தோன்றல் சொற்றொடர்

இரு சொற்கள் சேரும் போது இடையில் மெய்யெழுத்துத் தோன்றும் சொற்றொடருக்குத் தோன்றல் சொற்றொடர் என்று பெயர். இரு சொற்களுக்கிடையில் **க், ச், த், ப்**–ஆகிய மெய்யெழுத்துக்களில் ஏதாவதொன்று தோன்றும். **ங், ஞ், ந், ம்** என்பவைகளில் ஒன்று அபூர்வமாய்த் தோன்றும். இந்த எட்டு மெய்யெழுத்துக்களையும் உதாரணத்துடன் மனப்பாடம் செய்க.

பச்சை	+	கிளி	=	பச்சைக் கிளி
தமிழ்	+	சொல்	=	தமிழ்ச் சொல்
வாழை	+	தண்டு	=	வாழைத் தண்டு
தை	+	பொங்கல்	=	தைப் பொங்கல்
மா	+	கோலம்	=	மாக் கோலம்
இ	+	ஙனம்	=	இங் ஙனம்
மெய்	+	ஞானம்	=	மெய்ஞ் ஞானம்
இ	+	மாடு	=	இம் மாடு

பயிற்சி

1. இரு சொற்களைச் சேர்த்துச் சொற்றொடராக எழுதுக :-

வாழை	+	காய்	கத்தரி	+	பூ
பூ	+	சூடு	மா	+	தூள்
மா	+	கனி	தமிழ்	+	தென்றல்
தேர்	+	தட்டு	எ	+	மனிதன்
இ	+	நாய்	அ	+	ஙனம்
கை	+	சரக்கு	கை	+	பெண்
போக	+	போக	நாய்	+	கால்

2. இரு சொற்களாகப் பிரித்தெழுதுக :—

மாம்பழம்	மாச் சுக்கு
எக்காலம்	நார்க்கட்டில்
அந்தப்படி	பாழ்ங்கிணறு
எவ்வீடு	மெய்ப் பொருள்
தமிழ்க்கவி	எங்நாடு

பாடம் 25

கெடுதல் சொற்றொடர்

இரு சொற்கள் சேரும்போது இடையில் ஒரு மெய்யெழுத்து மறைந்துவிடுஞ் சொற்றொடருக்குக் கெடுதல் சொற்றொடர் என்று பெயர். முதற் சொல்லின் கடைசியில் உள்ள **ம், ன், ர்**—என்ற எழுத்து கெடும். இந்த எழுத்துக்களை மனப்பாடம் செய்க. முதற் சொல்லின் இறுதி எழுத்து கெடுவதற்கே இங்கு உதாரணமும் பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளன.

மரம்	+	வேர்	=	மரவேர்
குணம்	+	சீலன்	=	குணசீலன்
நளன்	+	வெண்பா	=	நள வெண்பா
மதம்	+	மாற்றம்	=	மத மாற்றம்
தங்கம்	+	மோதிரம்	=	தங்க மோதிரம்
வீமன்	+	பாகம்	=	வீம பாகம்
வள்ளுவர்	+	மாலை	=	வள்ளுவ மாலை
ஞானம்	+	நூல்	=	ஞான நூல்

பயிற்சி

1. *இரு சொற்களைச் சேர்த்துச் சொற்றொடராக எழுதுக.*

ஞானம்	+	சூரியன்	சிவன்	+	புராணம்
நளன்	+	பாகம்	கந்தன்	+	புராணம்
வானம்	+	நூல்	சைவம்	+	நெறி
பாவம்	+	புண்ணியம்	மதம்	+	வைராக்கியம்
மணம்	+	மகன்	மனம்	+	வேதனை
நிலம்	+	வளம்	வானம்	+	வில்
மரம்	+	நார்	நீலம்	+	மேகம்

2. *இரு சொற்களாகப் பிரித்தெழுதுக.*

மணவினை	மணமகள்
முகவாட்டம்	கணநாதன்
வாரவெளியீடு	ஞானபோதம்
குறவஞ்சி	கந்தவேள்
சிவபிரான்	கருமகாண்டம்
குணதோசம்	வனசுந்தரி
வனவிலங்கு	தங்கநாணயம்

பாடம் 26

திரிதல் சொற்றொடர்

இரு சொற்கள் சேரும்போது ஒரு மெய்யெழுத்து வேறொரு மெய்யெழுத்தாக மாறி வருஞ் சொற்றொடருக்குத் திரிதல் சொற்றொடர் என்று பெயர். முதற் சொல்லின் கடைசி எழுத்துத் திரிவதற்கு மாத்திரம் இங்கு உதாரணமும் பயிற்சியும் தரப்பட்டுள்ளன. **ல்—ற்** ஆகவும், **ள்—ட்** ஆகவும் மாறும். அபூர்வமாக **ல்—ன்** ஆகவும், **ள்—ண்** ஆகவும் மாறும். **ன்—ற்** ஆகவும் **ண்—ட்** ஆகவும் மாறும். **ம்** என்பது வருஞ் சொல்லுக்கு ஏற்றாற்போல **ங், ஞ், ந்,** ஆகியவற்றில் ஒன்றாக மாறும். இவைகளை மனப்பாடம் செய்க.

பல் + பொடி	=	பற்பொடி
முள் + செடி	=	முட்செடி
கல் + மாரி	=	கன்மாரி
நாள் + மலர்	=	நாண்மலர்
கண் + செவி	=	கட்செவி
பொன் + கொடி	=	பொற்கொடி
மனம் + குளிர	=	மனங்குளிர
நிலம் + சார்ந்த	=	நிலஞ்சார்ந்த
நம் + நூல்	=	நந்நூல்
அகம் + தெளிய	=	அகந்தெளிய

பயிற்சி

(1) இரு சொற்களைச் சேர்த்துச் சொற்றொடராக எழுதுக:

நெல் + களம்	கள் + குடம்
சொல் + மாலை	முள் + செடி
பொன் + பிரம்பு	மண் + சட்டி
தோல் + கருவி	தோள் + பட்டை
மனம் + கசந்து	தவம் + செய்து
மனம் + தளர்ந்து	பொன் + காசு

(2) இரு சொற்களாகப் பிரித்தெழுதுக:

நற்கருணை	முட்புதர்
மட்குடம்	ஆட்பெருக்கம்
கற்பாறை	பொற்குடம்
மட்பானை	வாட்படை
பாற்குடம்	மனஞ்சோர்ந்து
வருங்காலம்	முற்பகல்

பாடம் 27

* பல விகாரச் சொற்றொடர்கள்

(பல உட்பிரிவுகளுடன்)

முந்தின பாடங்களில் கொடுக்கப்படாத மற்ற வகை விகாரச் சொற்றொடர்களுக்கு இந்தப் பாடத்தில் உதாரணமும் பயிற்சியும் கொடுத்துள்ளோம். உதாரணங்களை நன்கு மனப்பாடம் செய்து பயிற்சிகளைச் செய்து சரிபார்க்க.

(முதலாவது சொல் **நிலைமொழி** என்றும், அதனுடன் சேருகிற சொல் **வருமொழி** என்றும், கடைசி எழுத்து **ஈறு** என்றும், முதலாவது எழுத்து **முதல்** என்றும் குறிக்கப்பட்டுள்ளன.)

---

1. **இ, ஈ, ஐ**— என்ற உயிரொலியுடன் உயிர் சேரும்போது இடையில் **ய்** தோன்றும். அந்த **ய்**-யின்மேல் வருகிற உயிர் ஏறி, உயிர் மெய்யாகும்.—

மணி + அழகு	=	**மணியழகு**
தீ + எரியும்	=	**தீயெரியும்**
பனை + ஓலை	=	**பனையோலை**

2. **இ, ஈ, ஐ**—தவிர வேறு உயிருடன் உயிர் சேரும்போது இடையில் **வ்** தோன்றும். அந்த **வ்**-வின்மேல் வருகிற உயிரேறி, உயிர்மெய்யாகும்:—

பூ + அழகு	=	**பூவழகு**
கோ + இல்	=	**கோவில்**
சே + உழவு	=	**சேவுழவு**
தே + ஆரம்	=	**தேவாரம்**
பல + ஆறு	=	**பலவாறு**
அந்தோ + என	=	**அந்தோவென**
காக்கா + உடன்	=	**காக்காவுடன்**

3. **அந்த, இந்த, எந்த**—எனும் பொருள்தரும் **அ, இ, எ**, என்ற உயிருடன் உயிர் சேரும்போது இடையில் **வ்** இரட்டித்துத் தோன்றும். வருமொழி முதலில் **ய**–வரி எழுத்து இருப்பின் **வ்** மாத்திரம் தோன்றும்:—

---

* இவ்வகைச் சொற்றொடர்களில் நன்கு தேர்ச்சி பெறுவதற்கான வழியை அனுபந்தத்தில் பார்க்க.

அ + அணி	=	அவ்வணி
இ + இதழ்	=	இவ்விதழ்
எ + ஆடு	=	எவ்வாடு
அ + ஆறு	=	அவ்வாறு
இ + யானை	=	இவ்யானை

4. *நிலை மொழியில் ஒரே குறிலுக்குப் பின்னுள்ள* **ண், ன், ல், ள், ய், ம்—** *என்ற மெய்யெழுத்துக்கள் வருமொழி முதலில் உயிர் வந்தால் இரட்டிக்கும்.*

கண் + அழகு	=	கண்ணழகு
பொன் + ஆடை	=	பொன்னாடை
சொல் + ஆற்றல்	=	சொல்லாற்றல்
எள் + அளவும்	=	எள்ளளவும்
பொய் + உடம்பு	=	பொய்யுடம்பு
அம் + ஐ	=	அம்மை (*அம் = மேகம்*)

5. *வருமொழி முதலில் உயிர்வரின் நிலை மொழியீற்றிலுள்ள* * **குற்றியலுகரம்** *கெடும். அபூர்வமாக* **முற்றியலுகரமும்** *கெடும்.*

வாக்கு + உரிமை	=	வாக்குரிமை
பேச்சு + இல்லை	=	பேச்சில்லை
எட்டு + அடி	=	எட்டடி
நாடு + எங்கே	=	நாடெங்கே
ஆறு + இல்லாத	=	ஆறில்லாத
உப்பு + எடுத்தான்	=	உப்பெடுத்தான்
பத்து + உடன்	=	பத்துடன்
கதவு + அடை	=	கதவடை
உழவு + எங்கே	=	உழவெங்கே

6. *வருமொழி முதலில் உள்ள* **'த்'** *திரிதல் (***ற்** *அல்லது* **ட்** *ஆகத் திரிதல்)*

மான் + தோல்	=	மான்றோல்
தென் + திசை	=	தென்றிசை
மண் + தலம்	=	மண்டலம்
திண் + தோள்	=	திண்டோள்

---

* **குற்றியலுகரம், முற்றியலுகரம்** *என்னவென்பதை அனுபந்தத்தில் பார்க்க.*

7. *வருமொழி முதலில் உள்ள* '**ந்**' *திரிதல்* ('**ன்**' *அல்லது* '**ண்**' *ஆகத் திரிதல்*).

தன் + நலம்	=	**தன்னலம்**
பொன் + நாடு	=	**பொன்னாடு**
கண் + நீர்	=	**கண்ணீர்**
விண் + நாடு	=	**விண்ணாடு**

8. *நிலைமொழியீறும் வருமொழி முதலும் ஆக இரண்டெழுத்தும் திரிதல்.* (**ல், ள், ன், ண்**-*என்பவற்றிற்குப் பின்* **த்** *வர இரண்டும் திரிதல்.* **ல், ள்** *என்பவற்றிற்குப்பின்* **ந்** *வர இரண்டும் திரிதல்*) :—

சொல் + தொடர்	=	**சொற்றொடர்**
முள் + தண்டு	=	**முட்டண்டு**
பொன் + தகடு	=	**பொற்றகடு**
மண் + தூண்	=	**மட்டூண்**
கல் + நெஞ்சு	=	**கன்னெஞ்சு**
எள் + நெய்	=	**எண்ணெய்**

9. *ஒரே குற்றெழுத்தைச் சார்ந்து வராத* **ல், ள், ன், ண்**-*என்பவற்றிற்குப் பின்* **ந்** *வரின் நிலைமொழியீறு கெடும். வருமொழி முதல் திரியும்.***ல், ள்**-*என்பவற்றிற்குப் பின்* **த்** *வரின் நிலைமொழியீறு கெடுதலும் வருமொழி முதல் திரிதலுமாம்* :—

தோன்றல் + நல்லவன்	=	**தோன்றனல்லவன்**
வேள் + நல்லன்	=	**வேணல்லன்**
கோன் + நல்லவன்	=	**கோனல்லவன்**
பூண் + நூல்	=	**பூணூல்**
தோன்றல் + தீயன்	=	**தோன்றறீயன்**
நாள் + தோறும்	=	**நாடோறும்**

10. **டு, று**-*என்று முடியும் (நெடிற்றொடர், உயிர்த் தொடர்க் குற்றியலுகர வீற்றுச்) சொற்களுடன் வேறு சொற்கள் சேரும் போது* **ட், ற்**-*இரட்டிக்கும்* :—

மாடு + கொம்பு	=	**மாட்டுக்கொம்பு**
ஆடு + இறைச்சி	=	**ஆட்டிறைச்சி**
யாறு + நீர்	=	**யாற்றுநீர்**
நூறு + கணக்காக	=	**நூற்றுக்கணக்காக**
முரடு + மனிதன்	=	**முரட்டு மனிதன்**
வயிறு + கடுப்பு	=	**வயிற்றுக்கடுப்பு**

11. கு, சு, டு, து, பு, று-என்று முடியும் (மென்றொடர்க் குற்றியலுகர வீற்றுச்) சொற்களில் ஈற்றுக்கு முந்தின மெல்லெழுத்து வல்லெழுத்தாக மாறும்.

நஞ்சு + பை	=	நச்சுப்பை
மருந்து + பை	=	மருந்துப் பை
கரும்பு + கட்டி	=	கருப்புக்கட்டி
கன்று + ஆ	=	கற்ரு

12 மை-என்று முடியும் பண்புப் பெயர்ச் சொற்கள் பல விதமாக மாறி வருமொழியுடன் சேரும் :—

செம்மை + கல் செம் + கல்	=	செங்கல்
செழுமை + சுடர் செழும் + சுடர்	=	செழுஞ்சுடர்
பெருமை + ஊர்	=	பேரூர் பெருமையூர்
பெருமை + புகழ்	=	பெரும்புகழ்
அருமை + உயிர்	=	ஆருயிர் அருமையுயிர்
அருமை + காரியம்	=	அருங்காரியம் . . .
சிறுமை + உயிர்	=	சிற்றுயிர் சிறுமையுயிர்
சிறுமை + பொருள்	=	சிறுபொருள்
பசுமை + தமிழ்	=	பைந்தமிழ் பசுமைத்தமிழ்
கருமை + மேனி	=	கார்மேனி கருமேனி கருமைமேனி
முதுமை + ஊர்	=	மூதூர் முதுமையூர்
வெம்மை + உயிர்	=	வெவ்வுயிர்
நடுமை + ஆறு	=	நட்டாறு
இனிமை + சொல்	=	இன்சொல்

13. *சில எண்ணுப் பெயர்கள் சேரும் விதம் :—*

ஒன்று	+	ஒன்று	=	ஒவ்வொன்று
எட்டு	+	பத்து	=	எண்பது
மூன்று	+	நூறு	=	முந்நூறு
ஐந்து	+	நூறு	=	ஐந்நூறு
நான்கு	+	நூறு	=	நானூறு
மூன்று	+	தமிழ்	=	முத்தமிழ்
மூன்று	+	மூன்று	=	மும்மூன்று
நான்கு	+	நான்கு	=	நன்னான்கு
ஐந்து	+	ஐந்து	=	ஐயைந்து
ஏழு	+	ஏழு	=	எவ்வேழு
பத்து	+	பத்து	=	பப்பத்து
ஐந்து	+	பூதம்	=	ஐம்பூதம்
ஐந்து	+	வகை	=	ஐவகை
எட்டு	+	வகை	=	எண்வகை
மூன்று	+	வேந்தர்	=	மூவேந்தர்
நான்கு	+	மணி	=	நான்மணி

14. *சில திசைப் பெயர்கள் சேரும் விதம் :—*

வடக்கு	+	கிழக்கு	=	வடகிழக்கு
வடக்கு	+	திசை	=	வடதிசை
வடக்கு	+	மலை	=	வடமலை
குணக்கு	+	கடல்	=	குணகடல்
குடக்கு	+	நாடு	=	குடநாடு
கிழக்கு	+	திசை	=	கீழ்த்திசை
கிழக்கு	+	பாக்கம்	=	கீழ்ப்பாக்கம்
தெற்கு	+	கிழக்கு	=	தென்கிழக்கு
தெற்கு	+	மலை	=	தென்மலை
மேற்கு	+	கடல்	=	மேல்கடல்
மேற்கு	+	திசை	=	மேற்றிசை
மேற்கு	+	வீதி	=	மேல்வீதி
எட்டு	+	திசை	=	எண்டிசை
நான்கு	+	திசை	=	நாற்றிசை
தெற்கு	+	திசை	=	தென்றிசை
மேற்கு	+	ஊர்	=	மேலூர்
தெற்கு	+	வடக்கு (நீளம்)	=	தென் வடல் (நீளம்)
கிழக்கு	+	மேற்கு (நீளம்)	=	கிழமேல் (நீளம்)

15. *சில சிறப்புப் பெயர்கள் சேரும் விதம் :—*

இராமன்	+	இலட்சுமணன்	=	இராம லட்சுமணர்
சூரியன்	+	சந்திரன்	=	சூரிய சந்திரர்
அண்ணன்	+	தம்பி	=	அண்ணன் தம்பிமார்
தாய்	+	தந்தை	=	தாய் தந்தையர்

16. ம் *என்று முடியும் சொற்களின் முன் வல்லினமும், உயிரினமும் சேரும் விதம் :—*

மரம்	+	கிளை	=	மரக்கிளை
நிலம்	+	பரப்பு	=	நிலப்பரப்பு
மரம்	+	அடி	=	மரவடி
பவளம்	+	இதழ்	=	பவளவிதழ்
நிலம்	+	அறை	=	நிலவறை

17. *பலவிதமான விகாரம் அடையும் அபூர்வச் சொற்றொடர் :-*

தென்னை	+	குலை	=	தென்னங்குலை
பனை	+	காய்	=	பனங்காய்
தாழை	+	பூ	=	தாழம் பூ
வேம்பு	+	பழம்	=	வேப்பம்பழம்
புளி	+	காய்	=	புளியங்காய்
எலுமிச்சை	+	மரம்	=	எலுமிச்சமரம்
ஆவிரை	+	வேர்	=	ஆவிரவேர்
ஆவிரை	+	கொழுந்து	=	ஆவிரங் கொழுந்து
தெங்கு	+	காய்	=	தேங்காய்
வேறு	+	வேறு	=	வெவ்வேறு
எப்பொழுது	+	எப்பொழுது	=	எவ்வெப்பொழுது
அவனே	+	அழகன்	=	அவனேயழகன்
நேற்று	+	பொழுது	=	நேற்றைப் பொழுது
பண்டு	+	காலம்	=	பண்டைக் காலம்
அன்று	+	பொழுது	=	அற்றைப் பொழுது
பூ	+	கொடி	=	பூக்கொடி, பூங்கொடி
சே	+	அடி	=	சேவடி, சேயடி
பல	+	பல	=	பல பல, பலப்பல, பற்பல

சில + சில	=	சில சில சிலச் சில சிற்சில
பல + கலை	=	பலகலை, பல்கலை
சில + நாள்	=	சிலநாள், சின்னாள்
பல + நாள்	=	பலநாள், பன்னாள்
அல் + திணை	=	அஃறிணை
பல + துளியாறு	=	பஃறுளியாறு

பயிற்சி

1. *கீழ்க்கண்ட சொற்களைச் சேர்த்துச் சொற்றொடராக எழுதுக :—*

வேலை	+	ஆட்கள்	மூன்று	+	சங்கம்
பூ	+	உடன்	மேற்கு	+	புரம்
கோ	+	ஐ	எட்டு	+	கோணம்
தே	+	ஒடு	வடக்கு	+	கிழக்கு
அ	+	இடம்	சோமன்	+	சூரியன்
திரு	+	அடி	முரடு	+	குதிரை
எ	+	யானை	இரும்பு	+	சட்டை
கண்	+	எரிச்சல்	பனை	+	பழம்
சொல்	+	அருமை	தீ	+	அணை
தன்	+	அளவு	மலை	+	எலி
எள்	+	அருமை	நா	+	எடுத்தான்
நெய்	+	ஆடை	பா	+	இனம்
காசு	+	எடு	எ	+	காலம்
போக்கு	+	இன்றி	பல	+	ஆறு
வாழ்வு	+	எது	எ	+	ஆறு
மான்	+	தலை	மண்	+	அளவு
முன்	+	தானை	வில்	+	ஆள்
தண்	+	தாமரை	பொன்	+	ஆடை
என்	+	நாடு	உள்	+	ஒளி
கண்	+	நீர்	பொய்	+	உடல்
நல்	+	நூல்	நாடு	+	எங்கே
நல்	+	தாமரை	அளவு	+	இன்றி
புல்	+	நுனி	தாழ்வு	+	எங்கே
மேல்	+	நாள்	மீன்	+	தோல்
வீண்	+	நாள்	விண்	+	தலம்

பொன்	+	தாமரை	பூ	+	கை
தென்	+	நாடு	செம்மை	+	தாமரை
தண்	+	நீர்	வெறுமை	+	உடம்பு
தெள்	+	நீர்	கொடுமை	+	கோல்
எள்	+	துணையும்	பசுமை	+	பொன்
முள்	+	நுனி	மரம்	+	பலகை
கோள்	+	நிலை	நிலம்	+	அளவு
வான்	+	நிலை	மாடு	+	தோல்
ஐந்து	+	கணை	எலுமிச்சை	+	காய்
கிழக்கு	+	கோடி	கல்	+	சட்டி
தெற்கு	+	மேற்கு	எள்	+	துவையல்
கிழக்கு	+	மேற்கு	பூ	+	பொழில்
மாமன்	+	மாமி	கருமை	+	மேகம்
சோறு	+	வளம்	வெறுமை	+	இலை
கரும்பு	+	வில்	பெருமை	+	புகழ்
புளி	+	பட்டை	பசுமை	+	தாள்
தாழை	+	குடை	மரம்	+	கொப்பு
நாய்	+	யாது	புறம்	+	இதழ்
கல்	+	தூண்	ஆறு	+	நீர்

2. *கீழ்க்கண்ட சொற்றொடர்களை இரு சொற்களாகப் பிரித்தெழுதுக :—*

பசுவுடன்	நற்றுணை
விலையேற்றம்	பொற்றொடி
எவ்யானை	நன்னூல்
கண்ணொளி	தெண்ணீர்
பல்லழகு	வெண்ணெய்
வெள்ளாடு	கருந்தேள்
மெய்யன்பு	அவ்வாறு
மாசில்லை	ஈயோட்டம்
நாவுக்கரசர்	இவ்யாக்கை
அரன்றலை	என்னப்பன்
தண்டமிழ்	சொல்லாற்றல்
தன்னலம்	புள்ளினம்
கண்ணீர்	நெய்யரி

வீடெங்கே	மரப்பொந்து
தாழ்வின்றி	ஆட்டுத்தலை
முருகன்றுணை	மரப்பட்டை
வெண்டாமரை	நாயாது
பொன்னகர்	அஃறிணை
தண்ணீர்	பற்பல
எட்டுணையும்	நாடோறும்
மட்டூண்	ஆரமுதம்
தொன்னூல்	நட்டாறு
எண்ணெய்	மேனாடு
செங்கோல்	நீணெறி
பைந்தமிழ்	மூவுலகு
பேருணவு	நான்மறை
சிற்றூறு	ஐங்கரன்
மேனாள்	கீழ்த்திசை
சேணின்று	தென்னாடு
முச்சுடர்	பூம்பந்தல்
நான்முகன்	நகுல சகாதேவர்
ஐம்புலன்	ஆவிரஞ் செடி
கீழ்நாடு	தென்னங்கீற்று
மேற்றிசை	வயிற்றுவலி
பூச்செடி	நச்சுப்பொய்கை
பரதசத்துருக்கனர்	வட்ட வாழி
புளியம்பட்டை	மாட்டுத்தோல்
பனங்கிழங்கு	மரக்கட்டை
நாட்டுவளம்	சிற்சில
இருப்புத்தூண்	தோன்றறீயன்

பாடம் 28

மெய்யும் + உயிருங்கூடிய உயிர்மெய்-யெழுத்துக்கள்

க் + அ = க	ங் + அ = ங	ச் + அ = ச
க் + ஆ = கா	ங் + ஆ = ஙா	ச் + ஆ = சா
க் + இ = கி	ங் + இ = ஙி	ச் + இ = சி
க் + ஈ = கீ	ங் + ஈ = ஙீ	ச் + ஈ = சீ
க் + உ = கு	ங் + உ = ஙு	ச் + உ = சு
க் + ஊ = கூ	ங் + ஊ = ஙூ	ச் + ஊ = சூ
க் + எ = கெ	ங் + எ = ஙெ	ச் + எ = செ
க் + ஏ = கே	ங் + ஏ = ஙே	ச் + ஏ = சே
க் + ஐ = கை	ங் + ஐ = ஙை	ச் + ஐ = சை
க் + ஒ = கொ	ங் + ஒ = ஙொ	ச் + ஒ = சொ
க் + ஓ = கோ	ங் + ஓ = ஙோ	ச் + ஓ = சோ
க் + ஔ = கௌ	ங் + ஔ = ஙௌ	ச் + ஔ = சௌ
ஞ் + அ = ஞ	ட் + அ = ட	ண் + அ = ண
ஞ் + ஆ = ஞா	ட் + ஆ = டா	ண் + ஆ = ணா
ஞ் + இ = ஞி	ட் + இ = டி	ண் + இ = ணி
ஞ் + ஈ = ஞீ	ட் + ஈ = டீ	ண் + ஈ = ணீ
ஞ் + உ = ஞு	ட் + உ = டு	ண் + உ = ணு
ஞ் + ஊ = ஞூ	ட் + ஊ = டூ	ண் + ஊ = ணூ
ஞ் + எ = ஞெ	ட் + எ = டெ	ண் + எ = ணெ
ஞ் + ஏ = ஞே	ட் + ஏ = டே	ண் + ஏ = ணே
ஞ் + ஐ = ஞை	ட் + ஐ = டை	ண் + ஐ = ணை
ஞ் + ஒ = ஞொ	ட் + ஒ = டொ	ண் + ஒ = ணொ
ஞ் + ஓ = ஞோ	ட் + ஓ = டோ	ண் + ஓ = ணோ
ஞ் + ஔ = ஞௌ	ட் + ஔ = டௌ	ண் + ஔ = ணௌ

த்+அ = த	ந்+அ = ந	ப்+அ = ப
த்+ஆ = தா	ந்+ஆ = நா	ப்+ஆ = பா
த்+இ = தி	ந்+இ = நி	ப்+இ = பி
த்+ஈ = தீ	ந்+ஈ = நீ	ப்+ஈ = பீ
த்+உ = து	ந்+உ = நு	ப்+உ = பு
த்+ஊ = தூ	ந்+ஊ = நூ	ப்+ஊ = பூ
த்+எ = தெ	ந்+எ = நெ	ப்+எ = பெ
த்+ஏ = தே	ந்+ஏ = நே	ப்+ஏ = பே
த்+ஐ = தை	ந்+ஐ = நை	ப்+ஐ = பை
த்+ஒ = தொ	ந்+ஒ = நொ	ப்+ஒ = பொ
த்+ஓ = தோ	ந்+ஓ = நோ	ப்+ஓ = போ
த்+ஔ = தௌ	ந்+ஔ = நௌ	ப்+ஔ = பௌ
ம்+அ = ம	ய்+அ = ய	ர்+அ = ர
ம்+ஆ = மா	ய்+ஆ = யா	ர்+ஆ = ரா
ம்+இ = மி	ய்+இ = யி	ர்+இ = ரி
ம்+ஈ = மீ	ய்+ஈ = யீ	ர்+ஈ = ரீ
ம்+உ = மு	ய்+உ = யு	ர்+உ = ரு
ம்+ஊ = மூ	ய்+ஊ = யூ	ர்+ஊ = ரூ
ம்+எ = மெ	ய்+எ = யெ	ர்+எ = ரெ
ம்+ஏ = மே	ய்+ஏ = யே	ர்+ஏ = ரே
ம்+ஐ = மை	ய்+ஐ = யை	ர்+ஐ = ரை
ம்+ஒ = மொ	ய்+ஒ = யொ	ர்+ஒ = ரொ
ம்+ஓ = மோ	ய்+ஓ = யோ	ர்+ஓ = ரோ
ம்+ஔ = மௌ	ய்+ஔ = யௌ	ர்+ஔ = ரௌ

ல் + அ = ல	வ் + அ = வ	ழ் + அ = ழ
ல் + ஆ = லா	வ் + ஆ = வா	ழ் + ஆ = ழா
ல் + இ = லி	வ் + இ = வி	ழ் + இ = ழி
ல் + ஈ = லீ	வ் + ஈ = வீ	ழ் + ஈ = ழீ
ல் + உ = லு	வ் + உ = வு	ழ் + உ = ழு
ல் + ஊ = லூ	வ் + ஊ = வூ	ழ் + ஊ = ழூ
ல் + எ = லெ	வ் + எ = வெ	ழ் + எ = ழெ
ல் + ஏ = லே	வ் + ஏ = வே	ழ் + ஏ = ழே
ல் + ஐ = லை	வ் + ஐ = வை	ழ் + ஐ = ழை
ல் + ஒ = லொ	வ் + ஒ = வொ	ழ் + ஒ = ழொ
ல் + ஓ = லோ	வ் + ஓ = வோ	ழ் + ஓ = ழோ
ல் + ஔ = லௌ	வ் + ஔ = வௌ	ழ் + ஔ = ழௌ

ள் + அ = ள	ற் + அ = ற	ன் + அ = ன
ள் + ஆ = ளா	ற் + ஆ = றா	ன் + ஆ = னா
ள் + இ = ளி	ற் + இ = றி	ன் + இ = னி
ள் + ஈ = ளீ	ற் + ஈ = றீ	ன் + ஈ = னீ
ள் + உ = ளு	ற் + உ = று	ன் + உ = னு
ள் + ஊ = ளூ	ற் + ஊ = றூ	ன் + ஊ = னூ
ள் + எ = ளெ	ற் + எ = றெ	ன் + எ = னெ
ள் + ஏ = ளே	ற் + ஏ = றே	ன் + ஏ = னே
ள் + ஐ = ளை	ற் + ஐ = றை	ன் + ஐ = னை
ள் + ஒ = ளொ	ற் + ஒ = றொ	ன் + ஒ = னொ
ள் + ஓ = ளோ	ற் + ஓ = றோ	ன் + ஓ = னோ
ள் + ஔ = ளௌ	ற் + ஔ = றௌ	ன் + ஔ = னௌ

பாடம் 29

சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றை முதலெழுத்துக்களால் எழுதுதல்

கடவுள்	=	க்அ ட்அ வ்உ ள்
மாணிக்கம்	=	ம்ஆ ண்இ க் க்அ ம்
சொப்பனம்	=	ச்ஒ ப் ப்அ ன்அ ம்
பெருங்காற்று	=	ப்எ ர்உங் க்ஆ ற் ற்உ
சிறுகுழந்தை	=	ச்இ ற்உ க்உ ழ்அ ந் த்ஐ
வெள்ளிக்கிண்ணம்	=	வ்எ ள் ள்இ க் க்இண் ண்அ ம்
சுண்ணும்புச்சுவர்	=	ச்உ ண் ண்ஆ ம் ப்உ ச் ச்உ வ்அ ர்
மதிலைத் தாண்டு	=	ம்அ த்இ ல்ஐ த் த்ஆ ண் ட்உ
கடவுள் படைக்கிறுர்	=	க்அ ட்அ வ்உ ள் ப்அ ட்ஐ க் க்இ ற்ஆ ர்
திருவிழா நடக்கிறது	=	த்இ ர்உ வ்இ ழ்ஆ ந்அ ட்அ க் க்இ ற்அ த்உ
பூனை எலி பிடிக்கும்	=	ப்ஊ ன்ஐ எ ல்இ ப்இ ட்இ க் க்உ ம்

பயிற்சி

கீழ்க்கண்ட சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவைகளை முதலெழுத்துக்களைக் கொண்டு எழுதுக :—

பாடசாலை, தெய்வம், ஒற்றுமை, முயற்சி, சந்தனம், சர்க்கரை, சுத்தம், அமிர்தம், மங்கலம், அடக்கம், மாமிசம், ஆபரணம்.

குளிர்காலம், மேட்டுநிலம், பாழ்ங்கிணறு, அச்சுக்கூடம், புளியந்தோப்பு, இரத்தின மோதிரம், செங்கற்சூளை, முத்துச்சிப்பி, பசுச்சாணம், எட்டுத்திக்கு, வடதேசம், காட்டு வழி.

சூரியன் உதித்தது. குழந்தை தவழ்கிறது. கடவுள் நம்மைக் காக்கிறுர். எவர்களோடும் இனிய வார்த்தை பேசு. பிறருடைய பொருளை இச்சியாதே.

பாடம் 30

ஆண்பால் × பெண்பால் பெயர்ச் சொற்கள்

சொற்களை எழுத்துக்கூட்டி வாசிக்கும்படியும் பார்த்து எழுதும்படியும் செய்க.

ஆண்பால் —	பெண்பால்	ஆண்பால் —	பெண்பால்
அப்பா	— அம்மா	தேவன்	— தேவி
அண்ணன்	— அக்காள்	தோழன்	— தோழி
அப்பன்	— அம்மை	நம்பி	— நங்கை
அரசன்	— அரசி	நாயகன்	— நாயகி
அழகன்	— அழகி	பண்டிதன்	— பண்டிதை
அவன்	— அவள்	பதி	— பத்தினி
ஆசிரியன்	— ஆசிரியை	பாட்டன்	— பாட்டி
இராஜா	— இராணி	பாலகன்	— பாலகி
ஈஸ்வரன்	— ஈஸ்வரி	பிதா	— மாதா
உத்தமன்	— உத்தமி	புதல்வன்	— புதல்வி
ஊமையன்	— ஊமைச்சி	புத்திரன்	— புத்திரி
எசமான்	— எசமானி	பூட்டன்	— பூட்டி
கணவன்	— மனைவி	பெரியப்பன்	— பெரியம்மை
கள்ளன்	— கள்ளி	பேரன்	— பேர்த்தி
கிழவன்	— கிழவி	பொன்னன்	— பொன்னி
குருடன்	— குருடி	பௌத்திரன்	— பௌத்திரி
குணவான்	— குணவதி	மகன்	— மகள்
சகோதரன்	— சகோதரி	மனுஷன்	— மனுஷி
சிறுவன்	— சிறுமி	மாமன்	— மாமி
சீமான்	— சீமாட்டி	மாணவன்	— மாணவி
செல்வன்	— செல்வி	முப்பாட்டன்	— முப்பாட்டி
சோதரன்	— சோதரி	மைத்துனன்	— மைத்துனி
தந்தை	— தாய்	மொட்டையன்	—மொட்டைச்சி
தமையன்	— தமக்கை	வஞ்சகன்	— வஞ்சகி
தம்பி	— தங்கை	வீட்டுக்காரன்	— வீட்டுக்காரி
துணைவன்	— துணைவி	தனயன்	— தனயை

பாடம் 31

எதிர்ப்பதம் : பெயர்ச் சொல்

ஆம் × இல்லை	தைரியம் × அதைரியம்
ஈரம் × காய்வு	தொகுத்தல் × விரித்தல்
உயர்வு × தாழ்வு	தோன்றல் × மறைதல்
எசமான் × வேலைக்காரன்	நட்பு × பகை
ஏற்றம் × இறக்கம்	நாகரீகம் × அநாகரீகம்
ஒற்றுமை × வேற்றுமை	நிறைவு × குறைவு
கனவு × நனவு	நீளம் × அகலம்
காலை × மாலை	நுட்பம் × திட்பம்
கீழ் × மேல்	நூதனம் × புராதனம்
கூட்டல் × கழித்தல்	நுண்மை × பருமை
கொஞ்சம் × அதிகம்	நெட்டை × குட்டை
கோபம் × சாந்தம்	நேர்பாடு × மாறுபாடு
சண்டை × சமாதானம்	நொய்மை × திண்மை
சாதகம் × பாதகம்	பழமை × புதுமை
சில × பல	பற்று × வரவு
சீதம் × உஷ்ணம்	பிறப்பு × இறப்பு
சுத்தம் × அசுத்தம்	ஜனனம் × மரணம்
சூடு × குளிர்ச்சி	புகழ்ச்சி × இகழ்ச்சி
சைவம் × அசைவம்	பெருமை × சிறுமை
சோம்பல் × சுறுசுறுப்பு	பேரின்பம் × சிற்றின்பம்
ஜெயம் × அபஜெயம்	பொய் × மெய்
ஞாபகம் × மறதி	போக்கு × வரத்து
தண்ணீர் × வெந்நீர்	மலிவு × கிராக்கி
தாமதம் × துரிதம்	மானம் × அவமானம்
திருப்தி × அதிருப்தி	வரவு × செலவு
துணிவு × சோர்வு	வாதி × பிரதிவாதி
தூரம் × சமீபம்	வினா × விடை
தென்றல் × வாடை	வெற்றி × தோல்வி

பாடம் 32

ஒருமை—பன்மை பெயர்ச் சொற்கள்

சொற்களை எழுத்துக்கூட்டி வாசிக்கும்படியும் பார்த்து எழுதும்படியும் செய்க.

ஒருமை		பன்மை	ஒருமை		பன்மை
மணி	—	மணிகள்	மகள்	—	மகளிர்
ஆண்	—	ஆண்கள்	திருடன்	—	திருடர்
மான்	—	மான்கள்	குமரன்	—	குமரர்
கதவு	—	கதவுகள்	தோகை	—	தோகையர்
கன்று	—	கன்றுகள்	மாமன்	—	மாமன்மார்
குடை	—	குடைகள்	மாமி	—	மாமிமார்
நாய்	—	நாய்கள்	மங்கை	—	மங்கையர்
மலர்	—	மலர்கள்	பெண்டு	—	பெண்டிர்
கடல்	—	கடல்கள்	எதனை	—	எவற்றை
இதழ்	—	இதழ்கள்			எவைகளை
வால்	—	வால்கள்	குரு	—	குருமார்
ஆறு	—	ஆறுகள்	தாய்	—	தாய்மார்
மா	—	மாக்கள்	அத்தை	—	அத்தைமார்
ஈ	—	ஈக்கள்	நாயன்	—	நாயன்மார்
பசு	—	பசுக்கள்	தம்பி	—	தம்பிமார்
தெரு	—	தெருக்கள்	என்னை	—	எங்களை
பூ	—	பூக்கள்	நான்	—	நாம், நாங்கள்
மனு	—	மனுக்கள்	நீ	—	நீர், நீங்கள்
வினா	—	வினாக்கள்	உன்னை	—	உங்களை
தேனீ	—	தேனீக்கள்	அவன்	—	அவர்
நா	—	நாக்கள்	எவன்	—	எவர்
எழுத்து	—	எழுத்துக்கள்	எவள்	—	எவர்
மரம்	—	மரங்கள்	யாவன்	—	யாவர்
நாள்	—	நாட்கள்	அது	—	அவை
முள்	—	முட்கள்	தீது	—	தீயவை
ஆள்	—	ஆட்கள்	பெரிது	—	பெரியவை
கல்	—	கற்கள்	யாது	—	யாவை
சொல்	—	சொற்கள்	யான்	—	யாம், யாங்கள்
பல்	—	பற்கள்	இதனை	—	இவற்றை
தேவன்	—	தேவர்			இவைகளை

* வாக்கியங்கள்

பாடம் 33

வேற்றுமை உருபுகளும் வேற்றுமை யுருபுகள் சேர்ந்த உதாரண வாய்ப்பாட்டுச் சொற்களும்

வேற்றுமை	உருபு
முதல் வேற்றுமை (= எழுவாய் வேற்றுமை.)	(உருபு இல்லை) எழுவாயாகவே இருக்கும்.
இரண்டாம் வேற்றுமை	ஐ
மூன்றாம் வேற்றுமை	ஆல்
நான்காம் வேற்றுமை	கு
ஐந்தாம் வேற்றுமை	இலிருந்து (இல் + இருந்து)
ஆறாம் வேற்றுமை	உடைய
ஏழாம் வேற்றுமை	இல்

எட்டாம் வேற்றுமை (= விளிவேற்றுமை) (உருபு இல்லை) ஏ-சேர்த்துக் கூறலாம். (கூப்பிடுகிற மாதிரி இருக்கும்)

பெயர்ச் சொல்லின் கடைசி எழுத்து உருபு ஏற்கும்போது விகாரமடைவதால் இந்தப் பாடத்தில் கொடுத்திருக்கிற 31 பெயர்ச் சொற்களை மட்டும் அவைகளுடன் மேலேகண்ட உருபுகளைச் சேர்த்து வாய்ப் பாடமாகச் சொல்லத் தெரிந்துவிட்டால், எந்தப் பெயர்ச் சொல்லையும் உருபு சேர்த்து உடனே சொல்லிவிடலாம். **மக, மகவை;** எனவும் **மகவால், மகவுக்கு,** எனவும் இப்படியே இரட்டை இரட்டையாகச் சொல்லி மனப்பாடம் செய்க. இரட்டை இரட்டையாக மனப்பாடம் செய்தால் உடனே மனம்பாடமாகும், மறக்கவும் செய்யாது.

கீழ்க்கண்டவற்றை மனப்பாடம் செய்க :—

1 மக	கடா	செடி
2 மகவை	கடாவை	செடியை
3 மகவால்	கடாவால்	செடியால்
4 மகவுக்கு	கடாவுக்கு	செடிக்கு
5 மகவிலிருந்து	கடாவிலிருந்து	செடியிலிருந்து
6 மகவினுடைய	கடாவினுடைய	செடியினுடைய
7 மகவில்	கடாவில்	செடியில்
8 மகவே !	கடாவே !	செடியே !

* வாக்கியங்களைக் கற்றுக்கொடுக்கும் விதத்தை அனுபந்தத்தில் பார்க்க.

1 தேனீ	சிசு	மாது
2 தேனீயை	சிசுவை	மாதை
3 தேனீயால்	சிசுவால்	மாதால்
4 தேனீக்கு	சிசுவுக்கு	மாதுக்கு
5 தேனீயிலிருந்து	சிசுவிலிருந்து	மாதிலிருந்து
6 தேனீயினுடைய	சிசுவினுடைய	மாதினுடைய
7 தேனீயில்	சிசுவில்	மாதில்
8 தேனீயே !	சிசுவே !	மாதே !

1 மாடு	சோறு	பூ
2 மாட்டை	சோற்றை	பூவை
3 மாட்டால்	சோற்ருல்	பூவால்
4 மாட்டுக்கு	சோற்றுக்கு	பூவுக்கு
5 மாட்டிலிருந்து	சோற்றிலிருந்து	பூவிலிருந்து
6 மாட்டினுடைய	சோற்றினுடைய	பூவினுடைய
7 மாட்டில்	சோற்றில்	பூவில்
8 மாடே !	சோறே !	பூவே !

1 தே	யானை	கோ
2 தேவை	யானையை	கோவை
3 தேவால்	யானையால்	கோவால்
4 தேவுக்கு	யானைக்கு	கோவுக்கு
5 தேவிலிருந்து	யானையிலிருந்து	கோவிலிருந்து
6 தேவினுடைய	யானையினுடைய	கோவினுடைய
7 தேவில்	யானையில்	கோவில்
8 தேவே !	யானையே !	கோவே !

1 பெண்	ஆண்	அம்
2 பெண்ணை	ஆணை	அம்மை
3 பெண்ணால்	ஆணால்	அம்மால்
4 பெண்ணுக்கு	ஆணுக்கு	அம்முக்கு
5 பெண்ணிலிருந்து	ஆணிலிருந்து	அம்மிலிருந்து
6 பெண்ணினுடைய	ஆணினுடைய	அம்மினுடைய
7 பெண்ணில்	ஆணில்	அம்மில்
8 பெண்ணே !	ஆணே !	அம்மே !

1 தோம்	செய்	சேய்
2 தோமை	செய்யை	சேயை
3 தோமால்	செய்யால்	சேயால்
4 தோமுக்கு	செய்க்கு	சேய்க்கு
5 தோமிலிருந்து	செய்யிலிருந்து	சேயிலிருந்து
6 தோமினுடைய	செய்யினுடைய	சேயினுடைய
7 தோமில்	செய்யில்	சேயில்
8 தோமே !	செய்யே !	சேயே !

1 மலர்	பல்	பால்
2 மலரை	பல்லை	பாலை
3 மலரால்	பல்லால்	பாலால்
4 மலருக்கு	பல்லுக்கு	பாலுக்கு
5 மலரிலிருந்து	பல்லிலிருந்து	பாலிலிருந்து
6 மலரினுடைய	பல்லினுடைய	பாலினுடைய
7 மலரில்	பல்லில்	பாலில்
8 மலரே!	பல்லே !	பாலே !

1	கூழ்	முள்	தேள்
2	கூழை	முள்ளை	தேளை
3	கூழால்	முள்ளால்	தேளால்
4	கூழுக்கு	முள்ளுக்கு	தேளுக்கு
5	கூழிலிருந்து	முள்ளிலிருந்து	தேளிலிருந்து
6	கூழினுடைய	முள்ளினுடைய	தேளினுடைய
7	கூழில்	முள்ளில்	தேளில்
8	கூழே !	முள்ளே !	தேளே !
1	பொன்	மான்	மரம்
2	பொன்னை	மானை	மரத்தை
3	பொன்னால்	மானால்	மரத்தால்
4	பொன்னுக்கு	மானுக்கு	மரத்துக்கு
5	பொன்னிலிருந்து	மானிலிருந்து	மரத்திலிருந்து
6	பொன்னினுடைய	மானினுடைய	மரத்தினுடைய
7	பொன்னில்	மானில்	மரத்தில்
8	பொன்னே !	மானே !	மரமே !
1	பல	அவை	எல்லாம்
2	பலவற்றை	அவற்றை	எல்லாவற்றையும்
3	பலவற்றால்	அவற்றால்	எல்லாவற்றாலும்
4	பலவற்றிற்கு	அவற்றிற்கு	எல்லாவற்றிற்கும்
5	பலவற்றிலிருந்து	அவற்றிலிருந்து	எல்லாவற்றி லிருந்தும்
6	பலவற்றினுடைய	அவற்றினுடைய	எல்லாவற்றி னுடையவும்
7	பலவற்றில்	அவற்றில்	எல்லாவற்றிலும்
8	× × × ×	× × × ×	× × × ×

1 எல்லாரும்	4 எல்லாருக்கும்	7 எல்லாரிலும்
2 எல்லாரையும்	5 எல்லாரிலிருந்தும்	8 × × × ×
3 எல்லாராலும்	6 எல்லாருடையவும்	

வேற்றுமையுருபு ஏற்கையில் விகாரமடையும் சொற்கள்

நான், யான்—என்பன **என்** என மாறி, இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உருபு சேரும் போது முறையே **என்னை, என்னால், எனக்கு, என்னிலிருந்து, என்னுடைய, என்னில்** என்று வரும். எட்டாம் வேற்றுமைக்கு உருபு கிடையாது. இதே மாதிரி **தான்** என்பது **தன்** என்றும், **நீ** என்பது **உன்** என்றும், **நீர்** என்பது **உம்** என்றும் **தாம்** என்பது **தம்** என்றும் **நாம்** என்பது **நம்** என்றும் **யாம்** என்பது **எம்** என்றும் **நாங்கள், யாங்கள்** என்பது **எங்கள்** என்றும், **நீங்கள்** என்பது **உங்கள்** என்றும், **தாங்கள்** என்பது **தங்கள்** என்றும் மாறுதலடைந்து 2, 3, 4, 5, 6, 7 ஆகிய வேற்றுமையுருபுகளை ஏற்கும்.

எட்டாம் வேற்றுமையில் விளி ஏற்காத சொற்கள்

நான், யான்; நாங்கள், யாங்கள்; நீ, நீர்; நீங்கள்; தான், தாம், தாங்கள்; எவன், எவள், எவர்; எது, எவை; யாவன், யாவள், யாவர்; யாது, யாவை; அவன், அவள், அவர்கள்; அது, அவை; இவன், இவள், இவர்கள்; இது, இவை; எல்லாம், எல்லாரும்; மற்றவன், பிறன்; பல, சில; பலர், சிலர் முதலிய சொற்களுக்கு எட்டாம் வேற்றுமை இல்லை. (எட்டாம் வேற்றுமை **விளிவேற்றுமை** என்றும் சொல்லப்படும்)

பாடம் 34

* 27 வினை முற்றுக்கள்

கடைசி எழுத்தை நோக்கி 34 வகை வினைப் பகுதிகள்—**கட** என்ற பகுதிக்கு 27 வினை முற்றுக்கள் 9 வரியில் அமையும் விதமும், மற்ற 33 பகுதிகட்கு முதல்வரி மாத்திரமும்.

வரிக்கு மூன்று மூன்று சொற்களாக, வரி வரியாக மனப் பாடம் செய்க. பிறகு பார்த்தும் பாராமலும் எழுதுக :—

	பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்
1	கட	கடந்தேன்	கடக்கிறேன்	கடப்பேன்
		கடந்தோம்	கடக்கிறோம்	கடப்போம்
		கடந்தாய்	கடக்கிறாய்	கடப்பாய்
		கடந்தீர்கள்	கடக்கிறீர்கள்	கடப்பீர்கள்
		கடந்தான்	கடக்கிறான்	கடப்பான்
		கடந்தாள்	கடக்கிறாள்	கடப்பாள்
		கடந்தார்கள்	கடக்கிறார்கள்	கடப்பார்கள்
		கடந்தது	கடக்கிறது	கடக்கும்
		கடந்தன	கடக்கின்றன	கடக்கும்
2	தா	தந்தேன்	தருகிறேன்	தருவேன்
3	படி (வாசி)	படித்தேன்	படிக்கிறேன்	படிப்பேன்
4	படி (கீழ்ப்	படிந்தேன்	படிகிறேன்	படிவேன்
5	ஈ [படி)	ஈந்தேன்	ஈகிறேன்	ஈவேன்
6	கெடு	கெடுத்தேன்	கெடுக்கிறேன்	கெடுப்பேன்
7	† கெடு	கெட்டேன்	கெடுகிறேன்	கெடுவேன்
8	ஆடு	ஆடினேன்	ஆடுகிறேன்	ஆடுவேன்
9	எழு	எழுந்தேன்	எழுகிறேன்	எழுவேன்
10	தொழு	தொழுதேன்	தொழுகிறேன்	தொழுவேன்
11	பூ	பூத்தேன்	பூக்கிறேன்	பூப்பேன்
12	வே	வெந்தேன்	வேகிறேன்	வேவேன்
13	வை (போடு)	வைத்தேன்	வைக்கிறேன்	வைப்பேன்
14	வை (நிந்தி)	வைதேன்	வைகிறேன்	வைவேன்

* 27 வினை முற்றுக்கள் உண்டாகும் விவரத்தை அனுபந்தத்தில் பார்க்க.

	பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்
15	வரை	வரைந்தேன்	வரைகிறேன்	வரைவேன்
16	மோ	மோந்தேன்	மோக்கிறேன்	மோப்பேன்
17	கௌ (கௌவு)	கௌவினேன்	கௌவுகிறேன்	கௌவுவேன்
18	உண்	உண்டேன்	உண்கிறேன்	உண்பேன்
19	எண் (எண்ணு)	எண்ணினேன்	எண்ணுகிறேன்	எண்ணுவேன்
20	செய்	செய்தேன்	செய்கிறேன்	செய்வேன்
21	சாய்	சாய்த்தேன்	சாய்க்கிறேன்	சாய்ப்பேன்
22	†சாய்	சாய்ந்தேன்	சாய்கிறேன்	சாய்வேன்
23	சேர்	சேர்த்தேன்	சேர்க்கிறேன்	சேர்ப்பேன்
24	†சேர்	சேர்ந்தேன்	சேர்கிறேன்	சேர்வேன்
25	கொல்	கொன்றேன்	கொல்கிறேன்	கொல்வேன்
26	கல்	கற்றேன்	கற்கிறேன்	கற்பேன்
27	சொல்	சொன்னேன்	சொல்கிறேன்	சொல்வேன்
28	புல் (தழுவு)	புல்லினேன்	புல்லுகிறேன்	புல்லுவேன்
29	ஆழ்	ஆழ்ந்தேன்	ஆழ்கிறேன்	ஆழ்வேன்
30	ஆள்	ஆண்டேன்	ஆள்கிறேன்	ஆள்வேன்
31	கேள்	கேட்டேன்	கேட்கிறேன்	கேட்பேன்
32	தள் (தள்ளு)	தள்ளினேன்	தள்ளுகிறேன்	தள்ளுவேன்
33	தின்	தின்றேன்	தின்கிறேன்	தின்பேன்
34	பின் (பின்னு)	பின்னினேன்	பின்னுகிறேன்	பின்னுவேன்

† இந்த அடையாளமிட்ட பகுதிகள் செயப்படுபொருள் குன்றிய வினை எனப்படும். ஒரே பகுதி இருவிதமாக விகற்பித்ததற்கு அனுபந்தம் பார்க்க.

பயிற்சி

கீழேகண்ட வினைப்பகுதிகளுக்கு 27 வினைமுற்றுக்கள் சொல்லுக; எழுதுக:-(கோடிட்டவைகளை இருவிதமாக விகற்பிக்க)

நட, வா, மடி, **தொடு** *பாடு, விழு, அழு, கா, நோ, தை, நை, தௌவு, காண், பண்ணு, நெய்,* **மேய் தீர்,** *செல், வில், வீழ், மீள், வேள், துள்ளு, என் (= என்று சொல்) உன்னு.*

பாடம் 35

* வினை முற்றுக்களை வாக்கியங்களாக அமைத்தல்

32 ஆம் பாடத்திலுள்ள 27 வினைமுற்றுக்களுக்குரிய எழுவாய் சேர்த்து வாக்கியங்களாக அமைத்து இங்கே காட்டப்பட்டிருக்கின்றன. மனப்பாடம் செய்க. பார்த்தும் பார்க்காமலும் எழுதுக :—

இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்
நான் கடந்தேன்	நான் கடக்கிறேன்	நான் கடப்பேன்
நாங்கள் கடந்தோம்	நாங்கள் கடக்கிறோம்	நாங்கள் கடப்போம்
நீ கடந்தாய்	நீ கடக்கிறாய்	நீ கடப்பாய்
நீங்கள் கடந்தீர்கள்	நீங்கள் கடக்கிறீர்கள்	நீங்கள் கடப்பீர்கள்
அவன் கடந்தான்	அவன் கடக்கிறான்	அவன் கடப்பான்
அவள் கடந்தாள்	அவள் கடக்கிறாள்	அவள் கடப்பாள்
அவர்கள் கடந்தார்கள்	அவர்கள் கடக்கிறார்கள்	அவர்கள் கடப்பார்கள்
அது கடந்தது	அது கடக்கிறது	அது கடக்கும்
அவைகள் கடந்தன	அவைகள் கடக்கின்றன	அவைகள் கடக்கும்

தன்மையில் ஒருமை, பன்மை; முன்னிலையில் ஒருமை, பன்மை; படர்க்கையில் 5 பால் ஆக 9 வகை எழுவாய் × 3 காலத்திலும் கூற மொத்தம் 27 வினைமுற்றுக்கள் கொண்ட வாக்கியங்கள் ஆயின.

பயிற்சி

32 ஆம் பாடத்தில் பயிற்சியில் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு வினைப்பகுதியையும் 27 வினைமுற்றுக்களாக்கி அவைகளை எழுவாய் சேர்த்து வாக்கியங்களாக எழுதுக.

* 27 வினைமுற்றுக்கள் கொண்ட வாக்கியங்கள் அமைக்கும் விதத்தை அனுபந்தத்தில் காண்க.

பாடம் 36

சிறு சிறு வாக்கியங்கள்

1. நட்சத்திரம் விட்டு விட்டுப் பிரகாசிக்கிறது.
2. கிரகம் சுற்றி வருகிறது.
3. கொட்டு முழங்குகிறது.
4. கடல் இரைகிறது.
5. அலை மோதுகிறது.
6. செல் அரிக்கிறது.
7. வேப்பங்காய் கசக்கிறது.
8. எலுமிச்சம்பழம் புளிக்கிறது.
9. மிளகாய் வற்றல் உறைக்கிறது.
10. பாக்கு துவர்க்கிறது.
11. உப்புக்கல் கரிக்கிறது.
12. சிங்கம் கர்ச்சிக்கிறது.
13. யானை பிளிறுகிறது.
14. பன்றி உறுமுகிறது.
15. கழுதை கத்துகிறது.
16. கன்று கதறுகிறது.
17. குதிரை கனைக்கிறது.
18. நாய் குரைக்கிறது.
19. நரி ஊளையிடுகிறது.
20. மயில் ஆடுகிறது.
21. குயில் பாடுகிறது.
22. சேவல் கூவுகிறது.
23. கோழி கொக்கரிக்கிறது.
24. கிளி பேசுகிறது.
25. கிளி தத்தித் தத்தி நடக்கிறது.
26. நாகம் சீறுகிறது.
27. பாம்பு படம் எடுக்கிறது.
28. நல்ல பாம்பு படமெடுத்தாடுகிறது.
29. மலர்மேல் வண்டு மொய்க்கிறது.
30. பலாப்பழத்தின் மேல் ஈ மொய்க்கிறது.
31. குழந்தை அழுகிறது.
32. குழந்தை தவழ்கிறது.

33. தவளை கத்துகிறது.
34. பாற்காரன் பால் கறக்கிறான்.
35. பசு புல் மேய்கிறது.
36. சித்திரக்காரன் சித்திரம் வரைகிறான்.
37. சிற்பி சிற்பம் செதுக்குகிறான்.
38. பனை பாளை விடுகிறது.
39. கருவண்டு மரத்தைத் துளைக்கிறது.
40. மரம் பூத்துக் காய்த்துப் பழம் பழுக்கிறது.
41. கொடி படர்கிறது.
42. நெற்பயிர் பண்ணை கட்டுகிறது.
43. புழு அரிக்கிறது,
44. சேணியன் துணி நெய்கிறான்.
45. பட்சி பறக்கிறது.
46. மின்னல் மின்னுகிறது.
47. இடையன் மாடு மேய்க்கிறான்.
48. எறும்பு ஊர்கிறது.
49. புலி பாய்கிறது.
50. குரங்கு மரத்துக்கு மரம் தாவுகிறது.
51. பண்ணைக்காரன் கூரை வேய்கிறான்.
52. சிறுவன் விளையாடுகிறான்.
53. சிறுமி பாடுகிறாள்.

பயிற்சி

மேலே கண்ட வாக்கியங்கள் ஒருமையில் நிகழ் காலத்தில் இருக்கின்றன. அவைகளைப் **பன்மை***யிலும்* **வேறு காலங்***களிலும் சொல்லும்படியும் எழுதும்படியும் செய்க.*

(உதாரணம்) **புலி பாய்கிறது — புலிகள் பாய்கின்றன.**
சிறுவன் விளையாடுகிறான் — சிறுவர்கள் விளையாடுகிறார்கள்

சிறுமி பாடுகிறாள் — சிறுமிகள் பாடுகிறார்கள்

புலி பாய்கிறது. (நிகழ் காலம்)—புலி பாய்ந்தது. (இறந்த காலம்)—புலி பாயும். (எதிர்காலம்) = **ஒருமை**

புலிகள் பாய்கின்றன. புலிகள் பாய்ந்தன. புலிகள் பாயும். = **பன்மை.**

சிறுவர்கள் விளையாடுகிறார்கள். சிறுவர்கள் விளையாடினார்கள். சிறுவர்கள் விளையாடுவார்கள். = **பன்மை.**

பாடம் 37

வேற்றுமை உருபுகள் எல்லாமும், அவற்றைக் கொண்ட சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் காட்டலும்

வேற்றுமைகள்	உருபுகள்
முதலாம் வேற்றுமை அல்லது எழுவாய் வேற்றுமை	(தனி உருபு இல்லை.) வாக்கியத்தில் எழுவாயாக நிற்கும்
இரண்டாம் வேற்றுமை —	ஐ
மூன்றாம் வேற்றுமை —	ஆல்; ஒடு, ஓடு; உடன்; கொண்டு.
நான்காம் வேற்றுமை —	கு, ஆக; பொருட்டு, நிமித்தம்; (இன் சாரியை சேர்ந்தும் வரும்.)
ஐந்தாம் வேற்றுமை —	இல், இன்; இலிருந்து; இனின்று, இருந்து; காட்டிலும், பார்க்கிலும். (ஐ சேர்ந்தும் வரும்)
ஆறாம் வேற்றுமை —	அது, அ, உடைய.

(அ-உருபு கொண்ட சொல் பன்மைப் பெயர் கொண்டு முடியும்.)

ஏழாம் வேற்றுமை —	இல்; இடம், இடத்தில்; கண்

(எங்கே, எப்பொழுதில் என்ற கேள்விகட்குப் பதில் தரும் சொல்லுருபுகளும் ஏழாம் வேற்றுமையாம்.)

எட்டாம் வேற்றுமை அல்லது விளிவேற்றுமை	(தனி உருபு இல்லை)

இதன் தன்மைகள் :—படர்க்கைப் பெயர்ச் சொல்லின் கடைசி எழுத்தோடு **ஏ** அல்லது **ஓ** சேர்த்துக் கூறல்; கடைசி எழுத்துக் கெடுதல், வேறொரு எழுத்தாகத் திரிதல்; கடைசிக்கு முந்தின எழுத்துத் திரிதல்; படர்க்கைப் பெயர்ச்சொல் எவ்வித விகாரமுமின்றி விளித்தல் பொருளைத் தரும், அதாவது கூப்பிடுகிற மாதிரியிருக்கும்,

(இரண்டு விகாரங்கூட அடையலாம். **ஏ** அல்லது **ஓ** என்று விளித்து, பிறகு எட்டாம் வேற்றுமைப் பெயர்ச்சொல்லைப் போடலாம். விளி வேற்றுமைச் சொல்லுக்குப் பின் ! இந்த அடையாளமாகிய ஆச்சரியக்குறி போடுக.)

மேற்கண்ட உருபுகளை வாக்கியங்களில் அமைத்தல்

முதலாம் வேற்றுமை:—முருகன் வந்தான்.

இரண்டாம் வேற்றுமை:—நான் முருகனைப் பார்த்தேன்.

மூன்றும் வேற்றுமை:—கண்ணால் பார்க்கலாம். கண் கொண்டு பார்க்கலாம். காது கொண்டு கேட்கலாம். தகப்பனோடு மகன் வந்தான். மழையோடு காற்று வந்தது. இராமனுடன் சீதை வனம் சென்றாள்.

நாலாம் வேற்றுமை:—முருகனுக்குக் காணிக்கை கொடுங்கள். கூலிக்காக அநேகர் வேலை செய்கிறார்கள். பணத்தின் பொருட்டு அநேகர் பாடுபடுகிறார்கள். பொருள் நிமித்தம் அலைந்து திரிவார்கள் பலர்.

ஐந்தாம் வேற்றுமை:—குற்றால மலையுச்சியில் விழும் அருவி அழகாயிருக்கிறது. (=உச்சியிலிருந்து விழும் அருவி.) பரதனில் பக்தன் உண்டோ? (பரதனைப் போல பக்தன் உண்டோ?) பாலின் வெளிது கொக்கு. (பாலைப்போல் வெள்ளை நிறமானது கொக்கு.) அவனில் இவன் பெரியவன். (அவனைப் பார்க்கிலும் இவன் பெரியவன்.) விருதுநகரின் வடக்கே கொக்கலான்சேரி. (=விருதுநகரிலிருந்து) ஊரினின்று நீங்கினேன். விருதுநகரினின்றும் வெளியே போனால் நல்லது. கிராமங்களிலிருந்தும் பிள்ளைகள் பால குருகுலத்திற்கு வருகிறார்கள். எங்கிருந்து வருகிறீர்? அவனைக் காட்டிலும் இவன் நல்லவன்.

ஆறும் வேற்றுமை:—முருகனது வேல் சிறந்தது. எனது தாய்மொழி இனிமையானது. நமது பள்ளிக்கூடம் அழகானது. எமது வீடு பெரிது. *என* (என்+அ) *வீடுகள்* பெரியவை. (=என்னுடைய வீடுகள் பெரியவை.) அகத்தினது அழகு முகத்தில் தெரியும். முருகனுடைய அழகே அழகு!

ஏழாம் வேற்றுமை:—வீட்டின் கண் யார் இருக்கிறார்? மலையில் மரம் செடி ஏராளம். மலையிடத்தில் மேகம் கூடும். மலைமேல் வீடு கட்டினால் நல்லது. பூவில் மணம் உண்டு. இரத்தின மணியில் ஒளி உண்டு. கடலின் கண் உப்புத் தண்ணீர் ஏராளம். மரத்தின் கீழ் வேர்கள் உண்டு. காலையில் குளிப்பது நன்று. மாலையில் உலாவவேண்டும். கோடையில் மழை பெய்யுமா? இருப்புப் பெட்டியினுள் பணம் இருக்கிறது. பெட்டியில் இருப்பவை பணம் மட்டு மன்று; துணிமணியும்கூட. ஊரில் உள்ளவர் யாவ ரோடும் சண்டையிட்டுக்கொள்பவர் மிகச் சங்கடப் படுவர். வருடத்திற்குள் மாதம், நாள், நாழிகை, வினாடி முதலியன அடங்கியுள்ளன. கையில் ஐந்து விரல்களும், நகங்களும் இருக்கின்றன. புளிப்பில் உவர்ப்பும், கார்ப்பில் துவர்ப்பும், கசப்பில் இனிப்பும் அடங்குமென்பர். உழைப்பில் ஊதியம் பார்ப்பதே உத்தமர் செய்கை. கற்றாரிடைக் கல்லார் புகல் படுக்கையில் கழுவாக்காலை வைத்ததுபோலாம்.

எட்டாம் வேற்றுமை:—ஐயா, வாருங்கள். முருகா, இங்கே வா. குழந்தாய்! நில், வருகிறேன். பிள்ளாய், நன்றாய்ப் படி. பிள்ளைகாள்! ஒழுங்காயிருங்கள். இந்திய மக்காள்! நாட்டிற்காக உழையுங்கள். காளீ! லோக மாதா, எங்களைக் காப்பாற்று. சர்வ லோக பிதா! ஞானக்கண் தாரும். முருகா, வரம்தா. ஏ முருகா, சீக்கிரம் வா. அம்மா! ஐயாவைக் கண்டீர்களா? சங்கரா! யார் இங்கு வருகிறார்கள்? கலியாண சுந்தரனாரே! காணாமல் மறைந்து விட்டீரே! காண்பது எப்போது? தலையே! நீ வணங்காய். மாணவ மாணவிகளே! நன்கு படி யுங்கள். அண்ணா! பாடசாலைக்குப் போவோம் வாருங்கள். ஈஸ்வரா! இந்த வருஷமேனும் மழையை வருஷிக்கச்செய்து மக்களைப் பாதுகாக்கக் கூடாதா?

பாடம் 38

நெருங்கிய ஒலிச் சொற்களை விளக்கும் வாக்கியங்கள்

1	எண்ணை	ஒரு பெரிய எண்ணை ஒரு சிறிய எண்ணால் வகுக்கலாம். சிறு எண்ணைப் பெரிய எண்ணால் வகுக்க முடியாது.
	எண்ணெய்	உஷ்ண நாட்டில் வாரம் ஒருமுறையாவது எண்ணெய் தேய்த்துக் குளித்து ஓய்வாக இருக்கவேண்டும். தினமும் தலைக்கு எண்ணெய் தேய்ப்பது நல்லது.
2	மைல்	எட்டுப் பர்லாங்குகள் கொண்டது ஒரு மைல்.
	மயில்	பார்ப்பதற்கு மயில் (பறவை) வெகு அழகாயிருக்கும்.
3	சயனம்	பகலில் சயனம் செய்வது நல்லதன்று.
	சைனம்	சைனம் என்ற மதம் நம் நாட்டில் முன்னொரு காலத்தில் பரவியிருந்தது. சைன மதத்தின் முக்கிய கொள்கை எவ்வுயிருக்கும் சிறு தீங்கும் செய்யக்கூடாது என்பதாம்.
4	உலகம்	நாம் வசிக்கும் உலகம் உருண்டை வடிவமானது. உலகம் கடவுளால் உண்டாக்கப்பட்டது.
	உலோகம்	தங்கம் விலையுயர்ந்த உலோகம். பல உலோகங்கள் பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றன.
5	குலை	தென்னங் குலை வெட்டித் தின்றால் கொலைக் குற்றமா ?
	கொலை	ஒரு உயிரைக் கொல்வது கொலை. கொலைக் குற்றம் பெரும் பாவம் !
6	குடை	வெயிலுக்கும், மழைக்கும் குடை உபயோகப்படுகிறது. மழை பெய்யும்போது குடையில்லாமல் வெளியே போகக்கூடாது.
	கொடை	நற்காரியங்களுக்கு இனும் கொடுப்பது கொடையாகும். கொடையிற் சிறந்தவன் கர்ணன் என்பார்கள்.

7	மானம்	மனிதன் முதலில் காக்கவேண்டியது மானம். நாணயம் கெட்டால் மானம் கெடும்.
	வானம்	மேகம் அதிகமாயிருந்தால் வானம் கறுப்பாய் இருக்கும். வானத்தில் இரவில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கும்.
8	முகந்து	சிறு பிள்ளைகள் தண்ணீரை முகந்து முகந்து சிந்துவார்கள்.
	மோந்து	பூக்களை மூக்கினால் மோந்து பார்க்கிறோம்.
9	மீசை	என் பாட்டனாருக்கு மீசை நரைத்துவிட்டது.
	வீசை	ஒரு வீசைச் சீனி 5 அணுவாக விற்ற காலமும் இருந்தது.
10	இடை	இருவர் பேசிக்கொண்டிருக்கும்போது இடையில் குறுக்கிடக்கூடாது.
	எடை	தராசில் நிறுக்கும்போது எடையில் வித்தியாசம் இருக்கக்கூடாது.
11	வேய்	கம்பந்தட்டையால் கூரை வேயலாம். கூரை வேய்ந்த வீடு வெயிற்காலத்தில் குளிர்ச்சியாய் இருக்கும்.
	மேய்	ஆடு மாடுகள் புல்லை மேயும்.
12	இடையா	ஆடு மேய்க்கும் இடையனை எடையன் என்றால் தப்பிதம்.
	எடையா	இடையா! தோள்மேல் குட்டியை எடையா. (எடு+ஐயா)
13	குலை	நல்ல காரியத்தைக் குலைத்துவிடாதே.
	குரை	'குரைக்கிற நாய் கடிக்காது' என்பார்கள்.
14	நுரை	உப்புத் தண்ணீரில் சோப்பைத் தேய்த்தால் நுரை வராது.
	முறை	வாங்கின கடனை முறை தவறாமல் கொடுக்க வேண்டும்.
15	பற்று	நாணயமில்லாதவர்களிடம் பற்று வரவு வைத்துக்கொள்ளக்கூடாது.
	பத்து	பத்து ரூபாய் வரவு வந்தால் இருபது ரூபாய் செலவழிப்பது எப்படி?

* சரள வாக்கியங்கள்

குறிப்பிட்ட பெயர்ச் சொல்லுடன் வேற்றுமை உருபுகள் சேர்த்து சரளமாக வாக்கியங்கள் அமைத்தல்.

பாடம் 39

பசு

(1) பசு ஒரு சாதுவான மிருகம். பசு வீட்டு மிருகம். பசு பால் கொடுக்கும். பசு புல், பருத்திவிதை முதலியவை களைத் தின்னும். பசு பார்க்க அழகாக இருக்கும்.

(2) பசுவை நாம் வளர்க்கிறோம். பசுவைச் சிலர் வணங்குகிறார்கள். பசுவை வளர்க்கப் பிரியப்படுகிறோம். பசுவையும் கன்றையும் பிரிக்காதே.

(3) பசுவால் நமக்குப் பல நன்மைகள் உண்டு. பசு வால் பால், தயிர், வெண்ணெய் முதலியன கிடைக்கும். பசு வால் நாட்டின் செல்வம் பெருகும்.

(4) பசுவுக்கு இரண்டு கொம்புகள் உண்டு. பசுவுக்கு குஞ்சமுள்ள வால் உண்டு. பசுவுக்கு இரட்டைக் குளம்புகள் உண்டு. பசுவுக்குப் பருத்திவிதையும் தவிடும் பிரியம்.

(5) பசுவிலிருந்து பால் கிடைக்கும். பசுவிலிருந்து கிடைக்கும் சாணமும் கோமயமும் நல்ல உரம். பசுவிலிருந்து கொஞ்ச தூரத்தில் கன்று கட்டப்படும்.

(6) பசுவினுடைய கொம்புகள் கூர்மையானவை. பசு வினுடைய காம்பில் பால் சுரக்கும். பசுவினுடைய கொம்பால் சீப்புச் செய்யலாம். பசுவினுடைய வால் நுனியில் மயிர்க் குஞ்சம் உண்டு. பசுவினுடைய வெண்ணெய் மருந்துக்கு ஆகும்.

(7) பசுவில் பலவகை உண்டு. பசுவில் பலநிறம் உண்டு. பசுவில் கறுப்பு நிறமும் உண்டு. பசுவில் சிறந் தது காராம் பசு.

(8) பசுவே! இங்கே வா! பசுவே! பால் கொடு. பசுவே! என்னை முட்டாதே. பசுவே! மந்தைக்குப் போ. பசுவே! கொட்டத்துக்குள் நுழை.

** சரள வாக்கியங்களைப் பற்றி அநுபந்தத்தில் பார்க்க.*

பாடம் 40

காகம்

(1) காகம் 'கா கா' என்று கரையும். காகம் மரத்தில் கூடு கட்டும். காகம் முட்டை இடும். காகம் சோறு தின்னும். காகம் கூட்டம் கூட்டமாய் வசிக்கும். காகம் கருமை நிறமுடையது. காகம் தெருவைச் சுத்தம் செய்யும்.

(2) காகத்தைப் பார். காகத்தைக் கூப்பிடு. காகத்தைக் கூப்பிட்டுச் சோறு வைப்பார்கள். காகத்தைக் கூகை விரட்டும். காகத்தைத் தமிழ் நாட்டில் எங்கும் காணலாம்.

(3) காகத்தால் நன்மையுண்டு. காகத்தால் தெரு சுத்தமாகும். காகத்தால் காலைப் பொழுதைத் தெரிகிறோம். காகத்தால் ஒற்றுமைக் குணம் விளங்கும். காகத்தால் சகுனம் பார்ப்பார்கள்.

(4) காகத்துக்கு நிறம் கறுப்பு. காகத்துக்குக் கண் கூர்மையாய் இருக்கும். காகத்துக்குக் கண் கோணல் என்பார்கள். காகத்துக்கு சிலர் சோறு வைப்பார்கள். காகத்துக்குப் பகை கூகை. காகத்துக்கு மாமிசம் பிரியம். காகத்துக்கு பகிர்ந்துண்ணும் குணம் உண்டு.

(5) காகத்திலிருந்து கற்பது என்ன ? காகத்திலிருந்து நல்ல பழக்கம் தெரிந்து கொள்ளலாம். காகத்திலிருந்து மருந்து எடுக்கிறார்கள். காகத்திலிருந்து இறக்கை உதிரும்.

(6) காகத்தினுடைய நிறம் கறுப்பு. காகத்தினுடைய கழுத்து கபில நிறமாய் இருக்கும். காகத்தினுடைய சத்தம் 'கா, கா' என்பதே. காகத்தினுடைய பார்வை கோணல் என்பார்கள். காகத்தினுடைய கால்விரல்கள் வளைந்திருக்கும். காகத்தினுடைய ஒற்றுமைக் குணம் சிறந்தது.

(7) காகத்தில் பலவகை உண்டு. காகத்தில் கறுப்பு அதிகமானதற்கு அண்டங்காக்கை என்று பெயர். காகத்தில் நல்ல பழக்கங்களைக் காணலாம்.

(8) காகமே ! இங்கே வா. காகமே ! பறந்து வா. காகமே ! அதிகாலையில் 'கா–கா' என்று கரைந்து எங்களை எழுப்பு. காகமே ! ஏன் கோணலாய்ப் பார்க்கிறாய் ? காகமே! எங்கள் தின்பண்டங்களைக் களவாடாதே.

பாடம் 41

தென்னை

(1) தென்னை உயரமான மரம். தென்னை கிளைகள் இல்லாத மரம். தென்னை கடற்கரையில் நன்றாய் வளரும். தென்னை ஆற்றோரம் செழிப்பாய் வளரும். தென்னை இளநீர், தேங்காய் தரும்.

(2) தென்னையை மணற்பாங்கான இடத்தில் பயிரிடுவார்கள். தென்னையைப் பார்த்தால் பனை, ஈந்து முதலிய மரங்களின் நினைவு வரும்.

(3) தென்னையால் பல நன்மைகள் உண்டு. தென்னையாலேயே வாழ்பவர்களும் உண்டு. தென்னையால் மலையாளத்தில் அநேகர் பிழைக்கிறார்கள்.

(4) தென்னைக்கு மற்ற மரங்களைப்போல் கிளைகள் இல்லை. தென்னைக்கு சல்லிவேர்கள் அதிகம். தென்னைக்கு மண் அணைக்கவேண்டும். தென்னைக்கு மணல்தரை வேண்டும். தென்னைக்கு ஆரம்பத்தில் அடிக்கடி தண்ணீர் விட வேண்டும்.

(5) தென்னையிலிருந்து மட்டை, தோகை, இளநீர், தேங்காய் முதலியவை கிடைக்கும். தென்னையிலிருந்து மட்டைவெட்டி கூடை பின்னுவார்கள். தென்னையிலிருந்து பூம்பாளையெடுத்து கலியாண வீடுகளை அலங்கரிக்கலாம்.

(6) தென்னையினுடைய ஒவ்வொரு பாகமும் பிரயோசனமானது. தென்னையினுடைய இளநீர் தேகத்திற்கு நன்மை தரும். தென்னையினுடைய ஓலைகள், கிடுகு விசிறி முதலியன பின்ன உதவும். தென்னையினுடைய மட்டைகளை அடுப்பெரிக்கலாம்.

(7) தென்னையில் பலவகை உண்டு. தென்னையில் பாளைகள் உண்டு. தென்னையில் வண்டு விழாமல் அடிக்கடி பார்த்துவரவேண்டும். தென்னையில் பறவைகள் கூடுகட்டுகின்றன.

(8) தென்னையே! தென்னையே! ஏன் வளர்ந்தாய் இவ்வளவு உயரம்? தென்னையே! நல்ல நிழல் கொடுக்க மாட்டாயா? தென்னையே! இளநீர் கொடு. தென்னையே! காற்றினால் விழுந்திடாதே.

பாடம் 42

விருதுநகர்

(1) விருதுநகர் பெரிய பட்டணம். விருதுநகர் ஒரு இரயில்வே சந்திப்பு. விருதுநகர் வியாபாரத்திற்குப் பேர் போனது. விருதுநகர் தமிழுக்குத் தொண்டு செய்து வருகிறது. விருதுநகர் பல துறைகளில் விருத்தியாகிக்கொண்டு வருகிறது. விருதுநகர் ஒரு காலத்தில் சிறு பட்டியாக இருந்தது.

(2) விருதுநகரைச் சுற்றிலும் நந்தவனங்கள் பல இருக்கின்றன. விருதுநகரை ஒரு பெரிய வியாபார ஸ்தலம் என்பார்கள்.

(3) விருதுநகரால் தமிழ் நாட்டிற்கே நல்ல புகழ் உண்டு. விருதுநகரால் தமிழ்க் கலை வளருகிறது. விருதுநகரால் வியாபாரம் விருத்தியாகிறது.

(4) விருதுநகருக்கு வடக்கே சத்திர ரெட்டிபட்டி. விருதுநகருக்குக் கிழக்கே ரோசல்பட்டி. விருதுநகருக்குத் தெற்கே சூலக்கரை. விருதுநகருக்கு மேற்கே குமாரலிங்கபுரம்.

(5) விருதுநகரிலிருந்து பல வியாபாரச் சாமான்கள் ஏற்றுமதியாகின்றன. விருதுநகரிலிருந்து அருப்புக்கோட்டைக்கு மோட்டார் அடிக்கடி போகிறது. விருதுநகரிலிருந்து வடக்கே, தெற்கே, மேற்கே ரயில்பாதை செல்கிறது.

(6) விருதுநகரினுடைய வியாபாரம் மிகவும் பெரிது. விருதுநகரினுடைய ஜனத்தொகை பெருகிக்கொண்டே வருகிறது.

(7) விருதுநகரில் பல ஜாதியார் வசிக்கிறார்கள். விருதுநகரில் பால குருகுலத்தில் கலை மகளுக்கு ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. விருதுநகரில் சுமார் 25 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. விருதுநகரில் கல்லூரி ஒன்று இருக்கிறது.

(8) விருதுநகரே! உன் புகழ் ஓங்குக! விருதுநகரே இன்னும் விருத்தியாகு. விருதுநகரே, நீ பலவித கலைகளிலும் சிறந்து விளங்குவாயாக!

பாடம் 43

பாலகுருகுல வித்யாலயம்

(1) பாலகுருகுலம் ஒரு நல்ல வித்யாலயம். பாலகுருகுலம் ரயில் நிலையத்திலிருந்து 6 பர்லாங் தூரத்திலிருக்கிறது. பாலகுருகுலம் உயர்தர ஆரம்பப் பாடசாலையாகும். பாலகுருகுலம் தமிழ், கணக்கு முதலிய பாடங்களை நன்ருய்ப் போதிக்கும்.

(2) பாலகுருகுல வித்யாலயத்தை பாலகுருகுலம் என்றும் சொல்லலாம். பாலகுருகுலத்தைப் பல அறிஞர்கள் புகழ்ந்திருக்கிருர்கள். பாலகுருகுலத்தைப்போல் காற்ருேட்டமான பள்ளிக்கூடம் வேறு எதுவும் உண்டா ?

(3) பாலகுருகுலத்தால் தமிழ் வளர்ச்சி பெறுகிறது. பாலகுருகுலத்தால் வியாபாரக்கணிதம் கற்பிக்கப்படுகிறது. பாலகுருகுலத்தால் இராட்டு விருத்தியாகிறது. பாலகுருகுலத்தால் பல பிரசுரங்கள், புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன.

(4) பாலகுருகுலத்துக்கு நாலாபுறமும் நல்ல வெளியுண்டு. பாலகுருகுலத்துக்கு மேற்கே இராமமூர்த்தி ரோடு, தெற்கு வடக்காய்ச் செல்கிறது. பால குருகுலத்துக்கு அருகே அநேக பங்களாக்கள் இருக்கின்றன.

(5) பாலகுருகுலத்திலிருந்து 6 பர்லாங் தூரத்தில் ரயில் நிலையம் இருக்கிறது. பாலகுருகுலத்திலிருந்து படித்து வெளியேறும் மாணவர்கள் சிறப்பாய் வாழ்கிருர்கள். பாலகுருகுலத்திலிருந்து நல்ல பஞ்சும், இராட்டும், வில்லும், வீசனமும் வாங்கலாம்.

(6) பாலகுருகுலத்தினுடைய சேவை, பலராலும் பாராட்டப்பட்டிருக்கின்றது. பாலகுருகுலத்தினுடைய கல்வி முறை சிறந்தது.

(7) பாலகுருகுலத்தில் இராட்டுப் பயிற்சி நன்கு நடைபெறுகிறது. பாலகுருகுலத்தில் கலைமகள் ஆலயம் இருக்கிறது. பாலகுருகுலத்தில் இந்தியா தரைப்படம் பார்க்

கத்தக்கது. பாலகுருகுலத்தில் உலகப் படமும், மொழி வாரி மாகாணப் படமும் சுவரில் பெரிதாய் அழகாக வரையப்பட்டிருக்கின்றன

(8) பாலகுருகுலமே! உன் புகழ் ஓங்குக! பாலகுருகுலமே! நம் நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும் மென்மேலும் உழைப்பாயாக. பாலகுருகுலமே! மற்ற கல்வி ஸ்தாபனங்களுக்கு வழிகாட்டியாகுக!

குறிப்பு :— பாடங்களின்படி ஒவ்வொரு வேற்றுமையிலும ஏராளமான வாக்கியங்களைச் சுத்தமாகச் சொல்லும்படி செய்துவிட்டால், சொந்தத்தில் கணக்கற்ற வாக்கியங்களைச் சொல்ல முடிவதுடன் கொச்சையாகப் பேசுவது, எழுதுவது, வாசிப்பது ஆகிய பிழைகளும் இலக்கணப் பிழைகளும் நீங்கும். சொந்தத்தில் கட்டுரைகள் எழுதவும் சொற்பொழிவுகள் ஆற்றவும் சக்தி ஏற்படும்.

பயிற்சி

ஆடு, எருமை முதலிய பல மிருகங்களைப்பற்றியும், சேவல், புறா முதலிய பல பறவைகளைப்பற்றியும், பனை, வேம்பு முதலிய பல மரங்களைப்பற்றியும், சொந்த ஊர், சொந்தப் பள்ளிக்கூடம் ஆகியவைகளைப்பற்றியும் ஒவ்வொரு வேற்றுமையிலும் ஏராளமாக சரள வாக்கியங்களைச் சுத்தமாகச் சொல்லும்படி செய்க. பிறகு எழுதும்படி செய்க.

கட்டுரைகள்

குறிப்பிட்ட பொருளைப் பற்றிச் சிந்தனை செய்து சில கேள்விகளை வரிசைப்படுத்திக்கொண்டு, அவைகளுக்கு விடை எழுதினல் சிறு கட்டுரைகள் (Composition) ஆகிவிடும். அதைச் சிந்தனை செய்து, சில குறிப்புகளை வரிசைப்படுத்தி எழுதிக் கொண்டு, அவைகளை விவரித்து எழுதினல் வியாசம் (Essay) ஆகிவிடும். அவைகளை விவரித்துக் கூட்டங்களில் பேசினல் சொற்பொழிவு எனப்படும்.

சிறு கட்டுரைகள் (Compositions)

பாடம் 44

பசு

(1) *பசு எந்த இனத்தைச் சேர்ந்தது ?* (2) *பசுவின் உடல் உறுப்புக்கள் எப்படி அமைந்துள்ளன ?* (3) *பசுவுக்கு ஆகாரப் பொருள்கள் என்னென்ன ?* (4) *பசுவின் சுபாவமென்ன ?* (5) *பசுவினுல் நமக்கு உபயோகம் என்ன ?*

பசு வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளில் ஒன்று. மிருகங்களில் மாமிசம் தின்பவையும் உண்டு; தின்னுதவையும் உண்டு. மாமிசம் தின்னுத மிருகங்களின் இனத்தைச் சேர்ந்தது பசு.

பசுவுக்கு இரட்டைக் குளம்புகள் உண்டு. அதற்குத் தலையில் இரண்டு கொம்புகள் உண்டு. பூரண வளர்ச்சி பெற்ற பசுவுக்கு கீழ்த்தாடையில் எட்டுப் பற்கள் உண்டு. பசுவுக்கு நீண்ட வால் உண்டு. வாலின் நுனியில் மயிர்க் குஞ்சம் இருக்கும்.

பசு புல், வைக்கோல், இளந் தளிர், தட்டை, இலை, தழை, கொடி முதலியவற்றைத் தின்னும். தவிடு பிண்ணுக்கு, பருத்திவிதை முதலியன பசுவுக்குப் பிரியமான உணவாகும்.

பசு பயந்து வெறிக்கும் சுபாவமுடையது. அது அவசர அவசரமாகப் புல்லை மேயும். பின் அது தனியாக இருந்து அசைபோடும். பசு சாதுவான மிருகம். ஆனுல் அது தனக்குத் தீங்கு செய்பவர்களைக் கொம்பினுல் முட்ட முயலும்.

பசு நமக்குப் பல வகைகளில் பிரயோசனமானது. பசுவிலிருந்து பால் கறக்கிறேம். பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய் எடுக்கிறேம். பசுவின் கொம்பு, எலும்பு, தோல் ஆகியவற்றிலிருந்து சீப்பு, பொத்தான், செருப்பு, தோற்பெட்டி முதலிய சாமான்கள் செய்கிறார்கள். பசுவின் சாணமும் கோமயமும் விவசாயத்திற்கு ஏற்ற சிறந்த உரமாகும். இந்துக்கள் பசுவைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள்.

பாடம் 45

காகம்

(1) காகம் என்பது என்ன? (2) காகத்தின் நிறம் உறுப்புக்கள் எப்படிப்பட்டவை. (3) காகம் தின்னும் உணவுகள், பழக்க வழக்கங்கள் என்னென்ன? (4) காகத்தினால் நமக்குப் பிரயோசனம் யாது? (5) காகத்தைப் பற்றிய பழமொழி என்ன?

காகம் ஒரு பறவை. அதற்கு காக்கா, காக்கை என்ற பெயர்கள் உண்டு. ''கா-கா'' என்று கத்துவதனால் அப்படிப் பெயர் வந்திருக்கலாம்.

காகத்தின் நிறம் கறுப்பு. கழுத்தில் மாத்திரம் சிறிது சாம்பல் நிறம் உண்டு. காகத்திற்கு மிருதுவான இறக்கைகள் இருக்கும். அதன் அலகு மிகவும் உறுதியானது. கால் விரல்களில் கூரிய வளைந்த நகங்கள் உண்டு.

காகம் அழுகிய பழம், புழு, பூச்சி, மாமிசம் முதலிய பொருள்களைத் தின்னும். சோறு, ரொட்டி முதலியவற்றையும் தின்னும். செத்த எலியைத் தின்ன காகத்திற்கு விருப்பம் மிகுதி. காகம் மரக்கிளையில் கூடுகட்டி வாழும். பேராசை, தந்திரம், திருட்டுத்தனம் ஆகிய துர்க்குணங்கள் அதனிடம் உண்டு. அதிகாலையில் கண் விழித்தல், குளித்தல், தன் இனத்தை அழைத்து உண்ணல் ஆகிய நல்ல பழக்க வழக்கங்களை அதனிடம் காணலாம்.

காகம் நமக்குச் சிலவகைகளில் பிரயோசனமானது. அது தெருக்களில் கிடக்கும் அழுகிய பொருட்களையும் எச்சிற் பொருட்களையும் தின்று தெருவைச் சுத்தமாக்குகின்றது. அதிகாலையில் ''கா—கா'' என்று கரைந்து நம்மைத் தூக்கத்திலிருந்து எழுப்புகின்றது.

''காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு'' என்ற பழமொழி நம் தமிழ் நாட்டில் வழங்குகிறது.'' முக்காலும் காகம் மூழ்கிக் குளித்தாலும் கொக்காகுமோ கொங்கணவா?'' என்று கேட்பார்கள். ''காகம் கரைந்துண்ணும்'' என்றார் திருவள்ளுவர்.

பாடம் 46

தென்னை

(1) தென்னைமரம் எங்கெங்கே நன்றாய் வளரும்? (2) தென்னைமரத்தின் பாகங்களில் ஒவ்வொன்றும் எப்படியிருக்கும்? (3) தென்னையால் நமக்கு என்னென்ன வகையில் பயன் உண்டு? (4) தென்னையினத்தைச் சேர்ந்த வேறு மரங்கள் எவை? (5) தென்னையைப்பற்றிய பழமொழி என்ன?

தென்னைமரம் உலகத்தில் உஷ்ணப்பிரதேசத்தில் மணற்பாங்கான இடங்களில் செழித்து வளரும். பொதுவாக அது ஆற்றங்கரை, கடற்கரை போன்ற மணற்பாங்கான இடங்களில் நன்றாய் வளரும். மலையாள நாட்டில் தென்னை அதிகம்.

தென்னை மரத்திற்கு மற்ற மரங்களைப்போல் கிளைகளும், இலைகளும் இல்லை. மரத்தின் உச்சியில் நீண்ட தோகை மட்டைகள் அடர்ந்திருக்கும். மட்டைகளுக்கிடையே தென்னங் குலைகளைக் காணலாம். மட்டையிலிருந்து இருபுறமும் பச்சை அல்லது பழுப்புத் தோகைகள் வளர்ந்திருக்கும். தென்னங்குருத்து அழகாயிருக்கும். மரத்தின் உச்சியில் தென்னங்குலையில் இளநீர்க் காய்கள் கொத்துக் கொத்தாகக் காய்த்திருக்கும்.

தென்னைமரம் நமக்குப் பல வகையில் பயன் படும். வெயிற்காலத்தில் இளநீர்ப் பானம் நன்மை தரும். தேங்காயின் பருப்பு நமக்குச் சிறந்த ஆகாரமாகும். முற்றிய தேங்காய்ப் பருப்பிலிருந்து தேங்காயெண்ணெய் எடுப்பார்கள். சிரட்டைகள் தீயெரிக்கவும், அகப்பை செய்யவும் பயன்படும். மட்டையின் நாரிலிருந்து கயிறு திரிப்பார்கள். தென்னங் கிடுகுகளால் வீடு வேயலாம்; பூக்குடலை, விசிறி முதலியன பின்னலாம். தோகையின் நரம்புக் குச்சிகளால் விளக்கு மாறு கட்டுவார்கள்.

பனை, கமுகு, ஈச்சை, பேரீச்சை ஆகிய மரங்கள் தென்னையினத்தைச் சேர்ந்தவை. இவைகள் எல்லாவற்றிலும் தென்னையே மனிதருக்கு மிகவும் உபயோகமுள்ளது.

"தென்னைமரத்தில் தேள் கொட்ட, பனைமரத்தில் நெறி கட்டுமா?" என்பது பழமொழி. "தென்னையின் நிழல் தெரு வடைத்துவிடுமா?" என்றும் கேட்பார்கள். "தாளுண்ட நீரைத் தலையாலேதான் தரும்" என்பர்.

கட்டுரைகள் (Essays)

பாடம் 47

விருதுநகர்

(1) அமைந்துள்ள இடம் (2) நகர் அமைப்பு (3) ஜனங்களும் தொழில்களும் (4) முக்கிய கட்டிடங்களும் ஸ்தாபனங்களும் (5) நகர நிர்வாகம் (6) இதர விசேஷங்கள்.

விருதுநகர், இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த சாத்தூர் தாலுகாவிலுள்ள ஒரு முக்கிய வியாபார ஸ்தலம். தென்னிந்திய ரயில் பாதையிலுள்ள ஒரு முக்கிய சந்திப்பு (ஜங்ஷன்). சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் பெரியசாலையில், மதுரைக்குத் தெற்கே சுமார் முப்பதாவது கல்லில் அது அமைந்திருக்கிறது. இங்கிருந்து நான்கு திசைகளிலும் சாலைகள் செல்கின்றன. இந்தச் சாலைகள் மூலம் வண்டிப் போக்குவரத்துக்கள் நடைபெறுகின்றன.

நகரின் நடுவே அழகிய பெரிய தெப்பக்குளமும், தெப்பக்குளத்தைச் சுற்றிக் கடைத்தெருக்களும் மிக்க அழகாய் அமைந்துள்ளன. தெற்கு வடக்காக ஒரு மைல் நீளமுள்ள கடைவீதியும், நகரின் முக்கிய கோவிலாகிய மாரியம்மன் கோவிலுக்கு மேற்புறமுள்ள பெரிய மைதானமும், மைதானத்தைச் சுற்றியமைந்த கோவில்களும், க்ஷத்திரிய வித்யாசாலையும் நகருக்கு அழகைத்தருவனவாகும்.

விருதுநகரின் ஜனத்தொகை சுமார் ஐம்பதினாயிரம். பெரும்பான்மையோர் நாடார் பெருமக்கள். முக்கிய தொழில் வியாபாரம். சிறிது விவசாயம் நடைபெறுகிறது. சில கைத்தொழில்களும் நடக்கின்றன.

இங்கு பஞ்சாலைகளும், எண்ணெய் மில்களும், மாவு மில்களும், பருப்பு உடைக்கும் தொழிற்சாலைகளும் அநேக

மிருக்கின்றன. விருதுநகர் சிறந்த வியாபார ஸ்தலம். இங்கு கைவண்டித் தொழிலாளர்கள் பலர் இருக்கின்றனர். இங்கு ஒரு பெரிய பஞ்சுப்பேட்டை இருக்கிறது. விருதுநகரில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலுமுள்ள பெரிய நகரங்களிலும் வியாபாரம் நடத்தும் பெரிய வியாபாரிகள் இந்நகரில் இருக்கிறார்கள். இந்நகரின் மக்களுக்குப் பயனுள்ள ஸ்தாபனங்கள் க்ஷத்திரிய வித்தியாசாலை, தபால் ஆபீஸ், நகராண்மைக் கழகக் காரியாலயம், வருமானவரிக் காரியாலயம், செந்திக் குமார நாடார் கல்லூரி, பாலகுருகுல வித்யாலயம் முதலியன வாகும். இந்நகரில் ஒரு கல்லூரியும், ஆண்களுக்குரிய உயர் நிலைப்பள்ளிகளும், பெண்கள் உயர்நிலைப்பள்ளிகள் இரண்டும், பல ஆரம்பப்பாடசாலைகளும் இருக்கின்றன.

இங்கு பல்வேறு அரசியற் கூடங்களும், தொழிற் சங் கங்களும், இலக்கிய மன்றங்களும், நூல் நிலையங்களும், அறநெறிக் கழகங்களும் இருக்கின்றன. பல அச்சு யந்திர சாலைகளும், பத்திரிகைக் காரியாலயங்களும் இருக்கின்றன.

இந்நகர் ஒரு முனிசிபாலிடியாகும். 25 வார்டுகளைக் கொண்டது. 28 கௌன்சிலர்களைக்கொண்ட சபையுடன் நகராண்மைக் கழகத் தலைவர் (சேர்மன்) ஆணையாளரின் (கமிஷனரின்) ஆலோசனையுடன் நகர நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்.

இவ்வூரில் ஆண்டு தோறும் பங்குனி மாதம் நடைபெறும் மாரியம்மன் திருவிழா மிகச் சிறப்பானது. திருவிழாக் காலத்தில் அகில இந்தியப் பொருட்காட்சி நடைபெறும். விருதுநகரின் ஜனத்தொகை சுமார் ஐம்பதினாயிரம். விருதுநகரில் பல வகுப்பினர்கள் இருக்கிறார்கள். பெரும்பான்மையோர் நாடார் பெருமக்கள். இவர்கள் சிறந்த வணிகர்கள். அகில இந்தியாவிலிருந்தும் வெளிநாடுகள் பலவற்றிலிருந்தும் இறக்குமதி செய்கிறார்கள்.

பாடம் 48

பாலகுருகுல வித்யாலயம்

(1) *பெயரும் இடமும்* (2) *அமைப்பும் கட்டிட வகையும்* (3) *விசேஷ அம்சங்கள்* (4) *கல்வி* (5) *இலட்சியம் (குறிக்கோள்)*

எங்கள் பள்ளிக்கூடத்திற்கு பாலகுருகுல வித்யாலயம் என்று பெயர். ‘‘குருகுலம்’’ எனச் சுருக்கமாகக் கூறு வதும் உண்டு. குருகுலம், விருதுநகர் என்னும் பெரிய நகரின் கீழ்த்திசையில் இராமமூர்த்தி ரோட்டின் ஓரமாக அமைந்துள்ளது. ரெயில் நிலையத்திற்குத் தென்கிழக்கே சுமார் 6 பர்லாங் தூரத்தில் இருக்கிறது.

சுமார் 16 ஏக்கர் பரப்புள்ள நிலத்தின் முன்புறம் வனப்பும் சிறப்பும் மிக்க கட்டிடங்கள் இருக்கின்றன. முன் பத்தியில் தென்புறம் மொழிப் பயிற்சி, தொழிற் பயிற்சி வகுப்புகளும், வடபுறம் காரியாலயமும் இருக்கின்றன. காரியாலயத்தைத் தொடர்ந்து கிழக்குப் பத்தியில் பார்வையாளர் இருக்கை யறைகளும், ஆசிரியர் இருக்கையறையும், தலைமையாசிரியர் அறையும், உபகரணச் சாலையும் இருக்கின்றன. சற்றுக் கிழக்கே ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் வகுப்பறைகள் அமைந்துள்ளன. வேப்பமரக் காற்றும் நிழலும் படும்படியாக கட்டப்பட்டுள்ளன. காற்ரேட்டமும், வெளிச்சமும், வேறு பல வசதிகளும் இங்குபோல் வேறெந்தப் பள்ளிக்கூடத்திலும் பார்க்கமுடியாது என்றே சொல்லலாம். வகுப்பறைகளுக்கு வடக்கே தென்னந்தோட்டமும், கிழக்கே பண்ணை நிலங் களும் உண்டு. வகுப்பு அறைகளுக்குத் தெற்கே ஆரம்பப் பாடசாலை இருக்கின்றது.

இங்கு, கலைமகள் ஆலயம் அமைந்திருப்பது இப்பள் ளிக்கே தனிச் சிறப்பைத் தருவதாகும். தினமும் காலையில்

கலைமகள் வழிபாடு நடைபெறும். சங்கீத வித்வானைக் கொண்டு சங்கீத வகுப்புகளும் பஜனையும் நடைபெறும். மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லுமுன் கை,கால் கழுவி கலைமகளை வணங்கிவிட்டு வரிசையாகச் செல்லுவார்கள். காலையிலும் மாலையிலும் மாணவரும் மற்றையோரும் நீராடு வதற்காக வசதியான அறைகளும் கட்டப்பட்டுள்ளன. மாண வர்கள் உற்சாகமாக நீந்தி விளையாடவும், நீந்தக் கற்றுக் கொள்ளவும் பண்ணை நிலத்தில் கிழக்குக்கோடியில் விசால மான குளம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. மாணவர் களும் மற்றையோரும் ஓய்வுநேரத்தைப் பயன்படுத்த வாசக சாலை, புத்தகாலயம், ரேடியோ முதலிய வசதிகள் செய்யப் பட்டிருக்கின்றன.

பார்த்தவுடன் பல விஷயங்களை எளிதில் அறிந்துகொள் ளும் முறையில் இந்தியாவின் உருவத்தைத் தரையில் அழ காகக் கட்டி அதில் நதிகளில் தண்ணீர் ஓடிக்கொண்டிருப் பதுபோலவும், சமுத்திரங்களில் தண்ணீர் நிற்பதுபோலவும் காட்டப்பட்டிருப்பது எல்லோர் கவனத்தையும் கவரத்தக்கது. பெரிய உலகப் படமும், இந்தியாப் படமும் மொழிவாரி மாகாணப் படமும் சுவரில் அழகாய் வரையப்பட்டிருக்கின் றன. பள்ளிக்கூடம் முழுவதும் எப்பொழுதும் சுத்தமாகவும் அழகாகவும் காட்சியளிக்கும்.

இங்கே உயர்தர ஆரம்பப் பாடசாலைக்குரிய எட்டு வகுப்புகள் உள்ளன. இங்கு சாதாரணக் கல்வியுடன் மொழி யறிவுக் கல்வியும், தொழிற் கல்வியும், ஒழுக்கமும் சிறப் பாகக் கற்பிக்கப்படுகின்றன. சாஸ்திரீய முறையில் தேகப் பயிற்சி கற்பிக்கப்படுகிறது. தேகப் பயிற்சிசாலை தனியே உண்டு. பாலகுருகுல வித்யாலயம் 1939-ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது. போதனுமுறைப் பாடசாலையும் இவ் வருடம் ஆரம்பமாகியிருக்கிறது.

எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றில் டிக்டேஷன்

முந்தின பாடங்களும் பயிற்சிகளும் முடிந்தபிறகு கீழ்க்கண்டவற்றில் வரிசைக்கிரமமாக ஆசிரியர் சொல்லச்சொல்ல மாணவர்களை எழுதும்படி செய்யவேண்டும். அதாவது டிக்டேஷன் (dictation) போடவேண்டும். மாணவர்கள் எழுதியதை ஆசிரியர் திருத்தி மார்க்குப்போடவேண்டும். ஆசிரியரின் இலட்சியம் மாணவர்கள் நூற்றுக்கு நூறு மார்க்கு எடுக்கவேண்டுமென்பதாக இருக்கவேண்டும். எழுத்து, சொல், சொற்றொடர் வாக்கியம் ஆகியவைகளில் ஒரு பிழைகூட இல்லாமல் எழுதத் தெரியும் வரை அடிக்கடி டிக்டேஷன் போடுக, கட்டுரையும் வியாசமும் எழுதும்படி செய்க.

1. எழுத்துக்களில் டிக்டேஷன்

ஔ, தொ, ஐ, தோ, பே, ஊ, மெ, கூ, ணோ, சு, ரூ, ங், வெள, றை, ழூ, ணே, ஞ, டே, ணோ, ஞா, ரொ, லே, ணோ, தூ, ளொ, ணொ, ஞ், ணு, மொ, ரா, னே, போ, ழை, ணு, ளே, மூ, ரோ, ளு, ஞு, தை, யூ, நீ, பூ, ரி, ன், ழ், ண், ளு, ஞெ, வை, றூ, கெ, னே, டீ, ரோ, னை, ர், னெ, கோ, பொ, சூ, ந, நி, போ, மே, ர, லா, வே.

2. சொற்களில் டிக்டேஷன்

அரிவாள், அழுக்காறு, ஆற்றல், இறுமாப்பு, உழவர், உள்ளங்கை, எழில், எள்ளல், ஒழுங்கு, ஔவியம், மங்களம் அஞ்சாமை, சண்டாளன், கந்தகம், கம்பளம், முழக்கம், உழைப்பு, சுழற்றல், பொழில், கொழுப்பு, நழுவல், பளபளெனல், ஒளிர்தல், நாழிகை, வேளாண்மை, தோன்று, மின்னல், சான்றோர், தோளுமை.

3. சொற்றொடர்களில் டிக்டேஷன்

முந்நூறு, நானூறு, ஐந்நூறு, எண்ணூறு, தொண்ணூறு, தொள்ளாயிரம், பன்னீராயிரம், கற்றுழை, சொற்றொடர், நற்றமிழ், நன்னூல், நன்னாள், புன்னகை, எட்டுணையும், எத்துணையும், ஆட்கொல்லி, நாடோறும், நாற்றிசை, தோற்பெட்டி, தோற்றுருத்தி, மெல்லப்போ, கள்ளவுள்ளம், தோட்டி தொண்டன், வெள்ளை சொள்ளை, கொலைகளவு, சொட்டுத்தேன், தெண்ணீர்

தெளி, தொண்ணூறு, வாழ்வு தாழ்வு, நாற்றுநரம்பு, பெண்டு பிள்ளைகள், பேரன் பேர்த்திகள், தெளிந்த மோர், வாணுட்கள், வீணுட்கள், நல்லெண்ணெய், பசு வெண்ணெய். பொற்ருமரை, வெண்டாமரை, வெவ்வேறு, வெற்றுடம்பு, உள்ளொளி, பொன்னகரம், பூணூல், புன்னுனி, பதிற்றுப்பத்து, பெண்ணலம், சோற்றிவிருந்து, மேற்றிசையில்.

4. வாக்கியங்களில் டிக்டேஷன்

1. காலே மாலே கடவுளே வாழ்த்தி வணங்குக
2. கொள்ளேகொண்ட பொருள் வெள்ளமேற்றுரும்பு.
3. சொற்களில் சோர்வு நெற்களில் பதராம்.
4. பிழைபடச் சொல்லின் பேணுதல் நன்ரே ?
5. வெட்டெனப் பேசின் சட்டெனப்பகையாம்.
6. ஒளவையார் எழுதிய ஆத்திசூடி முதலியன செவ்வையாய்க் கற்றுச் சீராய் ஒழுகுக.
7. சான்ருேரெனப்படுபவர் ஆன்ற அறிவுடையோர்.
8. பற்றற்ருன் தாளேப் பற்றுவதற்கு உலகப் பற்றற்று உரிய கடமையாற்றி வாழவேண்டும்.
9. புலேயுங் கொலேயுங் களவுந் தவிர்க.
10. கல்விக்கழகு கசடறமொழிதல்.
11. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்.
12. அழுகிய வாழைப்பழம் வழ வழ கொழ கொழ
13. கற்றல், கேட்டல், தெளிதல், ஆகியவை ஞானம் பெறுவதற்கு வழிகள்.
14. சிலர் அல்லும் பகலும் ஊணுறக்கமின்றி, உழைத்து இளேத்துக் களேத்து அலுத்துச்சலித்து அலேகின்ருர்கள்.
15. கடற்கரையில் மணற்குவியலிலே உரல் உருளுமா ? புரளுமா ?
16. கள்ளமில்லா உள்ளத்தெழுந்த தெள்ளத் தெளிந்த வள்ளுவர் தமிழை அள்ளி அள்ளிப் பருகச் செய்யும் வள்ளல்கள் வாழ்க !
17. எழுத்தியலும் சொற்றெடராக்கமும் மொழிப்பயிற்சியும் பழுதறக் கற்பித்துப் பிழையின்று அழகாக எழுதப் பயிற்றும் பால குருகுலம் வாழ்க ! வாழ்க !!

பத்திரிகை வாசிக்கப் பயிற்சி

ஏதாவது ஒரு தினசரி பத்திரிகையை எடுத்து, அதின் தலைப்பில் பெரிய எழுத்துக்களில் எழுதியிருப்பவைகளை வாசித்துக் காட்டி அவைகளை வாசிக்கும்படி செய்யவேண்டும். அதிலுள்ள சிறு சிறு செய்திகளை வாசித்துக்காட்டி, அவைகளை அவர்களாக வாசிக்க உருசியை உண்டாக்க வேண்டும். புதிதாக வந்த பத்திரிகை கிடைக்காவிட்டால் பழைய பத்திரிகைகளை வைத்துக் கொள்ளலாம். ஆனந்த விகடன், கல்கி, கதிர் முதலிய வாரப் பத்திரிகைகளில் வரும் சிறு சிறு கதைகளை வாசிக்கச் செய்ய வேண்டும்.

செய்யுட்களைக் கற்கப் பயிற்சி

எங்கள் வெளியீடாகிய சிறுவர் செய்யுட் கோவையிலுள்ள ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, நறுந்தொகை, மூதுரை, ஔவையார் தனிப்பாடல்கள் ஆகியவைகளை ஒவ்வொன்றாக வாசித்துக் காட்டி அதன்படி வாசிக்கச் செய்க. அவைகளிலுள்ள சொற்றொடரை எழுத்துக் கூட்டிச் சொல்லும்படி செய்க. அருத்தமும் சொல்லுக.

பத்திரிகைகளும் புத்தகங்களும் வாசிக்க நேரமில்லாதவர்களுக்கும் வசதி இல்லாதவர்களுக்கும் மேலே சொன்ன செய்யுட்களைத் தினமும் வாசிப்பது முக்கியமாகும். இல்லாவிட்டால் இவர்கள் தமிழ் வசனத்தைக் கற்றது மறந்து விடும்.

சிறுவர் செய்யுட் கோவையிலுள்ள சொற்றொடர்களைப் பிரித்து, சொற்றொடர்களில் நன்கு தேர்ச்சி பெறுக. செய்யுட்களின் சொற்றொடரைப் பிரித்த பின் அதைச் சொந்தத்தில் வாக்கியங்களாக எழுதி வசன நடையில் தேர்ச்சி பெறுக. "தமிழ்ச் செய்யுளை எளிதில் கற்கும் வழி" என்ற பெயரால் ஒரு புத்தகம் வெளியிடப் பெறும்.

அனுபந்தம்

தமிழ் எழுத்துக்களின் அமைப்பு

தமிழ் எழுத்துக்களின் அமைப்பில் நாம் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியவை மூன்று விஷயங்களாகும் :—(1) தமிழ் எழுத்துக்கள் முதல் எழுத்துக்களென்றும், சார்பு எழுத்துக்கள் என்றும் இரு வகையாகவும் ; (2) குறில், நெடில் என்று இரு வகையாகவும்; (3) வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்று வகையாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

உயிரென்றும், மெய்யென்றும், உயிர்மெய்யென்றும் மனித சரீர அமைப்புப்படியே தமிழ் எழுத்துக்களையும், தமிழ் மொழியையும் அமைத்திருக்கிறார்கள்.

ஒரு மொழியை எளிதாகக் கற்பது, அந்த மொழிக்கான எழுத்துக்களை மதி நுட்பத்துடன் அமைப்பதையே முற்றிலும் பொறுத்ததாகும். நூல் வடிவத்தில் தோன்றிய மொழிகளில் தமிழ் மொழி உலகத்தில் முதல் முதலில் தோன்றியதாக இருந்தும், அதன் எழுத்துக்கள் மிக மிக மதி நுட்பத்துடன் அமைத்திருப்பது அற்புதத்திலும் அற்புதமாகும்.

எழுத்துக்கள் ஒரு மொழியின் ஓசையை அதன் ஒலிப்படி எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் ஏற்பட்டனவாகும். அப்படியே எழுத்துக்களால் எழுதவேண்டுமானால் அதற்கு எழுத்துக்கள் அதிகமாக இருக்கவேண்டும். அப்படி எழுத்துக்கள் அதிகமாக இருந்துவிட்டால் அம்மொழியின் சொற்களை எழுத வாசிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. இந்த அடிப்படையைத் தெரிந்து கொள்ளாமல் ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளின் எழுத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலே சொன்ன அடிப்படையை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் கற்கும் வழியைத் தெரிந்து கொள்ள முடியாது.

அதிகமான எழுத்துக்களைக் கற்பதில் நாட்கள் அதிகமாகக் கூடாதென்பதற்காகவும், கடினமாக இருக்கக்கூடாதென்பதற்காகவும் தமிழ் எழுத்துக்கள் முதல், சார்பு ; குறில், நெடில் ; வல்லினம்,

மெல்லினம், இடையினம் என்று விசேஷ மதிநுட்பத்துடன் அமைக்கப்பட்டிருக்கின்றன.

முதலெழுத்தாகிய உயிரெழுத்துக்கள் பன்னிரண்டையும் மனப் பாடமாகச் சொல்லத் தெரிந்து விட்டால், ஒவ்வொரு மெய்யெழுத்தின் ஒலியுடனும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களின் ஒலியையும் சேர்த்து, சார்பு எழுத்தாகிய 216 உயிர்மெய் யெழுத்துக்களையும் உடனே சொல்லிவிடலாம். ஏனென்றால் சார்பு எழுத்தாகிய 216 உயிர்மெய் யெழுத்துக்களுக்குத் தனி ஒலி கிடையாது. ஒரு எழுத்தின் குறில் ஒலியைத் தெரிந்துவிட்டால், அதன் நெடில் ஒலியை உடனே சொல்லி விடலாம். நெடில் ஒலியைச் சொல்லக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை.

முதலெழுத்தாகிய மெய்யெழுத்தின் வல்லின எழுத்தைச் சொல்லத் தெரிந்துவிட்டால், அதன் மெல்லின எழுத்தை எளிதாகச் சொல்லி விடலாம். மெய்யெழுத்துக்களை எழுதத் தெரிந்துவிட்டால் உயிர்மெய்யெழுத்துக்கள் 216-ம் எழுதத் தெரிந்து விடும்.

216 உயிர்மெய் எழுத்துக்களும் 18 மெய் யெழுத்தின் வடிவத்திலிருந்து உண்டாக்கப்பட்டிருப்பதால், எழுத்துக்கள் குறைவாக உடைய மொழிகளைப் போல, தமிழ் மொழியை விரைவாக அச்சுக் கோக்கவும், 'டைப்' அடிக்கவும் முடியும். மேலும் தமிழுக்கு எழுத்தொலியும், சொல்லொலியும் ஒன்றாக இருப்பதால், தமிழைச் சிறிது கற்றவுடன் அதை எவரும் அச்சுக் கோக்கவும், 'டைப்' அடிக்கவும் முடியும். ஆங்கிலத்திற்கு எழுத்தொலியும் சொல்லொலியும் வெவ்வேறாக இருப்பதால், ஆங்கிலத்தைப் பல ஆண்டுகள் நன்கு கற்று அதன் சொற்களின் எழுத்து வரிசைகளையும் உச்சரிப்பையும் நன்கு மனப்பாடம் செய்து வைத்திருப்பவர்களால்தான் ஆங்கில மொழியை அச்சுக் கோக்கவும், 'டைப்' அடிக்கவும் முடியும்.

சார்பு எழுத்தாகிய 216 உயிர்மெய் யெழுத்துக்களும் மெய் யெழுத்துக்களின் ஒலியும், உயிரெழுத்துக்களின் ஒலியும் சேர்ந்த ஒலியாக இருப்பதால், முதலெழுத்து முப்பதைக் கொண்டே சுருக்கெழுத்து (**Short-hand**), தந்தி அடித்தல் முதலியவைகளை அமைக்கலாம்.

தமிழ் எழுத்துக்களின் அமைப்பைத் தெரியாதவர்களும், தமிழைச் சிதைக்க வேண்டுமென்று நினைக்கிறவர்களும் தமிழ் எழுத்துக்களை மாற்றம் செய்ய வேண்டுமென்றும், சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றும் பேசுவார்கள், எழுதுவார்கள். தமிழ் மொழியை அதன் அமைப்புப்படி கற்கும் முறை பரவிவிட்டால், தமிழ் எழுத்துச் சீர்திருத்தக்காரர்களின் அறியாமை நீங்குவதுடன் தமிழ்த் தாய் உலக மொழிகளின் அரியாசனங்களில் முதன்மையாக வீற்றிருப்பாள். இதற்குத் தமிழ்த் தொண்டர்கள் தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்கும் முறையை முதலில் பரப்ப வேண்டும். தமிழ்ச் செய்யுளை அதன் அமைப்புப்படி கற்கும் முறையை இரண்டாவது பரப்ப வேண்டும்.

இந்தப் புத்தகத்தின் முகவுரையும் அனுபந்தமும் எழுத்து மாற்றம் செய்யப்படாமலே, 'லைனோ' இயந்திரத்தில் டைப் அடித்து அச்சுக் கோக்கப்பட்டதாகும். தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்து மாற்றம் செய்தால்தான் விரைவில் 'டைப்' அடிக்கவோ, 'லைனோ'வில் 'டைப்' அடித்து அச்சுக் கோக்கவோ முடியுமென்று சொல்லுவது தவறாகும்.

தமிழ் எழுத்துக்களின் வடிவ அமைப்பு :

ஒன்றுக்கொன்று சம தூரமுள்ள ஐந்து கோடுகளுக்குள் தமிழ் எழுத்துக்களின் வடிவ அமைப்பு முழுவதும் அடங்கும். அப்படி அமையும்போது நடுக்கோடு எழுத்துக்களுக்கு நடுவில் இருக்கும். இதை முதற் பாடத்தைப் பார்த்து எவரும் எளிதில் தெரிந்து கொள்ளலாம். தமிழ் எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களும் ஆசிரியைகளும் எழுத்துக்கள் ஐந்து கோடுகளுக்குள் அமைந்திருப்பதை முதற் பாடத்தைப் பார்த்து முதலில் நன்றாய் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஆனால், எழுத்துக்களை எழுதக் கற்பதற்கு ஐந்து கோடுகளும் தேவையில்லை. ஆரம்பத்தில்கூட மூன்றுகோடுகள் போதும். ஏனென்றால், மூன்று கோடுகளுக்குள் சில எழுத்துக்களின் வடிவம் முழுவதும் அமைந்து விடுவதுடன், மற்ற எல்லா எழுத்துக்களின் பிரதான வடிவங்களும் மூன்று கோடுகளுக்குள் அமைந்து விடுகின்றன.

கோட்டிற்குக் கோடு இடைவெளி ஒன்று போலிருக்கும்படி சிலேட்டுக் குச்சியால் சிலேட்டில் மூன்று கோடுகள் போட்டு எழுதக் கற்றுக் கொடுத்தால் தமிழ் எழுத்துக்களை எவரும் எளிதாகவும் அழகாகவும் எழுத முடியும். மூன்று கோடுகளில் எழுதிப் பழகியபின் சிலேட்டில் ஒரு கோடு போட்டு அதில் எழுதப் பழக்க வேண்டும். இப்படி ஒரு கோட்டில் எழுதும்போது எழுத்துக்கள் அவைகளின் உருவ அமைப்புப்படி வெகு அழகாக இருக்கும். இப்படி எழுத்துக்கள் ஒரு கோட்டில் அமைப்புப்படி அழகாக இருப்பதை 9 ஆம் பாடத்தில் பார்க்க.

மற்ற மொழிகளின் எழுத்துக்களைக் கோடுபோட்டு எழுதினால் வரி கோணாமல் எழுதுவதற்கு மட்டுமே கோடு உபயோகப்படுமே யன்றி எழுத்துக்களின் அமைப்புப்படி அழகாக எழுத உபயோகப் படாது.

தமிழ் எழுத்துக்களின் வடிவ அமைப்பைத் தெரிந்து கொள்ளா தவர்களே உயிரெழுத்துக்களை எழுதக் கற்றுக் கொடுப்பது கடின மென்று சொல்லி, முதலில் ட, ப, ம முதலிய வரிகளின் எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொடுக்கச் சொல்லுவார்கள். அதற்கிணங்க புத்த கம் எழுதி வெளியிட்டு விற்று வருவார்கள். முதலில் உயிரெழுத்துக் களைக் கற்காமல் சார்பு எழுத்தாகிய உயிர்மெய் யெழுத்துக்களுக்குப் போனால், தமிழ் எழுத்துக்களைக் கற்க முடியாது. தமிழைப் பிழை யின்றி வாசிக்கவும் எழுதவும் முடியாது.

தமிழ் எழுத்துக்களை கற்றுக்கொடுக்கும் விதம்

மேலே கூறியபடி தமிழ் எழுத்துக்களின் அமைப்பைத் தெரிந்து கொண்டவர்களுக்கு, அவைகளை விரைவில் எளிதாக கற்றுக் கொடுக்க முடியும்.

தமிழ் எழுத்துக்களை இரண்டு படிகளாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். முதலில் எழுத்துக்களைச் சுத்தமாகச் சொல்லவும், மனப் பாடமாக ஒப்புவிக்கவும் கற்றுக் கொடுக்க வேண்டும். இரண்டாவது எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

வரிக்கு 13 எழுத்துக்கள் வீதம் 19 வரிகளில் 247 எழுத்துக்களை அமைத்துக்கொள்ள வேண்டும். குறில், நெடில் எழுத்துக்களை

இரட்டை இரட்டையாகவும், மற்ற எழுத்துக்களைத் தனித் தனியாக வும் கற்றுக் கொடுக்க வேண்டும். இதிலும் முதல் பாடத்தில் கண்ட படி ம—வரி முடியவுள்ள 11 வரியின் 143 எழுத்துக்களை முதலில் கற் றுக் கொடுத்துக்கொண்டு அந்த 143 எழுத்துக்களுக்குள் வரும் சொற்கள் கொண்ட 4, 5, 6, 7 ஆம் பாடங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். 7 ஆம் பாடம் முடிய நன்கு கற்றுக்கொடுத்த பிறகு, ம— வரிக்குப் பிறகு 8 வரிகளின் 104 எழுத்துக்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். ம—வரிக்குப் பிறகு வரும் எழுத்துக்கள் ஒன்றிற் கொன்று நெருங்கிய ஒலியுடனிருப்பதால் இவைகளை முதலில் கற்றுக் கொடுக்கக் கூடாது.

முதலில் ம— வரி முடியக் கற்றுக் கொடுத்துக்கொண்டு அவைக ளுக்குள் சொற்களைக் கற்றுக் கொடுப்பதால், தமிழ் வசனத்தை விரை வில் எளிதாகக் கற்றுக் கொடுக்க முடிகிறது. நாங்கள் கூறும்முறை புதுமையாகும். தமிழ் மொழி அமைப்புப்படி இப்படித்தான் கற்றுக் கொடுக்க வேண்டும்.

1, 2, 3, 4, 5, 6, 7 ஆம் பாடங்களை முடித்துக்கொண்டு 8 ஆம் பாடம் ம—வரிக்குப்பின் வரும் மற்ற 8 வரிகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும். ஒன்றுக் கொன்று நெருங்கிய ஒலியை உடைய இந்த வரி களை 10 ஆம் பாடத்தில் கண்ட படங்களின் உதவியுடன் கற்றுக் கொடுக்க வேண்டும். அதன் பின் 11 ஆம் பாடத்தில் கண்டபடி ன— வரி எழுத்துக்கள், ண—வரி எழுத்துக்கள்; ர—வரி, ற—வரி எழுத் துக்கள்; ல—வரி, ள—வரி எழுத்துக்கள் ஆகியவைகளை இரட்டை இரட்டையாகச் சொல்லும்படியும்; ழ—வரி எழுத்துக்களை அதிக மாக அழுத்தித் தனியாகச் சொல்லவும் செய்ய வேண்டும்.

எழுத்துக்களைச் சுத்தமாக உச்சரிக்கக் கற்றுக் கொடுத்தல்.

கரும்பலகையில் கோட்டிற்குக் கோடு ஒரே சம தூரமிருக்கும்படி யாக சாக்பீசால் 3 கோடுகள் போட்டுக்கொண்டு, அதில் முதல் பாடத் தில் கண்டபடி அ முதல் ஃ வரையிலுமுள்ள 13 எழுத்துக்களையும் நன்கு தெரியும்படி அழுத்தமாக சாக்பீசால் எழுதுக. அ—வுக்குப் பின் , இந்த அடையாளமாகிய கால் புள்ளியும், ஆ—வுக்குப் பின் ;

இந்த அடையாளமாகிய அரைப் புள்ளியும், இதுபோலவே மற்ற குறில் நெடில் எழுத்துக்களுக்குப் பிறகு முறையே கால் புள்ளியும், அரைப் புள்ளியும்; ஐ க்குப் பின்னும், ஔ வுக்குப் பின்னும் . இந்த அடையாளமாகிய முழுப் புள்ளியும் போடுக.

அந்தந்த வரியிலுள்ள எழுத்துக்கள் 13 ம் ஒரே வரியில் மூன்று கோடுகளில் எழுதப்பட வேண்டும்.

அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ. ஒ, ஓ; ஔ. ஃ

மேலே கூறியவாறு மூன்று கோடுகள் போட்டுக் கரும்பலகையில் எழுதி முடிந்தவுடன், மாணவர்கள் எல்லோரையும், கரும்பலகையில் எழுதியிருக்கும் எழுத்துக்களைக் கவனிக்கும்படி செய்து கொண்டு, அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; என்று குறில் நெடில் எழுத்துக்களை இரட்டை இரட்டையாகவும், ஐ என்று தனித்தும் ஆசிரியர் நீளமான குச்சியால் எழுத்துக்களைச் சுட்டிக் காட்டிக் கொண்டே சொல்லச் சொல்ல, அதன்படி மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து சொல்ல வேண்டும். ஆசிரியர் சொல்லச் சொல்ல ஒவ்வொரு மாணவனும் தனித் தனியாகவும் சொல்ல வேண்டும். கடைசியில் ஆசிரியர் சொல்லிக் காட்டாமலே ஒவ்வொரு மாணவனுக்கும் மனப் பாடமாகச் சொல்லத் தெரியவேண்டும். அதன் பிறகு ஒ,ஓ; என்று இரட்டையாகவும், ஔ என்று தனித்தும், ஃ என்று தனித்தும் ஆசிரியர் குச்சியால் சுட்டிக் காட்டிக்கொண்டே சொல்லச் சொல்ல மாணவர்கள் எல்லோரும் சேர்ந்தும், தனித் தனியாகவும் சொல்ல வேண்டும்.

முதல் வரி 13 எழுத்துக்களையும் சுட்டிக் காட்டிக்கொண்டும், சுட்டிக் காட்டாமலும் மனப்பாடமாக ஒரே தடவையில் நன்கு சொல்லத் தெரிந்த பிறகு, இரண்டாவது வரி க முதல் க் வரையிலுள்ள 13 எழுத்துக்களையும் முதல் பாடத்தில் கண்டபடி கரும்பலகையில் மூன்று கோட்டில் சாக்பீசால் ஒரே வரியில் எழுதி, கால் புள்ளி, அரைப் புள்ளி, முழுப் புள்ளி ஆகியவைகளைப் போட்டுக்கொண்டு க, கா; கி, கீ; கு, கூ; கெ, கே; என்று இரட்டை இரட்டையாகவும், கை என்று தனியாகவும், பிறகு கொ, கோ; என்று இரட்டையாகவும், கௌ என்று தனியாகவும், கடைசியில் க் என்று தனியாகவும் சொல்லும்படி கற்பிக்க வேண்டும். க முதல் க் வரை மனப்

பாடமாகச் சொல்லத் தெரிந்த பிறகு, முதல் பாட்த்தில் ம—வரி முடியவுள்ள மற்ற 9 வரிகளேயும் ஒவ்வொரு வரியாக, போர்டில் மூன்று கோட்டில் எழுதிப் போட்டுக்கொண்டு குறில் நெடில் எழுத்துக்களே இரட்டை இரட்டையாகவும், மற்ற எழுத்துக்களேத் தனியாகவும் சொல்லும்படி கற்பிக்க வேண்டும். எல்லா வரிகளும் மனப்பாடமாகச் சொல்லத் தெரிய வேண்டும். மேலிருந்து கீழாக க முதல் ம முடியவுள்ள 10 எழுத்துக்களேயும் இரட்டை இரட்டை யாக க, ங ; ச, ஞ; ட, ண ; த, ந ; ப, ம ; என்றும் மனப்பாடமாகச் சொல்லத் தெரியவேண்டும். இது, ஒவ்வொரு வரியையும் ஒரு போதும் மறந்து போகாமலும், விட்டுப் போகாமலும் மனப்பாடமாகச் சொல்லுவதற்கும் எழுதுவதற்கும் உதவியாகும்.

க—வரியிலுள்ள எழுத்துக்களே உச்சரிக்கும்போது நாக்கின் கடைசிப் பாகம் மேல் வாயின் கடைசிப் பாகத்தைத் தொடுகிறது. ங—வரியிலுள்ள எழுத்துக்களே உச்சரிக்கும்போதும் மேற்கண்டபடியே தொடவேண்டும்.

ச—வரியிலுள்ள எழுத்துக்களே உச்சரிக்கும்போது நாக்கின் நடுப்பாகம் மேல்வாயின் நடுப்பாகத்தைத் தொடுகிறது. ஞ—வரியிலுள்ள எழுத்துக்களே உச்சரிக்கும்போதும் மேற்கண்டபடியே தொடவேண்டும்.

எழுத்துக்களே எழுதக் கற்றுக்கொடுத்தல்

ஒவ்வொரு வரியிலுமுள்ள 13 எழுத்துக்களேயும் நன்கு மனப்பாடமாகச் சொல்லத் தெரிந்த பிறகு, அந்தந்த வரியிலுள்ள எழுத்துக்களே எழுதக் கற்றுக் கொடுக்க வேண்டும். முதலாவது அ, ஆ ; ஆகிய இரு எழுத்துக்களேயும் கரும்பலகையில் மூன்று கோட்டில் எழுதிப் போட்டு, அதன்மேல் சாக்பீசால் எழுதப் பழக்கவேண்டும். சாக்பீசால் எழுத்தின்மேல் எழுதத் தெரிந்தவர்களே கரும்பலகையில் அ, ஆ ; ஆகிய இரு எழுத்துக்களேயும் எழுதி எழுத்துக்களின்மேல் சிலேட்டுக் குச்சியால் எழுதப் பழக்க வேண்டும். இதன் மூலமாக பிள்ளேகளே சிலேட்டுக் குச்சியைச் சரியாகப் பிடிப்பதற்கும், அதனல் எழுதுவதற்கும் நன்கு பழக்க வேண்டும். எழுத்துக்களே எழுதக்

கற்றுக் கொடுப்பதும் தவிர, சிலேட்டுக் குச்சியைப் பிடிக்கும் விதத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

கரும்பலகையின் மேல் சிலேட்டுக் குச்சியால் எழுதத் தெரிந்தவர்களுக்கு, சிலேட்டில் மூன்று கோடுகள் போட்டு சிலேட்டுக் குச்சியால் அ, ஆ ; ஆகிய இரு எழுத்துக்களை மட்டும், ஆசிரியர் எழுதிக் கொடுத்து, அதன்மேல் சிலேட்டுக் குச்சியால் எழுதும்படி செய்ய வேண்டும். இதுபோல் முதல் வரியிலுள்ள மற்ற எழுத்துக்களையும் எழுதக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதனால் பிள்ளைகள் சிலேட்டுக் குச்சியை நன்கு பிடிப்பதற்கும், எளிதில் எழுதுவதற்கும் கற்றுவிடுவார்கள். சிலேட்டுக் குச்சியை சரியானபடி நன்கு பிடிக்கத் தெரிந்த பிறகே எளிதாக நன்கு எழுத முடியுமென்பதைத் தெரிந்து கொள்ளவும்.

முதல் வரியிலுள்ள 13 எழுத்துக்களையும் சிலேட்டில் எழுத்தின் மேல், சிலேட்டுக்குச்சியினால் நன்கு எழுதத் தெரிந்து விட்டவர்களுக்கு, முதல் வரியை சிலேட்டில் மூன்று கோட்டில் ஆசிரியர் எழுதிக்கொடுத்து, அதன்கீழ் மூன்று கோடுகள் போட்டு, அதில், மேலே எழுதிக் கொடுத்திருக்கின்றபடி, பார்த்து எழுதும்படி செய்யவேண்டும். இந்த மாதிரி முதல் வரியைப் பார்த்தெழுதத் தெரிந்த பிறகு, இரண்டாம் பாடத்திலுள்ளபடி மெய்யெழுத்துக்களையும் மற்ற எழுத்துக்களையும் சிலேட்டில் மூன்று கோட்டில் எழுதக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இரண்டாம் பாடத்திலுள்ள எழுத்துக்களை அவைகளின்படி சிலேட்டில் மூன்று கோடுகளில் நன்கு எழுதத் தெரிந்த பிறகு, சிலேட்டில் கூர்மையான கம்பியால் சன்னமான ஒற்றைக் கோடுகள், கோட்டிற்குக் கோடு 3/8 அங்குல தூரத்தில் போட்டுக் கொடுத்து மூன்றும் பாடத்திலுள்ளபடி 11 வரிகளையும் ஒரு கோட்டில் எழுதக் கற்றுக் கொடுக்கவேண்டும். இப்படி எழுதப் பழகுவதால் எழுத்துக்களைப் பிழையின்றி எழுதக் கற்றுக் கொள்வதுடன் அழகாகவும், விரைவாகவும் எழுத முடியும். பின்னல் சொற்களையோ, வாக்கியங்களையோ அழகாக எழுதப் பயிற்சி கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஏராளமான சொற்களையும், சொற்றொடர்களையும், வாக்கியங்களையும் எழுத வேண்டியதிருக்கும்போது அவைகளை அழகாக எழு

தப் பயிற்சி கொடுப்பது பிரயோஜனப்படாது. அதனுல் எழுத்துக்களைக் கற்கும்போதே சிலேட்டில் அவைகளை அழகாக எழுதக் கற்றுவிடவேண்டும். கல்வி கற்பதற்கு நன்கு உதவக்கூடியது சிலேட்டே.

தமிழ் எழுத்துக்களை அவைகளின் அமைப்புப்படி கற்றுக் கொடுப்பதற்கு குறில் நெடில் எழுத்துக்களை இரட்டை இரட்டையாகவும், மற்ற எழுத்துக்களைத் தனியாகவும் கற்றுக் கொடுக்கவேண்டும். இது மிகமிக முக்கியமாகும். இதனுல் எழுத்துக்களை எளிதாக உடனே கற்க முடிகிறது. கற்றதும் ஒருபோதும் மறக்காது. குறில் நெடில் பிழைகளே ஏற்படா. குறில் நெடில் எழுத்துக்களின் ஒலி அநேகமாக ஒன்று போலிருப்பதால் நெடில் எழுத்துக்களை நீட்டிச் சொல்ல வேண்டும். நெடில் எழுத்துக்களை நீட்டிச் சொல்லிக் கற்ருல்தான் குறில் நெடில் பிழைகளைத் தவிர்க்க முடியும்.

எழுத்துக்களை ஆனு, ஆவன்னு என்று முன் காலத்தைப் போல சாரியை சேர்த்துக் கற்றுக் கொடுக்கக் கூடாது. சாரியை சேர்த்துச் சொல்லுவதால் எழுத்துக்களைக் கற்கின்றவர்களுக்குப் பிரியமும் உற்சாகமும் ஏற்படுவது உண்மையே. ஆனுல். சொற்களில் எழுத்துக்கள் சாரியைச் சத்தமின்றி வருவதால் சாரியை கூடாது.

4, 5, 6, 7 ஆம் பாடங்களிலுள்ள சொற்களைக் கற்றுக் கொடுத்த பிறகு, 8 ஆம் பாடத்திலுள்ள ய—வரி முதல் ன—வரி முடிய 8 வரிகளிலுமுள்ள எழுத்துக்களை ஒவ்வொரு வரியாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். இந்த வரிகளிலுள்ள எழுத்துக்கள் ஒன்றிற்கு ஒன்று நெருங்கிய ஒலியுடையதாக இருந்தும், முன்பே 11 வரி எழுத்துக்களையும் அவைகளாலான சொற்களையும் கற்றிருக்கும் காரணத்தாலும், 10 ஆம் பாடத்திலுள்ள படங்களின் உதவியோடு கற்பதாலும், 11 ஆம் பாடத்தில் எழுத்துக்களை இரட்டை இரட்டையாகவும், அழுத்தியும் அழுத்தாமலும், அதிகமாக அழுத்தியும் உச்சரித்துச் சொல்லி கற்பதைக் கொண்டும் விரைவில் கற்க முடியும்.

ய, ர; ல, வ; ழ, ள; ற, ண; ஆகிய எட்டு எழுத்துக்களை இரட்டை இரட்டையாக மனப்பாடமாகச் சொல்லத் தெரிய வேண்டும்.

மெய்யெழுத்துக்களுடன் ஆ, ஒ, ஓ ஆகிய உயிரெழுத்துச் சேர்ந்து உண்டாகும் உயிர்மெய் எழுத்துக்களில் மற்ற எழுத்துக்

களைப் போல துணை எழுத்து இல்லாமல் வருகிற ணு, ணெ, ணே; ரு, ரெ, ரே; னு, னெ, னே; என்ற உயிர்மெய் எழுத்துக்களையும், ஐ ஏறிய உயிர்மெய் யெழுத்துக்களுள் மற்ற எழுத்துக்களைப் போல, இடதுபுறம் துணை எழுத்து வடிவமாகிய ை அடையாளமின்றி வரும் ணை, லை, ளை, னை ஆகிய நான்கு உயிர்மெய் யெழுத்துக்களின் வடிவங்களையும் மாணவர்கள் மனதில் நன்கு பதியும்படி விளக்க வேண்டும். இவைகளில் அடிக்கடி டிக்டேஷன் போட வேண்டும்.

இ, ஈ; எ, ஏ; என்ற உயிரெழுத்துக்களும் முறையே யி, யீ, யெ, யே என்ற உயிர்மெய் எழுத்துக்களும் உச்சரிப்புச் சத்தத்தால் ஒரே மாதிரியாகவும், எழுத்து வடிவத்தில் வேருகவும் இருக்கின்றன. இவைகளில் உயிரெழுத்துக்கள்தான் சொற்களுக்கு முதலில் வரும். யி, யீ, யெ, யே ஆகிய உயிர்மெய் எழுத்துக்கள் சொற்களில் முதலெழுத்தாக வரக்கூடா. ந—வரி எழுத்துக்களும் ன—வரி எழுத்துக்களும் உச்சரிப்பில் அநேகமாக ஒன்ருகவும் வடிவத்தில் முற்றிலும் வேருகவும் இருக்கின்றன. ந—வரி எழுத்துக்கள் சொற்களுக்கு முதலில் வரும். ன—வரி எழுத்துக்களில் எதுவும் சொற்களுக்கு முதலில் வரா. தவிரவும் சொல்லின் கடைசியில் ன் வரும்; ந் வரக்கூடாது.

சொற்களில் ன்—னுக்குப்பின் ன—எழுத்துக்கள் வரும். ந—வரி எழுத்துக்கள் வரக்கூடா. சொற்களில் த—வரி எழுத்துக்களுக்கு முன் ந் வரும், ன் வரக்கூடாது. ந—வரி எழுத்துக்களும் ன—வரி எழுத்துக்களும் உச்சரிப்பில் அநேகமாக ஒன்று போலிருப்பதால் ந—வரி எழுத்துக்களை த—வரிக்கு அடுத்தவரி எழுத்துக்களென்றும், ன—வரி எழுத்துக்களை ற—வரிக்கு அடுத்தவரி எழுத்துகள் என்றும் சொல்ல வேண்டும்.

உயிர்மெய் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்களின் மேலுள்ள புள்ளி நீக்கப்பட்டு, ா, ெ, ே, ை ஆகிய வடிவங்களுடன் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. உயிர்மெய் யெழுத்துக்கள் 216 ம் எழுதத் தெரிவதற்கு மெய்யெழுத்துக்கள் 18-ம் ா, ெ, ே, ை ஆகிய நான்கு வடிவங்களும் எழுதத் தெரிந்தால் போதும். எழுத்துக்களைக் கற்பதற்கு 247 எழுத்துக்கள் கொண்ட எங்கள் பிரசுர அட்டையை வைத்துக் கொள்க.

வடமொழி எழுத்துக்கள்

19 ஆம் பாடத்திலுள்ள 65 எழுத்துக்களையும் சொல்லவும் எழுதவும் கற்றுக் கொடுக்கவும். தமிழ் எழுத்துக்களையும் சொற்களையும் கற்ற பிறகு இவைகளைக் கற்பதாலும், இந்த எழுத்துக்களிலும் தமிழ் உயிரெழுத்துக்களே சேர்ந்து வருவதாலும், இவைகளைக் கற்பது எளிது.

சொற்களின் அமைப்பு

எழுத்துக்கள், சொற்களின் சத்தப்படி எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் ஏற்பட்டனவாகு மென்பதைத் தெரிந்திருக்கிறோம். இதைத் தெரிந்து உண்டாக்கப்பட்ட மொழிகளின் சொற்களுக்கு, தனியாக சொற்களின் அமைப்பு என்று ஒன்று இராது. எழுத்துக்களின் அமைப்புப்படியே சொற்களும் அமையும். தமிழ் எழுத்துக்களெல்லாம் அநேகமாக குறில் நெடில் எழுத்துக்களாகவே இருக்கின்றன. அதனால் குறில் நெடில் எழுத்துக்களில் சொற்களுக்கு முதலில் வரக் கூடிய குறில் நெடில் எழுத்துக்கள் கொண்ட சொற்களை இரட்டை இரட்டையாகச் சொல்லவும், எழுத்துக் கூட்டி வாசிக்கவும் எழுதவும் கற்றுக் கொடுக்க வேண்டும். இப்படிக் கற்றுக் கொடுத்தால் குறில் நெடில் பிழைகளே ஏற்படா. வசன நடையில் புத்தகங்கள் வெளி வருமுன் இதற்காகவே அரிச்சுவடி 247 எழுத்துக்கள் கற்று முடிந்தவுடன், குறில் நெடில் எழுத்துக்களை முதலிற் கொண்ட சொற்கள் முதலில் வரும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய இரண்டு ஏடுகளையும் கற்று வந்தார்கள்.

அரிச்சுவடி 247 எழுத்துக்கள் கற்றவுடன் செய்யுளைக் கற்பதாக இருந்தால், முதலில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகியவைகளைக் கற்பது சரியே. வசனத்தைக் கற்பதாக இருந்தால், முதலில் 143 எழுத்துக்களைக் கற்றவுடன் சொற்களுக்கு முதலில் வரக்கூடிய குறில் நெடில் எழுத்துக்கள் கொண்ட சொற்களை இரட்டை இரட்டையாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். படங்களும், தெரிந்த சொற்களும் தமிழ்ச் சொற்களை எழுத வாசிக்கக் கற்றுக் கொடுக்க உதவி செய்யா; பாதகமே செய்யும்.

பொது அறிவுப் பாடங்களைக் கற்றுக் கொடுப்பதற்குத்தான் படங்கள் உபயோகப்படும். இதற்குப் படங்களையும், நேரில் பார்க்கும் மிருகங்கள், பறவைகள், மரஞ்செடிகள் முதலியவைகளை யும் கட்டாயம் உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டும்.

கற்கின்றவர்களுக்குத் தெரிந்த சொற்கள் எவை? தெரியாத சொற்கள் எவை? என்று அறிந்து கற்றுக் கொடுப்பது முடியாத காரிய மென்பதுடன் அவசியமில்லாததுமாகும். கற்கின்றவர்க ளுக்கு இன்னின்ன சொற்கள் தெரியுமென்றோ, தெரியாவென்றோ முடிவு கட்டுவது தீதாகும். இதற்காக, கற்கின்றவர்களையே சொந் தத்தில் கணக்கற்ற சொற்களைச் சொல்லும்படியும் எழுதும்படியும், சொற்களில் பாடங்கள் எல்லாம் முடிந்த பிறகு, கடைசியில் பயிற்சி கள் கொடுத்திருக்கிறோம்.

சொற்களை கொச்சை இல்லாமல் சுத்தமாகச் சொல்லும்படியும், சுத்தமாக எழுத்துக் கூட்டும்படியும் மிகவும் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். பேச்சுப் பழக்கத்தைக் கொண்டு அநேகமாக எல்லாரும் ஆரம்பத்தில் சொந்தத்தில் சொற்களைச் சொல்லும் போது கொச்சையாகத்தான் சொல்வார்கள். சொற்களைக் கொச் சையாகச் சொன்னால் பிழையாகத்தான் எழுதுவார்கள். இதற்கு இப்புத்தகத்திலுள்ள எழுத்து, சொல், சொற்றொடர் ஆகியவைகளை எழுத வாசிக்கச் செய்யுமுன், அவைகளைச் சுத்தமாகச் சொல்லும் படி செய்ய வேண்டும். 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்ற பொன் மொழியை மறந்து விடக்கூடாது.

சொற்களில் பாடங்கள் முடிந்தபிறகு, கற்கின்றவர்களை சொந் தத்தில் கணக்கற்ற சொற்களைச் சொல்லும்படியும் எழுதும்படியும் பயிற்சி கொடுத்திருப்பது இப்புத்தகத்தின் புதுமைகளில் ஒன்றாகும்.

சொற்களைக் கற்றுக்கொடுக்கும் விதம்.

இப்புத்தகத்தில் சொற்கள், அருத்தம் கற்றுக் கொடுப்பதற்காக எழுதப்பட்டவையல்ல; சொற்களை எழுதும்பொழுதும் வாசிக்கும் பொழுதும் எவ்வகைப் பிழையும் ஏற்படாமல் செய்வதற்காக எழுதப் பட்டவையாகும். தமிழ் கற்கின்றவர்கள் "கொடுத்தான்" என்பதை "கெடுத்தான்" என்றும், "ஆணி" என்பதை "ஆனி" என்றும்

பிழைகளாக எழுதிக் கொண்டும் வாசித்துக் கொண்டுமிருக்க, அவர்களுக்கு சொற்களின் அருத்தத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுவது அறியாமையல்லவா ?

வாக்கியங்களைப் பிழையின்றி எழுத வாசிக்கக் கற்றுக் கொடுத்து சொற்களின் அருத்தத்தை அந்தந்த வாக்கியங்களில் இடத்திற்குத் தக்கபடி தெரிந்து கொள்ளச் செய்ய வேண்டும். ஒரு சொல்லுக்குப் பல அருத்தங்களிருக்கும்போது ஒரு அருத்தத்தை மட்டும் கற்றுக் கொடுப்பது தவருகு மென்பதுடன் கெடுதலுமாகும்.

1-ஆம் பாடத்திலுள்ள எழுத்துக்களைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் போதே 4-ஆம் பாடத்திலுள்ள சொற்களைக் கொஞ்சங் கொஞ்சமாக கரும்பலகையில் 1-ஆம் பாடத்திலுள்ள தமிழ் எழுத்து வடிவ அமைப்புப்படி இரட்டை இரட்டையாக எழுதிப் போட்டு குறில் — நெடில் சொற்களை, அடி — ஆடி என்று ஆசிரியர் இரட்டை இரட்டையாகச் சொல்லச் சொல்ல, மாணவர்களும் சேர்ந்து சொல்ல வேண்டும். சொற்களின் குறில் நெடில் சத்தத்தின் வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளும்படி செய்ய் வேண்டும். நெடில் சத்தத்தை ஆரம்பத்தில் அதிகமாக நீட்டிச் சொல்லிக் காட்ட வேண்டும். பின்பு, குறில் சொல்லைச் சொன்னவுடன் அதன் நெடில் சொல்லையும், நெடிலைச் சொன்னவுடன் குறிலையும் அவர்களாகச் சொல்லும்படி செய்யவேண்டும். உதாரணம் :—அடி என்று சொல்லிவிட்டால் ஆடி என்று சொல்ல வேண்டும். ஆடி என்று சொன்னுல் அடி என்று சொல்ல வேண்டும். மேலே கூறியபடி 4-ஆம் பாடத்திலுள்ள சொற்கள் முழுவதையும் சொல்லும்படி செய்ய வேண்டும். அவைகளை அ, டி = அடி என்றும், ஆ, டி = ஆடி என்றும் எழுத்துக் கூட்டிச் சொல்லும்படி செய்ய வேண்டும். சொற்களை எழுத்துக் கூட்டிச் சொல்லத் தெரிந்த பிறகு, போர்டிலுள்ள சொற்களைப் பார்த்துக் கொண்டு சிலேட்டில் ஒரு கோட்டில் எழுதும்படி செய்ய வேண்டும். 1-ஆம் பாடம் 143 எழுத்துக்களில் பிழை இல்லாமல் டிக்டேஷன் எழுதத் தெரிந்த பிறகு, 4-ஆம் பாடத்திலுள்ள சொற்களில் டிக்டேஷன் போட வேண்டும்.

1, 2, 3, 4-ஆம் பாடங்களை கற்றபிறகு, கற்கின்றவர்களைப் புத்தகத்தை எடுக்கச் செய்து, ஐந்தாம் பாடத்தைக் கவனிக்கும்படி

செய்துகொண்டு, அதிலுள்ள சொற்களை ஆசிரியர் இரட்டை இரட்டையாக வாசித்துக் காட்ட வேண்டும். பின்பு ஆசிரியர் சொற்களை எழுத்துக் கூட்டி வாசித்துக் காட்ட வேண்டும். ஆசிரியர் ஒவ்வொரு சொல்லாக எழுத்துக் கூட்டி வாசித்துக் காட்டக் காட்ட, மற்றவர்களும் அதன்படி எழுத்துக் கூட்டி வாசிக்க வேண்டும். எல்லாச் சொற்களையும் எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரிந்த பிறகு, பாடத்தைப் பார்த்துக்கொண்டு சொற்களை எழுத்துக் கூட்டிச் சொல்லிக் கொண்டே சிலேட்டில் ஒரு கோட்டில் பிழை இல்லாமல் எழுதச் செய்ய வேண்டும். மாணவர்கள் எழுதுவதும் 3-ஆம் பாடத்திலுள்ள தமிழ் எழுத்துக்களின் அமைப்புப்படியே அழகாக எழுத வேண்டும். எழுத்துக்களின் கீழ் வடிவம் மட்டும் ஒரு கோட்டிற்குக் கீழே இருக்க வேண்டும். எழுத்துக்கள் கோட்டைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

5-ஆம் பாடத்தைப் பார்த்துப் பிழையில்லாமல் எழுதத் தெரிந்த பிறகு, அதிலிருந்து சில சொற்களை ஆசிரியர் சொல்லிக்கொண்டே போர்டில் எழுதிக் காட்ட வேண்டும். அதை மாணவர்களை எழுத்துக் கூட்டி வாசிக்கும்படி செய்ய வேண்டும். பின்பு டிக்டேஷன் போட வேண்டும். சொற்களில் டிக்டேஷன் போடும்போது மாணவர்களுக்கு ஒரு பிழைகூட ஏற்படாதிருக்க ஆசிரியர் அடிக்கடி எழுத்துக்களில் டிக்டேஷன் போட வேண்டும். புத்தகத்திலுள்ள சொற்களைப் பார்த்து எழுத்துக் கூட்டிச் சொல்லிக் கொண்டே பிழையில்லாமல் எழுதும்படி செய்ய வேண்டும்.

ஐந்தாம் பாடத்தைக் கற்றுக் கொடுத்தது போல சொற்களின் மற்றப் பாடங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும். புத்தகத்தைப் பார்த்து பாடங்களை எழுதவும் வாசிக்கவும் முடியாதவர்களுக்கு பாடங்களை நோட்டில் பெரிய எழுத்தில் எழுதிக் கொடுக்க வேண்டும். இதற்காக பெரிய எழுத்துக்கள் கொண்ட புத்தகம் அவசியமில்லை.

சொற்றொடர்

இரண்டு சொற்கள் சேர்ந்தது சொற்றொடர் எனப்படும். இப்படி இரண்டு சொற்கள் சேரும்போது இரண்டு சொற்களின் ஒலியும் அப்படியே கேட்டால் அது இயல்புச் சொற்றொடர் எனப்படும்.

இரண்டு சொற்கள் சேரும்போது ஒரு எழுத்தின் ஒலி அதிகமாகக் கேட்டால் அது தோன்றல் சொற்றொடர் என்றும், ஒரு எழுத்தின் ஒலி இல்லாமற் போனால் கெடுதல் சொற்றொடரென்றும், வேறொன்றாக மாறிக் கேட்டால் திரிதல் சொற்றொடரென்றும், இரண்டு சொற்கள் சேரும்போது ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்கள் மாறுதலாகக் கேட்டால் பல விகாரச் சொற்றொடரென்றும் சொல்லப்படும்.

மலை + நாடு = மலைநாடு என்பது இயல்புச் சொற்றொடர்.

வாழை + பழம் = வாழைப்பழம் என்பது தோன்றல் சொற்றொடர்.

மரம் + வேர் = மரவேர் என்பது கெடுதல் சொற்றொடர்.

கல் + சட்டி = கற்சட்டி என்பது திரிதல் சொற்றொடர்.

சொல் + தொடர் = சொற்றொடர் என்பது பல விகாரச் சொற்றொடர். இரண்டு சொற்களையும் சேர்த்து மேலே கண்டபடி சொல்லாவிட்டாலும் எழுதாவிட்டாலும் பிழையாகும்.

சொற்றொடர் கற்றுக்கொடுக்கும் விதம்

23-ஆம் பாடம் இயல்புச் சொற்றொடரை இரண்டு சொற்களைச் சேர்த்து எழுத்துக் கூட்டி வாசித்துக் காட்டுக. பின்பு மாணவர்களை எழுத்துக் கூட்டி வாசிக்கச் செய்க. எழுத்துக் கூட்டிச் சொல்லிக் கொண்டே பாடத்தைப் பார்த்துப் பிழையில்லாமல் எழுதும்படி செய்க. கடைசியில் டிக்டேஷன் போடுக.

24-ஆம் பாடம் தோன்றல் சொற்றொடரை இரண்டு சொற்களைச் சேர்த்து வாசித்துக் காட்டுக. இரண்டு சொற்களுக்கு நடுவில் தோன்றும் க், ச், த், ப், ங், ஞ், ந், ம் ஆகிய மெய்யெழுத்துக்களை நன்கு அழுத்திச் சொல்லி வாசித்துக் காட்டுக. போர்டில் எழுதி நடுவில் தோன்றும் மெய்யெழுத்தை சாக்பீசால் கோடு போட்டுக் காட்டுக. சொற்றொடர்களை இந்த மெய்யெழுத்துக்களை நடுவில் இல்லாமல் வாசித்தும், எழுதியுங்காட்டி சொற்கள் ஒன்று சேராமல் இருப்பதையும், மெய்யெழுத்தின் சத்தம் இல்லாமலிருப்பதையும் விளக்குக. மாணவர்களை, சொற்றொடரை எழுத்துக் கூட்டி வாசிக்

கும்படி செய்க. டிக்டேஷன் போடுக. 'முத்துசாமி' 'அன்ணு துரை', 'தினசெய்தி' என்று எழுதுவது வேண்டு மென்று பிழை யாக எழுதுவதாகும். தமிழை வேண்டுமென்று பிழையாக எழுதிச் சிதைக்கின்றவர்களை அறிவுறுத்தல் வேண்டும். 'போய் கொண்டு', 'போய் சேர்ந்து' என்பது போன்ற பிழைகள் கவனக் குறைவால் ஏற் படுவதாகும். சொற்களுக்கு நடுவில் தோன்றும் க், ச், த், ப், ங், ஞ், ந், ம். ஆகிய மெய்யெழுத்துக்களை மனப்பாடம் செய்யும்படி செய்க.

25-ஆம் பாடம் கெடுதல் சொற்றொடரை விளக்கி எழுத்துக் கூட்டிக் கொண்டே பார்த்து எழுதும்படி செய்க. டிக்டேஷன் போடுக.

26-ஆம் பாடம் திரிதல் சொற்றொடரை 2, 3 தடவைகள் வாசித் துக் காட்டி ல்—ற் ஆகவும், ள்—ட் ஆகவும், ம் என்பது ங், ஞ், ந், என்பனவற்றில் ஏதாவது ஒன்ருகவும் மாறி, அதாவது திரிந்து வரு வதையும் போர்டில் எழுதிப் போட்டு விளக்குக. எழுத்துக் கூட்டி வாசிக்கும்படியும், பார்த்தெழுதும்படியும் செய்க. கடைசியில் டிக் டேஷன் போடுக. கல் + கண்டு என்பதை கல்கண்டு என்று சத் தம் விட்டுக் கேட்கும்படி எழுதவும் வாசிக்கவும் கூடாது; பிழை யாகும்.

செய்யுட் சொற்றொடர்களுக்கு ஏற்பட்ட இலக்கண விதிகளை சாதாரண வசனச் சொற்றொடர்களில் புகுத்தக் கூடாது. இதனுல் தமிழ் வசனத்தைக் கற்பது கடினமாகிவிடும். வசனத்தில் சொற் ருெடர்களை இரண்டு சொற்கள் சேருவதால் ஏற்படும் ஒலியை நன்கு கவனித்து, சத்தப்படியே எழுத விட்டுவிட வேண்டும். ல்—ற் ஆக வும், ள்—ட் ஆகவும், ம்—ங், ஞ், ந் ஆகியவற்றில் ஏதாவது ஒன் ருகவும் மாறி, அதாவது திரிந்து வருவதை மனப்பாடம் செய்யும் படி செய்க.

27-ஆம் பாடம் பல விகாரச் சொற்றொடரை வாசித்துக் காட்டி யும், போர்டில் எழுதிப் போட்டும் விளக்குக. எழுத்துக் கூட்டி வாசிக்கும்படியும் பார்த்தெழுதும்படியும் செய்க. கடைசியில் டிக் டேஷன் போடுக.

27-ஆம் பாடத்தில் கண்ட சொற்றொடர்களில் அநேகத்தைப் பிரிப்பதற்கும் அருத்தம் தெரிந்து கொள்ளுவதற்கும் ஏதுவாக 28-ஆம் பாடம் மனப்பாடமாகத் தெரிந்திருக்க வேண்டும். பயிற்சிகள் பாடங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

23-ஆம் பாடம் இயல்புச் சொற்றொடரில் எளிய உதாரணங்களே கொடுத்துள்ளோம். வருமொழி முதலில் உயிரெழுத்து வரும்படியாக உதாரணமோ, பயிற்சியோ கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் ஆரம்பத்தில் மாணவர்களுக்கு குழப்பம் கூடாது என்பதற்காகவே.

கால் + ஒடிந்தது = காலொடிந்தது.	இயல்புச் சொற்றொடர் தான்.
நீர் + ஊற்று = நீரூற்று.	

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" — என்ற விதிப்படி, மெய்யும் உயிருங் கூடி உயிர்மெய் ஆயிற்றே யொழிய, வேறொரு எழுத்தாகத் திரிந்தது என்று நினைக்கக்கூடாது. இப்படிப்பட்டவை இயல்புச் சொற்றொடர்களே என்பதை ஆசிரியர் அனுபந்தமாகப் போதிக்க வேண்டும்.

23, 24 ஆகிய இரு பாடங்களிலும் நிலை மொழியாக மா என்ற ஓரெழுத்தொருமொழி கையாளப்பட்டுள்ளது. மா = பெரிய, சிறந்த என்ற பொருளில் வரும்போது, அதாவது மாதேவர், மாநகர், மாபுரி என்ற சொற்றொடர்கள், இயல்புச் சொற்றொடர் என்க. ஆனால் மா = மாமரம், மாவு என்ற பொருளில் வரும்போது அதாவது 'மாங்காய்', 'மாந்தோப்பு', 'மாம்பழம்', 'மாஞ்சோலை' என மெல்லினம் தோன்ற வரும்போதும், 'மாக்கோலம்,' 'மாத்தூள்', 'மாச்சுக்கு', 'மாப்பாண்டம்' என வல்லினம் தோன்ற வரும் போதும் தோன்றல் சொற்றொடர் என்க.

பாடம் 27: பல விகாரச் சொற்றொடர் சம்பந்தமாய் சில இலக்கணச் சொற்களை இங்கே விளக்கி எழுத வேண்டியதிருக்கின்றது. 'தனிக்குறில்' என்பதற்குப் பதிலாக 'ஓரேகுறில்' என்று எழுதியுள்ளோம். உயிர்க் குறிலையுங் குறிக்கும்; உயிர்மெய்க் குறிலையுங் குறிக்கும். தனிக் குறிலைச் சார்ந்து வருகிற ண், ன், ல், ள், ய் என்ற மெய் உயிர்வரின் இரட்டிக்கும் என்பது விதி. ஆனால், 'வேல்' + 'எறிந்தான்' = 'வேலெறிந்தான்'; 'புகல்' + 'இடம்' =

'புகலிடம்' என்ற உதாரணங்கள் இயல்புச் சொற்ருெடரைச் சார்ந்தவை. தனிக் குறிலேச் சாராத மெய் இரட்டிக்காது என்பதை இந்த உதாரணங்களால் புரிந்து கொள்ளலாம்.

குற்றியலுகரம் என்பதைச் சற்று விளக்குவோம் :—தனித்தும், தனிக்குறிலேச் சார்ந்தும் வராத கு, சு, டு, து. பு, று, என்பவற்றில் உள்ள உ என்ற ஒலி குற்றியலுகரம் எனப்படும்; அதாவது ஓசை குறைந்த உகரம். மற்றவை யெல்லாம் முற்றியலுகரம்; அதாவது முழு ஓசை உடைய உகரம்.

'போக்கு' என்ற குற்றியலுகர ஈற்றுச் சொல்லின் கடைசியில் உள்ள கு = க் + உ எனப் பிரிக்கலாம். 'போக்கு' + 'இல்லே' = 'போக்கில்லே'. நிலேமொழி யீற்றிலுள்ள உ கெட்டது. க் என்பதின் மேல் இ வந்து சேர, கி என்ருயிற்று என்பதை ஆசிரியர் போர்டில் எழுதிப் போட்டு நன்கு விளக்க வேண்டும். சில சமயம் முற்றியலுகரம் கெடும். உதாரணமாக, 'கதவு' + 'அடை' = 'கதவடை'.

பண்புப் பெயர் சம்பந்தமாய்ச் சிறிது கூற வேண்டும். நன்மை, தீமை, செம்மை, கருமை, சிறுமை, பெருமை, அருமை, புதுமை, பசுமை, இனிமை போன்ற சொற்கள் "மை" ஈற்றுப் பண்புப் பெயர்கள் எனப்படும். நிறம், குணம், வடிவு, முதலிய பண்புகளேக் குறித்தால்தான் பண்புப் பெயர்கள்; ஆனுல் எருமை, அம்மை, நம்மை, பொம்மை, சுமை, ஆமை, சாமை போன்ற சொற்கள் 'மை' என்று முடிந்தாலும், பண்புப் பெயர்களல்ல என்பதை ஆசிரியர் விளக்க வேண்டும். அப்போதுதான் பண்புப் பெயர்களின் விகாரங்கள் விளங்கும்.

வாக்கியங்களின் அமைப்பு

ஒரு சொல்லோ ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களோ வந்து அதில் வினேமுற்று இருக்குமானுல், அது வாக்கியம் எனப்படும். ஒரு சொல் மட்டும் வந்து அது வாக்கியமாக இருக்க வேண்டுமானுல், அந்த ஒரு சொல், வினேமுற்ருக இருக்க வேண்டும். அதில் இன்ெனுரு சொல், அதாவது பெயர்ச்சொல், வாக்கியத்தில் இல்லாமலே எழுவாய்ப் பொருளேக் கொடுத்துக் கொண்டிருக்கும். இது தோன்ருச் சொல் அல்லது தோன்ருயெழுவாய் என்று சொல்லப்படும்.

படித்தேன் என்று சொன்னால், இதில் நான் என்ற பெயர்ச் சொல் தோன்ரு யெழுவாயாக, அதாவது தெரியாத எழுவாயாக இருக்கின்றது. 'படித்தேன்' என்ற வினைமுற்று, பயனிலை என்று சொல்லப்படும். 'நான் புத்தகத்தைப் படித்தேன்' என்ற வாக்கியத்தில், 'நான்' என்பது எழுவாய். 'படித்தேன்' என்பது பயனிலை. 'புத்தகத்தை' என்பது செயப்படு பொருள்.

பெயர்ச்சொல், வினைச்சொல், எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் முதலிய பெயர்களெல்லாம் இலக்கணப் பெயர்கள். தமிழ் இலக்கணம் கற்பதற்கு அதில் வரும் பெயர்களின் அருத்தத்தை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். தமிழ் இலக்கணத்தில் வரும் அரும் பதங்களுக்கு பொருள் தெரிந்துவிட்டால் போதும்; அதற்குள் தமிழ் இலக்கணம் கற்பது அடங்கிவிடும். இலக்கண அரும் பதங்களுக்கு அருத்தம் தெரிந்து கொள்ளாமல் இலக்கணம் கற்பது தவருகும். நாம் பேசும் பேச்சிலுள்ள சொற்களுக்கெல்லாம் இலக்கணப் பெயர்கள் உண்டு.

எழுவாய்ப் பெயர்ச் சொல்லும், வினைமுற்றுச் சொல்லும் கொண்டதே வாக்கியம். வாக்கியங்களில் வரும் பெயர்ச்சொல், எட்டு விதங்களாக மட்டும் மாறிவரும். வினைச் சொல் பலவிதங்களாக மாறிவரும்.

தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்பதற்கு தமிழ் எழுத்துக்களை முதலில் நன்கு கற்க வேண்டுமென்று பார்த்தோம். இரண்டாவது, அதன் சொற்களை 4-ஆம் பாடம் முதல் 21-ஆம் பாடம் முடிய அமைத்துத் தெரிந்து கொண்டோம். மூன்ருவது, அதன் சொற்களில் இரண்டு சேரும்போது தோன்றும் மெய்யெழுத்துக்களையும், திரியும் அதாவது மாறும் மெய்யெழுத்துக்களையும் பல விகாரச் சொற்ருெடரையும் 23 முதல் 27 முடியவுள்ள பாடங்கள் மூலமாகத் தெரிந்து கொண்டோம்.

முதலில் எழுத்துக்களைக் கற்றுக் கொண்டதால் எந்தச் சொற்களையும் பிழையின்றி உடனே எழுத வாசிக்க முடிகிறது. எந்தச் சொற்களையும் எழுத வாசிக்க முடிவதால் இரண்டு சொற்களைச் சேர்த்து எந்தச் சொற்ருெடர்களையும் பிழையின்றி உடனே எழுத வாசிக்க முடிகிறது. எந்தச்

சொற்களையும் சொற்றொடர்களையும் எழுத வாசிக்க முடிவ தால் வாக்கியங்களை, அதாவது வசனத்தையே பிழையின்றி எழுத வாசிக்க முடிகின்றது. வாக்கியங்களை உடனே எழுத வாசிக்கப் போகுமுன், பெயர்ச் சொற்கள் மாறுவதையும், வினைச்சொற்கள் மாறுவதையும் உதாரணச் சொற்கள் மூலமாகத் தெரிந்து கொண் டால், சொந்தத்தில் ஏராளமான வாக்கியங்களை எளிதாகச் சொல்ல வும் எழுதவும் முடியும். இதற்காக இப்புத்தகத்தில் 31 பெயர்ச் சொற்கள் 8 வேற்றுமையுருபுகள் ஏற்று மாறுவதை வாய்ப்பாடு மாதிரி 33-ஆம் பாடத்தில் கொடுத்திருக்கிறோம். இதை மனப்பாட மாகச் சொல்லத் தெரிந்து விட்டால் எந்தப் பெயர்ச் சொல்லையும், எட்டு வேற்றுமையுருபுகளுடன் சேர்த்துச் சொல்லவும் எழுதவும் தெரிந்துவிடும். பெயர்ச் சொற்களின் ஆண்பால் பெண்பால், ஒருமை, பன்மை ஆகியவைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வினைச் சொற்கள் இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் ஆகிய மூன்று காலங்களிலும் ஒவ்வொரு வினைப் பகுதியும் 27 விதங்களாக மாறி வருவதையும் விளக்கியுள்ளோம். பயிற்சியில் கொடுத்திருக் கின்ற 34 வினைச் சொற்களை 27 விதங்களாகச் சொல்லத் தெரிந்து விட்டால், எந்த வினைச் சொல்லையும் 27 வினைமுற்றுக்களில் சொல்லத் தெரிந்து விடும். தமிழ் இலக்கணத்தின் இரகசியம் எங்களுக்குத் தெரிந்தபடியால் 33, 34 ஆம் பாடங்களை எங்களால் வெளியிட முடிந் தது.

32-ஆம் பாடத்தில் ஒருமை—பன்மை என்ற தலைப்பின் கீழ் ‘அவன்’ என்பதற்குப் பன்மை ‘அவர்’ என்றும், ‘அது’ என்பதற் குப் பன்மை ‘அவை’ என்றும் காட்டியுள்ளோம். ஆனால், ‘அவர் கள்’ ‘அவைகள்’ என்று ‘கள்’ விகுதி சேர்த்தும் கூறுவார்கள். இவ்வாறு பலர்பால், பலவின்பால் பெயர்ச்சொற்கள் ‘கள்’ விகுதி சேர்த்துக் கூறல் குற்றமன்று.

பாடம் 33-ல் குறிப்பாகக் கவனிக்க வேண்டியது என்னவென் றால் — ஐந்தாம் வேற்றுமையுருபு இல் என்பதற்கும் ஏழாம் வேற் றுமை உருபு இல் என்பதற்கும் வேறுபாடு உணர்த்த வேண்டும். ஏழாம் வேற்றுமை உருபு, எந்த இடத்தில், எந்த நேரத்தில் என்ற கேள்விகளுக்குப் பதில் தரும். ஆனால் ஐந்தாம் வேற்றுமையுருபு

—நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது ஆகிய பொருள்களில் வரும். எல்லைப் பொருளும், திசை, வழி, காலம், பண்பு முதலியனபற்றி வரும் என்பதை உணர்த்த வேண்டும். போல, காட்டிலும் என்ற பொருளில் வரும் இல் உருபு ஐந்தாம் வேற்றுமையே.

எட்டாம் வேற்றுமை ஏவல் வினையைக் கொண்டு முடியும் என்பதை வற்புறுத்த வேண்டும்.

(உ-ம்) பசுவே, நல்ல புல்லை மேய்.
பசுக்களே, நல்ல புல்லை மேயுங்கள்.

33-ஆம் பாடம்: "வேற்றுமை உருபுகளும் உருபுகள் சேர்ந்த உதாரண வாய்ப்பாட்டுச் சொற்களும்" என்ற தலைப்பில், உருபு ஏற்கையில் பெயர்ச் சொல்லின் ஈற்றெழுத்து அடையும் விகாரங்களைக் கருதி, 31 வகைச் சொற்களைக் காட்டியுள்ளோம். ஐந்தாம் வேற்றுமைக்கு 'இருந்து' என்ற சொல்லுருபைத்தான் வாய்ப்பாட்டிற்கு எடுத்துக் கொண்டோம். ஆரம்பத்தில் நன்கு விளங்கும் பொருட்டு ஏனைய உருபுகளை 37-ஆம் பாடத்தில் நன்கு விளக்கியுள்ளோம்.

தனிக் குறிலைச் சார்ந்து வருகிற ம், தனி நெடிலைச் சார்ந்து வருகிற ம்—உருபு ஏற்கையில் எப்படி மாறும் என்பதை விளக்குவதற்காகத்தான் முறையே 'அம்', 'தோம்' என்ற பெயர்ச் சொற்களை உதாரணங்களில் சேர்த்துள்ளோம். (அம் = அழகு, நீர், மேகம்; தோம் = குற்றம்)

எட்டாம் வேற்றுமை ஏற்காத பத்தியில் × × × × இந்த அடையாளம் போட்டிருக்கிறோம்.

(பாடம் 34) இருபத்தேழு வினைமுற்றுக்கள் :— கட, தா, படி — போன்ற ஏவல் ஒருமை வினைச் சொற்கள், நம்முன் நிற்கிற ஒருவனைப் பார்த்து ஏவுவது போலிருக்கும். இப்படிப்பட்ட சொற்களுக்கு 'வினைப்பகுதிகள்' என்று பெயர். ஒவ்வொரு பகுதியிலிருந்தும், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய 'மூன்று காலங்களிலும்', நான், நாங்கள்; நீ, நீங்கள்; அவன், அவள், அவர்கள்; அது, அவைகள் — என்ற 'ஒன்பது எழுவாய்களை' மனதில் நினைத்துக்கொண்டு சொல்லும்போது, $3 \times 9 = 27$

வினைமுற்றுக்கள் உண்டாகின்றன. ஈற்றெழுத்து நோக்கி 34 வினைப் பகுதிகள் உதாரணங்கட்குக் கையாண்டுள்ளோம்.

செயப்படுபொருள் ஏற்கக்கூடிய, 'தந்தான்', 'படிக்கிறன்' போன்ற சொற்கள் 'செயப்படுபொருள் குன்றுவினை' எனப்படும். செயப்படுபொருள் ஏற்காது 'வந்தான்', 'போகிறன்' — போன்ற சொற்கள் 'செயப்படுபொருள் குன்றியவினை' எனப்படும். ஆனல், 'கெடு', 'சாய்', 'சேர்' — என்பன போன்ற வினைச்சொற்கள் இருவகைகளையும் சேர்ந்தவை. இருவிதங்களாக 'விகற்பமாகும்'. இப்படிப்பட்டவைகளை எதிர்காலத்தில் சொல்லிப் பார்க்கலாம்; ப் என்ற இடைநிலை வந்தால், செயப்படுபொருள் குன்றுத வினையாம்; வ் என்ற இடைநிலை வந்தால் செயப்படுபொருள் குன்றிய வினையாம். செயப்படுபொருள் குன்றிய வினைப்பகுதிகளை * நட்சத்திரக் குறியிட்டுக் காட்டியுள்ளோம்.

பாடம் 35 வினை முற்றுக்களை வாக்கியங்களாக அமைத்தல்: அவன் என்ற எழுவாய்க்கு பயனிலை எவ்வாறு அமையுமோ, அதே மாதிரிதான் 'ஒருவன்', 'இவன்', 'எவன்', 'யாவன்', 'சிறுவன்', 'இராமன்' முதலிய ஆண்பாற் பெயர்ச் சொற்களுக்குப் பயனிலை அமையும். 'அவள்', 'இவள்', 'எவள்', 'ஒருத்தி', 'சிறுமி', 'சீதை' — முதலிய பெண்பாற் பெயர்ச் சொற்களுக்கு பயனிலை ஒரே மாதிரி அமையும். 'அவர்', 'இவர்', 'எவர்', 'சிறுவர்', 'பலர்', 'சிலர்', 'இராமர்' முதலிய பலர்பால் பெயர்ச் சொற்களுக்கும், மரியாதைப் பன்மைப் பெயர்ச் சொற்களுக்கும் பயனிலை ஒரே மாதிரி அமையும். ஆனல், 'அவர் வந்தார்' அல்லது 'அவர்கள் வந்தார்கள்' என்று கூற வேண்டும். 'அது', 'இது', 'எது', 'யாது' — முதலிய அஃறிணை ஒன்றன்பாற் சொற்களுக்கு பயனிலை ஒரே மாதிரி அமையும். 'அவை', 'இவை', 'எவை', 'யாவை', 'பல', 'சில' — எனும் அஃறிணைப் பலவின்பாற் சொற்களுக்கு பயனிலை ஒரே மாதிரி அமையும். 'அவை வந்தன' அல்லது 'அவைகள் வந்தன' என்று எப்படியுங் கூறலாம்.

ஒரு வினைச்சொல்லானது பேசும்பொழுதும், எழுதும் பொழுதும் முந்நூறு வகைக்கு மேற்பட்டதாக மாறுதலடையும். இந்தப் புத்தகத்தில் வினைச்சொல்லானது 27 வினை முற்றுக்களாக மாறுகிற

வித மட்டும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மற்ற மாறுதல்களையும் வாய்ப்பாடு மாதிரி காட்டி அவைகளை வாக்கியங்களில் அமைத்துக் காட்டி விட்டால், அதுவே தமிழ் இலக்கணத்தை எளிதில் நன்கு கற்கும் வழியாகும். ("தமிழ் இலக்கணத்தை எளிதில் கற்கும் வழி" என்ற பெயரால் ஒரு புத்தகம் வெளியிடப் பெறும்.)

எழுத்தொலியும், சொல்லொலியும் ஒன்றாக இருக்கும் தமிழ் வசனத்தை எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் என்று நான்கு பிரிவுகளாகப் பிரித்து, இது போன்ற புத்தகத்தின் மூலமாக எளிதாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்வதை விட்டு விட்டு எழுத்தொலியும், சொல்சொலியும் வெவ்வேறாக இருக்கும் ஆங்கில வாசகப் புத்தகங்களைத் தழுவி, குழப்பி எழுதப்பட்ட தமிழ் வாசகப் புத்தகங்கள், சர்க்கார் அங்கீகாரம் பெற்று பள்ளிகளில் புகுத்தப்பட்டு, தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பெரும் பாதகம் செய்து வருகின்றன.

கொஞ்சங் கொஞ்சமாகப் புதுச் சொற்களைச் சேர்த்து (Graded) ஆங்கில வாசகப் புத்தகங்களிலிருப்பது போல தமிழ் வாசகப் புத்தகங்கள் தேவையில்லை. ஆரம்பப் பாடசாலைகளின் சட்டப்படி 5½ வயது முடிந்த பிள்ளைகளைத் தான் முதல் வகுப்பில் சேர்க்க வேண்டும். ஆனால், 5½ வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளும் முதல் வகுப்பில் சேர்க்கப்படுகிறார்கள். இவர்களுக்கு எழுத வாசிக்கக் கற்றுக் கொடுப்பது கெடுதலாகும். 5½ வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளை இப்புத்தகப்படி, எழுத்து, சொல், சொற்றொடர் வாக்கியம் ஆகியவைகளை ஆசிரியர் சொல்லச் சொல்ல பிள்ளைகளைச் சுத்தமாகச் சொல்லும்படி மட்டும் செய்தால் போதும்.

குருகுலத்தின் மலிவான சிறந்த வெளியீடுகள்

தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி

(மூன்றாம் பதிப்பு 18 + 98 பக்கங்கள்)

தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் என்று பிரித்துக் கற்கவும், தமிழில் ஏற்படும் இரு பிழைகளாகிய குறில் — நெடில் பிழைகளையும், ன — ண ; ர — ற ; ல — ள ; ழ வரிகளின் எழுத்துக்களில் ஏற்படும் பிழைகளையும் ஏற்படாமல் செய்வதற்கு எங்கள் புத்தகத்தில் வரிசைக் கிரமமாகப் பாடங்கள் அமைத்துள்ளோம்.

நல்ல தாளில் அழகான கெட்டி அட்டையுடன்கூடிய
மேற்படி புத்தகத்தின் விலை ரூ. 0—8—0

தமிழ் 247 எழுத்துக்கள் கொண்ட அட்டை (ஐந்தாம் பதிப்பு) உச்சரிப்புப் பேதங்களை விளக்கும் படங்களுடன் ரூ. 0—1—0

சிறுவர் செய்யுட் கோவை (இரண்டாம் பதிப்பு) ரூ. 0—1—6

(ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, நறுந்தொகை மூதுரை, ஔவையார் தனிப்பாடல்கள் முதலியவைகளை மனப்பாடம் செய்வதற்குரியது)

பால குருகுல எண்சுவடி வாய்ப்பாடு (இரண்டாம் பதிப்பு) ரூ. 0—2—0

(தமிழ் முறை வாய்ப்பாடுகளும், ஆங்கில முறை வாய்ப்பாடுகளும் நிறுத்தல், முகத்தல், நீட்டல் முதலிய எல்லா அளவைகளையும் கொண்டது)

குறிப்பு :—ரூபாய் இரண்டு மணியார்டரில் அனுப்பினால்; "தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி" புத்தகங்கள் மூன்றும், 247 எழுத்து அட்டைகள் மூன்றும், வாய்ப்பாடு ஒன்றும் ரிஜிஸ்டர் தபாலிலும், அணா பன்னிரண்டு அனுப்பினால், புத்தகம் ஒன்றும், அட்டை ஒன்றும், வாய்ப்பாடு ஒன்றும் புக்போஸ்டிலும் அனுப்பப் பெறும். மொத்தமாக வாங்குகின்றவர்கள் அதிகமான கமிஷன் முதலியவைகளுக்கு எங்களுக்கு எழுதிக் கேட்க.